Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

டிச. 28, 2006 - ஜன. 03, 2007

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 693

## தமிழ்க் கூட்டமைப்பின் இந்திய விஜயமும் தமிழகத்தின் அக்கறையும்

## திருமணமாகாத யுவதிகளிடத்தில் அதிகரிக்கும் கருக்கலைப்பு!



## சிரட்டையில் தண்ணீர், கடதாசியில் உணவு, வாகரை மக்களின் அவலம்!



## அறமே வேதத்தின் கருப்பொருள்

# ஆன்மீகம்

**வேதம்** என்பதைப் புரிந்துகொண்டு அதன் உட் கருத்தையும், அது உருவாக்கப்பட்ட நோக்கத்தையும் உணர்ந்து கொள்ளாமல், எவரோ எழுதி வைத்த பாக்களை மட்டும் இசைப்பதால் வேதத்தை ஏற்படுத்தியதற்கான உண்மைத் தன்மையையும், அதன் பயனையும் அறிய முடியாது என்பதனைப் பலர் தங்கள் அனுபவரீதியாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்குள், திருமூலரின் கொள் கையானது உச்சம் பெற்றிருப்பது, போற்றுதற்குரியதே!

இதனைப் பின்வரும் செய்யுளின் மூலம் உணரக் கூடியதாகவுள்ளது.

'வேதத்தைவிட்ட அறம் இல்லை; வேதத்தின் ஒத்த தகும் அறன்; எல்லாம் உள' என்ற வரிகளின் மூலம் அறத்தை நோக்கியதே வேதம்; அதனால் அறத்தைக் காப்பீர்களாயின் வேதத்தைக் காப்பவர்களாவீர்கள் அல்லாது வேதத்தின் தன்மையை அறிய மாட்டீர்கள் எனக் கூறப்பட்டது. இதனால் அறம் நோக்கிய செயற் பாடுகளே வேதத்திற்குகந்தவை. அல்லாதன வீணே எனத் தெளியலாம்.

- என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.



## கர்த்தரை நம்புங்கள்!

"**து**ன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு. கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்."
(சங்கீதம் - 32:10)

தீய வழிகளில் சென்று, அண்டை அயலாரை நிந்தித்து, தன் வலிமையைக் காட்டி வஞ்சித்து, கேடான வழிகளில் வாழ முயற்சிப்பவன் பல வேதனைகளுக்கு ஆட்படுவான். அவன் வினையே அவனை அழிக்கும். ஆனால், கர்த்தரை நம்பியிருக்கிறவனை அவர், தம் கிருபையினால் இரட்சிப்பார். அவரது ஆசீர்வாதங்கள் அவனை முற்றிலுமாகச் சூழ்ந்து கொள்ளும்.

ஆகவே, கர்த்தரின் மகிமையை - அவர்தம் கிருபையை - நம் வாழ்வில் காண வேண்டுமானால் அதற்கு நாம் அவரைப் போற்றி, அவர் காட்டிய வழியில் செல்வோமாக.

"கர்த்தாவே! நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே, உமது கிருபை எங்கள் மேல் இருப்பதாக" - (சங்கீதம் - 33-22) என்று அவரை நோக்கி வேண்டுதல் செய்வோம். தேவனாகிய கர்த்தர் ஒவ்வொரு விநாடியும் எம்மை நோக்கிப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். அவரை நம்புங்கள்.

-ஆர்.தவமணிதேவி, வத்தளை.


## ஹஜ்ஜின் குறிக்கோள்!

**ஹஜ்ஜு**க்கு வருமாறு நீர் மனிதர்களுக்கு அறிக் கையிடும்; (அவர்கள்) கால் நடையாகவும் உம்மிடம் வரு வார்கள்; இளைத்த ஒட்டகங்களின் மீது வெகுதொலை தூரத்திலிருந்தும் (உம்மிடம்) வருவார்கள். தங்கள் பிரயோ ஜனத்தை - நாடியும் வருவார்கள். அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்த ஆடு, மாடு, ஒட்டகம் முதலியவைகளை, அவனது திருநாமத்தைக் கூறி, குறிப்பிட்ட நாட்களில் அறுப் பதற்காகவும் அங்கு - வருவார்கள். (ஆகவே அவ்வாறு அறுக்கப்பட்ட) அவைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள். ஏழைகள், தரித்திரர்கள் - முதலியவர்களுக்கும் கொடுங்கள். பின்னர் (தலைமுடி இறக்கி, நகம் தரித்து, குளித்து, தங்கள் அழுக்குகளைச் சுத்தம் செய்து கொண்டு, தங்களுடைய நேர்ச்சைகளையும் நிறைவேற்றி, புராதன ஆலயத்தையும் (இடஞ்சுற்றி) 'தவ்வா.'.ப்' செய்யுங்கள்.

(அல்குர்ஆன் - 22.27 - 29)

-முஹம்மது ஹஸனி, கல்முனை -07.

### கவிதைப் போட்டி இல.690



### பாராட்டுக்குரியது

## சமாதானப் போர்!

இத்தனை காலம்
சமாதானச் சிறையில் இருந்து
விடுதலை பெற்றதால்
நீ கூட போருக்குத்
தயாராகி விட்டாயோ?


– காந்தன் விசு,
சம்பூர் – 03.

## அவலம்!

நீ யார்? வெண்மையாக
இருக்கிறாய்!
சமாதானச் சின்னமா?
சண்டைச் சின்னமா?
இன்னும் புரியவில்லையே!

– எல்.எம். நப்லான், புத்தளம்.

# கவிதைப் போட்டி இல.693



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.01.2007.

கவிதைப் போட்டி இல.693
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## ஐயோ!

தூதுப் புறாவுக்கு
அன்று கட்டியதோ
காலில் செய்தி
சாமப் புறாவுக்கு
இன்று கட்டுவதோ
உடலெங்கும் குண்டு.

– அ. சந்தியாகோ, கண்டி.

## சமாதானப் புறா!

சமாதானப் பூக்களை
சமாதிகட்ட நினைத்தால்
சமாதானப் புறாவும்
எறிகணை ஏந்தலாம்!

– முகம்மது ஹஸனி, கல்முனை– 07.

## சேதி சொல்லு!

தூது செல்லும்
வெண்புறாவே
அரசுக்கும்
புலிகளுக்கும்
இச்சேதி சொல்லு!
சமாதானம் பற்றிப்
பேசுவதும்
சண்டையைச்
செய்வதும்
சர்வதேசத்தை
ஏமாற்றுவதும்
இன்று நேற்றல்ல
நாளையும் இப்படியே!

– கவிக்குயிலன்,
சேனையூர்.

## சந்தேகம்!?

"சொல்" பேச்சு...
ஒரு புறம்!
"ஷெல்" வீச்சு
மறு புறம்!
எப்படி வரும்
சமாதானம்!

– கோட்டைமுனை ராஸிம்,
பதுளை.

## வேசம்!

சமாதானத்தை
விலை
பேசியவர்கள்
வெண்புறாவை
அடகு வைத்து
விட்டார்கள்.
அழிவாயுதங்களை
அதன்
இறக்கையில்
கட்டி விட்டு
எங்கோ தூது
விடுகிறார்கள்?

– ஏ.ஆர்.எம். நதார்,
ஜின்னா நகர்.




## மாற்றம்!

இலக்குத் தவறுகிறது
இலச்சினையும் மாறுகிறது
விண்ணில்
வெடிகுண்டுப் புறா
மண்ணில்
மனிதர்கள் கவனம்!

– எம். சி. கலீல்,
கல்முனை – 05.

## சமாதானத்துக்கு ஆபத்தா?

சமாதான
(வெண்) புறா
யுத்த மார்க்கமாகப்
பயணிப்பது - இனி
நாட்டில்
சமாதானத்துக்கு
ஆபத்து - என்பதா
அர்த்தம்?

– காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா – 05.

## பரலோகம்

வக்கிரமும்
வன்முறையும்
மோதி
முடியாத போரில்
மடிந்த
சமாதானப் புறாவின்
ஆன்மா
பரமனை நோக்கிப்
பரலோகம்
போகின்றது.

- சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

# உங்கள் பக்கம்

## கல்முனை மாநகர மக்கள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

**க**டந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிப்பகுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் நாட்டின் பல இடங்களிலும் மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து, அகதிகளாக அகதி முகாம்களிலும், பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். அங்கு போதிய அடிப்படை வசதியின்மையால் மக்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகின்றார்கள். இருப்பினும், கல்முனை மாநகரத்தில் இன்றும் இதே நிலையே தொடர்கிறது.

ஆனால், சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிகளில் அம்மக்களின் வீட்டுத் தேவை நிறைவேற்றப்பட்டு அவர்கள் மனநிறைவோடும், நிம்மதியோடும் வாழ்கின்றனர். இன்னும் சில பகுதிகளில் அம்மக்களின் வீட்டுத்தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு அதற்கான அனைத்து வேலைகளும் முடிவுறும் தறுவாயில் காணப்படுகிறது. ஆனால், ஏறத்தாழ இரண்டு வருடங்களாகியும் கல்முனை மாநகர மக்களுக்கான வீட்டுவேலைகள் ஆரம்பிக்கப்படாது இழுபறிநிலையிலேயே காணப்படுகிறது.

எனவே, இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, அகதிகளாகியுள்ள மக்களின் வீட்டுப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உரிய அமைச்சர்கள், அதிகாரிகள் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

-எம்.ராம், கல்முனை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


## தமிழினத்தின் குரல் நீ!

தினமுரசே தமிழ் முரசம் நீ
தாரணியை வலம் வரும் நீ
தமிழினத்தின் குரலன்றோ
வளமுற உன் தமிழ்த்தொண்டு
வாழ்த்துக்கள்.

பக்கங்கள் தோறும் உன்
பக்கச்சார்பற்ற நிலை
முத்தான கருத்துக்கோர்
முன்னெடுப்பு.

நாலாறு பக்கங்கள்
நல்ல
பல சேதிகளை
வாசகர் எமக்களித்து
வீறு நடைபோடுகின்றாய்
வாழ்க நின் தமிழ்த் தொண்டு
வளர்க உன் நற்பணிகள்.

–என்.புண்ணியம், திருகோணமலை.

# வாசகர் சாலை

## அற்புதனின் ஆக்கப்பணி தொட்டுத் தொடரட்டும்!

அற்புதனின்
சொற்திறனில்
எத்திசையும்
சுத்திச் சுழன்று
புகழ் பரப்பி வந்த
முரசே!

2007இல் மேலும்
ஒருபடி உயர
பல ஆக்கங்களைச்
சேர்த்துக் கொள்ளவும்!

அற்புதன் மறைந்தாலும்
அவர் விட்டுச் சென்ற பணி
தொட்டுத் தொடர
வண்ணத் தமிழில்
எண்ணக் குவியல்களை
எழுதித் தள்ளுங்கள்!

மேலும் ஒரு பக்கத்தை
அதிகரித்து
செய்திகளைத்
தேடித்தாருங்கள்!
ஆன்மீகம் அவசியமே
அதுபோல அசத்தல்களும்
நன்று! நன்று!
எந்தப் பக்கமானாலும்
உண்மைகளைப்
பக்கம் சாராமல்
தக்கவையுங்கள்!

–கவிக்குயிலன், சேனையூர் – 06.

## உன் பக்கம்!

பல்சுவைப் பக்கங்களையும்
தன்னகத்தே தாங்கிவரும்
தினமுரசில் மும்மதங்களையும்
முக்கியப்படுத்தும் ஆன்மீகம்
ஒரு பக்கம், அரசியல் அலசல்கள்
ஒரு பக்கம், சினிமாப் பிரியர்களை
மகிழ்விக்க சினிவிசிட்
இரு பக்கம், கவிதைகளுக்கு
ஒரு பக்கம், சிறுகதைகளுக்காக
ஒரு பக்கம், சிந்தனைக்
கட்டுரைகளுக்காக ஒரு பக்கம்
ஆசிரியரின் அபிப்பிராயங்களுக்காக
ஒருபக்கம், பாப்பா முரசு
ஒரு பக்கம், கேள்வி பதில் ஒரு
பக்கம் இவை அனைத்தையும்
அள்ளித்தரும் தினமுரசே
நாம் உன் பக்கம்!

–முஹம்மது ஹஸனி, கல்முனை – 07.

# இரு வருடங்கள் கடந்தும்
## சுனாமி நிவாரணம் வெறும் கடதாசியில்!

இலங்கையின் 12 கரையோர மாவட்டங்களை சுனாமி கடற்பேரலை தாக்கி இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிம்மதியும் நிவாரணமும் போதியளவு கிட்டவில்லையென்று சம்பந்தப்பட்டவர்களும் அரசியல் வாதிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாவட்டங்களே பெரும்பாலும் சுனாமியால் பாதிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களே பெரிதும் பாதிக்கப்பட்டவையாகும். வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 19,722 வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க இணக்கம் தெரிவித்திருந்தபோதிலும் இதுவரை 3,752 வீடுகளே நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அம்பாறை கரையோர மாவட்டத்தில் சுமார் 4,700க்கு மேற்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டபோதிலும் 451 வீடுகளே நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

இதே நிலைமைதான் தெற்கிலும். தெற்கில் 17,452 வீடுகளைக் கட்டிக்கொடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டபோதிலும் 7,452 வீடுகளே கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சுனாமிப் பேரழிவுக்கு இலங்கை 35000த்திற்கு மேற்பட்ட மக்களைக் காவு கொடுத்தது. 5000த்துக்கு மேற்பட்டோர் இன்னமும் காணாமல் போனோர் பட்டியலில் இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மாணவர்களில் 30 சதவீதமானவர்கள் இன்னமும் பாடசாலைகளுக்குச் செல்லும் வசதியின்றி தவிக்கின்றனரென்று கூறுகிறது உத்தியோகபூர்வ புள்ளி விபரமொன்று.



சுனாமியின் சுவடு...

# வன்செயல்கள் ஓய்ந்து மக்களுக்கு நிம்மதியான வாழ்வு தேவை
### -அமைச்சர் டக்ளஸ்

"வன்முறையை வரிந்து கட்டிக்கொண்டு புலிகள் நடத்தும் வன்செயல்கள், தாக்குதல்களின் விளைவாக மக்கள் அன்றாடம் படுகொலைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இடம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இம் மக்களுக்கு அடைக்கலம் வழங்க ஓரிடம், அடுத்த வேளை உணவு என்று அடுத்த வினாடியை எதிர்கொள்ளப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு எந்த ஒரு பண்டிகையும் அதற்கேயுரிய மகிழ்ச்சியுடனும் ஆரவாரங்களுடனும் கொண்டாட முடியாத நிலையே நிலவுகிறது. இந்த நிலை மாற்றம் பெற்று மக்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வுக்குத் திரும்பும் நாளே அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் நாளாகும்." இவ்வாறு சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நத்தார் பண்டிகைக் கால குதூகலத்தை எதிர்கொள்ளும் மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தாலும், சொந்த இருப்பிடங்களை இழந்து, இடம் பெயர்ந்து அநாதரவாகத் தவிக்கும் மக்களுக்காகக் கவலை கொள்ளாமலும் இருக்கமுடியவில்லை என்றும் அமைச்சர் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# சர்ச்சைக்குரிய அரசியல்வாதி நவரத்தினம்

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் சர்ச்கைக்குரிய தமிழ் அரசியல்வாதியுமான முன்னாள் ஊர்காவற்றுறை எம்.பி., வி.நவரத்தினத்தின் இறுதிக்கிரியைகள் கனடா மொன்ட்ரியலில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றன. இவரது இறுதிக் கிரியைகளில் பெருமளவு மக்கள் பங்கேற்கவில்லையென்று அவரது புதல்வர்களில் ஒருவரான ஜெகன் மோகன் தெரிவித்தார். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், ஆளடையாள அட்டை சட்டம் என்பவற்றுக்கு இவர் எதிர்ப்புத் தெரிவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1969ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியை விட்டு விலகிய இவர், தமிழர் சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்தார். 1970ஆம் ஆண்டு தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட இவர், பின்னர் அரசியலிலிருந்து காணாமல் போய்விட்டார். தமிழர்களின் நாகரிகம் நைல் நதிக்கரையிலிருந்து ஆரம்பித்ததாக இவர் எழுதிய "தமிழர்களின் நாகரிகம் - சொல்லப்படாத வரலாறு" என்ற ஆங்கில நூலும் அவரைப் போலவே பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

# பிளவுபடும் நிலையில் வைகோவின் கட்சி

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவுக்கு எதிராக மான நஷ்டஈட்டு வழக்கு தாக்கல் செய்வது குறித்து தி.மு.க. ஆராய்ந்து வருவதாக தி.மு.க.வின் பொருளாளரும் மாநில அமைச்சருமான ஆர்க்காடு வீராசாமி தெரிவித்தார். மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழக அதிருப்தியாளர்களான செஞ்சி ராமச்சந்திரன், எல்.கணேசன் ஆகியோர் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தூண்டுதலின் பேரில் ம.தி.மு.க.வுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாக அண்மையில் வைகோ குற்றஞ் சாட்டியிருந்தார். தேனீயில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்களின் கூட்டத்தில் இந்த இருவரும் கலந்துகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரும் கட்சியிலிருந்து வெளியேற்றப்படாதவாறு உச்ச நீதிமன்றத்தின் தடையுத்தரவைப் பெற்றிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகரை மக்களை வாழ விடுங்கள்

யுத்தச் சூழலால் அவதியுறும் வாகரை மக்கள் தமது சுயவிருப்பின் பேரில் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுமதியளிக்க வேண்டும். அங்கு யுத்தச் சூழ்நிலையை உருவாக்கிய புலிகள், மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மக்கள் தமிழீழம் கோரவில்லை. நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றனர் என்று வாகரை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார். காட்டுப் பாதைகளுக்கூடாகத் தப்பிச் செல்லும் போது தமது சொந்த பந்தங்களை இழந்து மக்கள் பெரும் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர். யுத்தத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் இந்த மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

# யாழ். ஆயரின் நத்தார் செய்தி

கடவுள் மனிதராக இறங்கி வந்தார். மனிதன் கடவுளாக மாறுவான் என்ற நோக்கிலேயே கடவுள் மனிதராக வந்தார். சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டி எழுப்புவதற்காகவே இயேசுநாதர் உலகுக்கு வந்தார். ஆனால் மனிதர்கள் தொடர்ந்தும் யுத்தம் செய்து உலகத்திலும் சமூகத்திலும் பிரிவினையையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறார்கள் என்று யாழ்.ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் விடுத்துள்ள நத்தார் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். எம்மைச் சுற்றி யுத்தம், குழப்பம், மரணம், பேரழிவு, பஞ்சம், பட்டினி ஆகியவற்றிற்கு மத்தியில் நாம் மீண்டும் நத்தார் பண்டிகையை எதிர்கொள்கிறோம். கடைகள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. பொருட்கள் தாராளமாகக் காணப்படுகின்றன. கடைகளுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் நத்தார் தாத்தாவின் படங்கள் இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் மகிழ்ச்சிகரமான உணர்வை ஊட்டுகின்றன என்றும் அவர் அந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் கூட்டமைப்பின் இந்திய விஜயம் பிசுபிசுப்பு!

தமிழகத்தின் புலி ஆதரவுக் கட்சியான வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரைக் கெடுப்பதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி முயற்சி செய்கிறாரென்று குற்றம் சாட்டி வைகோ பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும், சோனியா காந்திக்கும் கடிதம் எழுதியிருக்கும் தருணத்தில், கருணாநிதியின் ஏற்பாட்டின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு மன்மோகன் சிங்கைச் சந்தித்தமை வெறும் சம்பிரதாயப்பூர்வ சந்திப்பேயென்று புதுடில்லி அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான நரேன் சர்மா இச் சந்திப்பு நிகழ்ந்த சூழ்நிலை, நோக்கங்கள் குறித்து விளக்குகையில் கீழ்க்கண்டவாறு கூறினார்.

புலிகள் இயக்கத்தின் முன்னணி ஆதரவாளராகத் தன்னைக் காட்டிக்கொள்பவர் வைகோ. வைகோ, தி.மு.க.வில் அங்கம் வகித்த காலத்திலேயே தலைவர் கருணாநிதிக்குத் தெரியாமல் களவாகப் படகு மூலம் வன்னிக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்துப் பேசியவர். இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு, தீர்வு காண உதவுமாறு கலைஞர் கருணாநிதியை பிரதமர் ராஜிவ் காந்தி கேட்டுக்கொண்ட வேளையிலேயே தனது முயற்சியைக் குழப்பியடித்தவர் வைகோவென்று அண்மையில் கருணாநிதி குற்றம் சாட்டியமை குறிப்பிடத்தக்கது. வைகோவுக்கும் - கருணாநிதிக்குமிடையிலான மோதல் உயர் மட்டத்துக்குச் சென்றிருக்கும் தருணத்திலேயே கருணாநிதி இந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறார். கடந்த ஆகஸ்ட் மாதம் புலிகள் இயக்கம், தாக்குதல்களை ஆரம்பித்த பின்னர் இந்தியாவுக்குச் சென்ற இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை பிரதமர் மன்மோகன்சிங்கும், தமிழக முதல்வர் கருணாநிதியும் சந்திக்க மறுத்தமை கவனத்திற்குரியது. அதுமட்டுமல்ல, இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடப் போவதில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளிப்படையாக கூறியிருப்பதானது, புலிகளினதும் அவர்களின் முகவரமைப்பான தமிழ்க் கூட்டமைப்பிற்கும் முகத்தில் ஓங்கி அறைந்ததுபோல் ஓர் செய்தியைச் சொல்லியிருக்கிறது. ஏ-9 பாதைத் தடை, தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை, மனிதாபிமானப் பிரச்சினை என்றெல்லாம் பல விடயங்களைக் கூட்டமைப்பினர் எடுத்துக் கூறியபோது, அதனை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த மன்மோகன் சிங், வன்செயல்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கிறது. தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் சார்பில் பேச வரும் எந்த அமைப்போடும் இந்தியத் தலைமை ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல் எதனையும் நடத்தப்போவதில்லை.

1987ஆம் ஆண்டு ராஜிவ் காந்தி, பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர், கிட்டத்தட்ட 20 வருடங்கள் கடந்த நிலையில் இப்போதுதான் புலிச்சார்பு அமைப்பொன்றின் பிரதிநிதிகளை இந்தியப் பிரதமரொருவர் சந்தித்துப் பேசியிருக்கிறார். சர்வ கட்சி மாநாட்டின் நிபுணர்கள் குழு சமர்ப்பித்த யோசனைகள் குறித்து கருத்துத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி., இலங்கை அரசுக்கு அரசியல் தீர்வில் நாட்டமில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அப்போது எம்.கே.நாராயணன், "நீங்கள் அரசியல் தீர்வு யோசனைகள் எவற்றையாவது முன்வைத்துள்ளீர்களா?" என்று கேள்வி எழுப்பினார். தனிநாட்டுக் கோரிக்கையை இந்தியா என்றுமே ஆதரிக்கப் போவதில்லையென்று குறிப்பிட்ட இந்தியத் தரப்பினர், இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை பேணப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினர். சகல இனங்களினதும் அபிலாஷைகள் நிறைவேற்றப்படக்கூடிய அரசியல் தீர்வே அவசியமானதென்றும் கூட்டமைப்பு எம்.பி.களுக்கு இந்தியத் தரப்பு இடித்துரைத்தது.

# யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சமூக நலப் பணிகளில் ஈடுபாடு

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு நிவாரணத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார். அண்மைய நெருக்கடிகளால் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்தக் கஷ்டப்படும் மக்கள் பிரிவைச் சேர்ந்த பலர், அவ்வப்போது அமைச்சரைச் சந்தித்து நிவாரண உதவிகளைப் பெற்று வருகின்றனர். யாழ்ப்பாணம் நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்களின் பிரதிநிதிகளின் குழுவொன்று கடந்த வாரம் அமைச்சின் யாழ்.அலுவலகத்தில், அமைச்சரைச் சந்தித்து தமது பல்வேறு பிரச்சினை பற்றி எடுத்து விளக்கியது.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்த வீடுகள் போர்ச் சூழலால் பெரிதும் சீரழிந்திருக்கின்றன. இவற்றைப் புனரமைத்து, உரிய உறுதிப் பத்திரங்களை வழங்குமாறு குடியிருப்பாளர்கள் விடுத்த கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக் கொண்டார். இதேவேளை கணவனால் கைவிடப்பட்ட மற்றும் கணவன்மார்களை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான சுயதொழில் முயற்சிக்கான வாய்ப்புக்களையும் அமைச்சர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், சாவகச்சேரி பிரதேசச் செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இளம் பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. முதியோர், வலது குறைந்தோர் மற்றும் மருத்துவ உதவி தேவைப்படுவோர் ஆகியோருக்கு உதவி வழங்குவதற்கான முன் தயாரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். வகுப்புத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த அமைச்சர், அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து தேவையான உதவிகளை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதேவேளை, கண்பார்வை குறைந்தவர்களுக்கான மருத்துவ வசதிகள், மூக்குக் கண்ணாடிகள், வில்லைகள் ஆகியவை எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் வழங்கப் படவிருக்கின்றன. இது தொடர்பான உதவிகள் தேவைப்படுவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.அலுவலகத்தில் தம்மைப் பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். இதேவேளை உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளிலும்

# கிழக்கிலங்கை கல்விச் சமூகம் கோரிக்கை

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத்துக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தலை அடுத்தே அவர் பாதுகாப்பின் நிமித்தம் கொழும்புக்குச் சென்றிருந்தார். அவரைக் கடத்தியவர்கள் யாரென எமக்குத் தெரிந்தும் கூட பாதுகாப்பின் நிமித்தம் அவர்களை யாரென எம்மால் இனங்காட்ட முடியவில்லை. அவரைக் கடத்தியவர்கள் யாராக இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுவிக்குமாறு கிழக்கிலங்கை கல்விச் சமூகத்தின் பேரால் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு கிழக்கிலங்கை கல்விச் சமூகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கோரியுள்ளது.

தமிழ் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட மோதல் நிலை காரணமாக சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்விமான்கள் தேவையற்ற விதத்தில் பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். சமூகத்தின் உயிர்நாடியாக சமூக வளர்ச்சிக்கு உதவ வேண்டியவர்களாக விளங்கும் புத்தி ஜீவிகளையும் கல்விமான்களையும் களையெடுப்பது கேடுகெட்ட காடைத்தனம். மாற்றுக்கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக கல்விமான்களை அழித்தொழிக்கும் நடவடிக்கை தமிழ் சமூகத்தில் இனியும் தொடருமேயானால் ஒரு காட்டுமிராண்டிச் சமூகமாக தமிழ் மக்களை ஏனைய இனத்தவர்கள் பார்க்க வேண்டிய நிலையே ஏற்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தொடர்ச்சியான வன்செயல் நடவடிக்கைகள் மூலம் மூட வைத்து தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீர்குலைத்த அதே சக்திகள்தான் இந்தப் பேராசிரியர் ரவீந்திரநாத்தை கடத்திச் சென்றிருக்கின்றனர்.

# யாழ்ப்பாணத்துக்கு மின் பிறப்பாக்கிகள்

யாழ்ப்பாணத்துக்கு மூன்று மெகாவாட்ஸ் சக்தி கொண்ட இரண்டு மின் பிறப்பாக்கிகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவுள்ளதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். பண்டிகைக் காலத்தில் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படும் நேரத்தில் பயன் படுத்தப் படுவதற்காகவே இவை கொண்டு வரப்படவுள்ளன என்றும் அவர் கூறினார். இதேவேளை போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கையாள்வதற்காக ஐந்து பஸ்களை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் புத்தாண்டுக்கு முன்னதாக அவை யாழ்ப்பாணம் வந்து சேருமென்றும் அவர் கூறினார். இதேவேளை ஆயிரம் பொதிகள் கொண்ட பாடப் புத்தகங்கள் கப்பல் மூலம் கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## துயரம் துடைக்கட்டும் பிறக்கும் புது வருடம்!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

நத்தார், ஹஜ்ஜு ப் பெருநாட்களைக் கொண்டாடும் `முரசு' வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள். மக்கள் வாழ்ந்த பல கிராமங்கள் மனித நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. வீடு, வாசல்கள் பாழடைந்து போய் ஆடு, மாடுகளும், தெரு நாய்களும் தங்கி மலம் கழிக்கும் இடமாகியுள்ளது. இந்தியாவிலும், இலங்கையிலுமாக மக்கள் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் முகங்களில் பயப்பீதி நிறைந்து கிடக்கின்றது. மாற்று உடை கூட இல்லாத நிலையில் புத்தாடை அணிந்து, இனிப்புப் பரிமாறி, உறவுகளுடன் மகிழ்ந்து வாழ்ந்த காலங்கள் வெறும் நினைவுகளாக மட்டுமே இருக்கின்றன. இன்றைய அவலமான வாழ்வில் அது சாத்தியமல்ல என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரின் துயரமும் நெஞ்சை உருக வைக்கிறது.

இதே போல், அநேகமான வீடுகளில் சுனாமியில் உறவுகளைப் பறிகொடுத்த துக்க நினைவுகள் பரவிக் கிடக்கின்றன. இரண்டு ஆண்டுகளாகின்றன - கூட இருந்த உறவுகளைக் கண் முன்னிலையிலேயே கடல் காவு கொண்ட காட்சி, கண்ணை விட்டு மறைய மறுக்கிறது. யாருக்காக அழுவது, எதற்காக அழுவது என்பது தெரியவில்லை. ஆனால், எங்கள் மக்களின் வாழ்வில் மிச்சமிருப்பது அழுகை மட்டும்தான். அதற்கு மட்டுந்தான் ஓரளவு உரிமையும் இருக்கிறது.

இதுவரை சுமார் 24,000 மக்கள் வாகரையிலிருந்து இடம் பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருக்கிறார்கள். இன்னும் 15,000 பேர் அங்கு இருக்கிறார்கள் என்றும், அவர்களும் வந்துவிடுவார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில், கிழக்கில் தாக்குதல்கள் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன.

அதேபோல் வடக்கில் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளும், விலையேற்றங்களும் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறியக்கிடைக்கின்ற போதும், தனியார் வர்த்தகர்களுக்கு புலிகளால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள நிலையில், அரசு பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. எனினும், மக்களின் தேவை மிக அதிகளவில் இருப்பதையும் மறுத்துவிட முடியாது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்காகப் பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை மக்கள் மத்தியில் நெருக்கடியான நேரத்திலும் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. கணவனை இழந்த பெண்களுக்கு உதவி, மீனவர்களுக்கு வீடு, 24 மணி நேர மின் விநியோகம், அவசர மருத்துவ உதவிகள், சீரான பொருள் விநியோகம் என்பதற்கப்பாலும் அரச உயர் மட்ட அதிகாரிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து யாழ். நிலைமையில் மாற்றங்களைக் கொண்டு வர எடுத்துக் கொண்ட முயற்சியும் பாராட்டுக்குரியது. விநியோக மார்க்கம் மூடப்பட்ட நிலையிலும், இயல்பு வாழ்வை சீர்குலைக்கும் சக்திகளினால் நடத்தப்படும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் என குடாநாடு ஸ்தம்பித்துள்ள நிலையில், உடனடியாக மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது என்றபோதும் தன்னாலான அனைத்து முயற்சிகளுக்கூடாகவும் மெல்ல மெல்ல மாற்றங்களை ஏற்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயல்வதும், அதற்கு அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குவதும் யாழ் மக்கள் மத்தியில் இயல்பு நிலை உருவாகும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் புதுவருடப் பிறப்பு சுமுகமான வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.


■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# தமிழ்க் கூட்டமைப்பின் இந்திய விஜயமும் தமிழகத்தின் அக்கறையும்

தமிழ் நாடு ஸ்ரீ பெரம்புதூரில் அமைந்துள்ள ராஜிவ் காந்தி ஞாபகார்த்த தூபி.



**நான்கு** மாதங்களுக்கு முன்னர் அழையா விருந்தாளிகளாகச் சென்னைக்கும் புதுடில்லிக்கும் திடீர் விஜயங்களை மேற்கொண்டுவிட்டு, இலங்கைக்கு வெறுங்கையோடு திரும்பியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள். கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி.தலைமையில் அப்போது சென்றிருந்த கூட்டமைப்பினர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியையும் சந்திக்க எடுத்த பகீரத முயற்சிகள் படுதோல்வியிலேயே முடிவுற்றன. ஒரு மாதத்துக்கு மேலாக அப்போது இந்தியாவில் தங்கியிருந்த தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் குழு வைகோ, சு.ப.வீரபாண்டியன், பழ. நெடுமாறன் மற்றும் புலி இயக்க ஆதரவுத் தலைவர்களையும் தமிழக மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தரான வரதராஜனையும் சந்தித்துப் பேசினர். அத்துடன் பாதுகாப்பமைச்சின் ஆலோசகர் எம்.கே. நாராயணனையும் இந்திய வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனனையும் சந்தித்துப் பேசினர்.

அப்போதைய விஜயத்தின்போது தமிழக் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேச நேரம் ஒதுக்கித் தருமாறு கூட்டமைப்பினர் கேட்டதாகவும், ஆனால் தமக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையென்றும் இரா.சம்பந்தன் எம்.பி., பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். "உங்களைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழ்க் கூட்டமைப்பினர் உங்களிடம் கேட்டார்களா?" என்று பி.பி.ஸி. தமிழோசையின் செய்தியாளர், கலைஞர் கருணாநிதியைக் கேட்டபோது, "வெறும் ஜால்சாப்" என்று தமிழக முதல்வர் பதிலளித்தார். இதனைப் போன்றே பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திக்கும் நோக்கில் புதுடில்லி சென்ற கூட்டமைப்பு எம்.பி.க்கள் குழுவுக்கு இறுதிவரை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டவில்லை.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் முதலாவது எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன். புலிகளே இப் படுகொலையைத் திட்டமிட்டு மேற்கொண்டனரென்று நிரூபிக்கப்பட்டது. இதனையடுத்து புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டது. இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் முகவர்களாகச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்கள் குழுவைச் சந்திக்க இந்தியத் தலைவர்கள் மறுத்தமை ஒன்றும் புதுமையான விடயமல்ல. இந்திய மத்திய அரசின் கொள்கைதான், தமிழக மாநில அரசின் கொள்கையுமென்று அப்போது தெரிவித்த தமிழக முதல்வர் கருணாநிதி, தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திக்காமல் தட்டிக் கழித்தமைக்கு வேறு காரணங்கள் இருக்க முடியாது. பாதுகாப்பு, வெளிவிவகாரம் மற்றும் கேந்திர முக்கியத்துவமிக்க விடயங்களில் இந்திய மத்திய அரசின் கொள்கைகளுக்கும் நிலைப்பாட்டுக்குமெதிராகத் தமிழக மாநில அரசு போகத் துணியாது என்பதனையே இது எடுத்துக் காட்டுகிறது.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்குமிடையில் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, வரலாற்றுத் தொடர்புகள் நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன. இதனையொரு தொப்புள் கொடி உறவென்று கூடக் கூறலாம். மலையகத்தில் வாழும் பெருந்தோட்டத் தொழில் துறைத் தொழிலாளர்களும் இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வந்து குடியேறிய தமிழக வம்சாவளியினரே. கொழும்பு, கொச்சிக்கடையில் வாழ்ந்து வரும் பெரும்பாலான தமிழ் மக்களும் தமிழகத்தின் பரவ இன மக்களின் வம்சாவளியினரே. இதனால்தான் 1983ஆம் ஆண்டின் ஆடி இன சங்காரத்தை எதிர்த்து முழுத் தமிழகமே கொதித்தெழுந்தது. ஆடிக் கலவரத்தையடுத்து அகதிகளாகச் சென்ற இலட்சக்கணக்கான மக்களை தமிழக அரசும் மக்களும் இரு கரம் நீட்டி வரவேற்று வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு சகல திராவிடக் கட்சிகளும் தலைவர்களும் ஆதரவும் அளப்பரிய உதவிகளும் செய்த காலமொன்றுண்டு. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னாள் இந்தியப் பிரதமர்களான இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகளும் அளப்பரியன. 1991ஆம் ஆண்டு தமிழக மண்ணில் வைத்து ராஜீவ் காந்தியைப் புலிகள் தற்கொலைக் குண்டுதாரி மூலம் கொன்றமை, நிலைமைகளைத் தலைகீழாக மாற்றியது. இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் சந்தேகப் பிரஜைகளாகப் பார்க்கப் பட்டார்கள். இந்திய மத்திய அரசு மட்டுமல்ல, தமிழக அரசுகளும் தமிழக மக்களும் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினையிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். புலிகளின் நடவடிக்கை காரணமாக தமிழகத்துக்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்கிடையிலான தொப்புள் கொடி உறவும் அறுத்தெரியப்பட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கெதிராக ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுடன் இணைந்து புலிகள் இயக்கம் செயற்பட்டது. அது மட்டுமல்ல, 1400 இந்தியப் படையினரை இந்த மண்ணுக்கு இரையாக்கிவிட்டு, இந்தியப் படை பின்வாங்கிக் கொண்டது. இலங்கை விவகாரத்தில் கையைச் சுட்டுக்கொண்ட இந்தியா, கடந்த 15 வருடங்களாக வெறும் பார்வையாளராகவே ஒதுங்கிக் கொண்டுவிட்டது.

*கடைசியாகப் புலிகளை அல்லது புலிகளின்* முகவர்களைச் சந்தித்த கடைசிப் பிரதமர் ராஜீவ் காந்திதான். இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னர் ஒரு நள்ளிரவு வேளையில் புலித் தலைவர் பிரபாகரனை, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்துப் பேசினார். அதற்கான விலையை நான்கு வருடங்கள் கழித்து ராஜீவ் காந்தி வட்டியும் முதலுமாகச் செலுத்திக் கொண்டார். ராஜீவ் காந்திக்குப் பின்னர் இந்திய மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏழு பிரதமர்கள் கையேற்றிருக்கிறார்கள். இவர்களில் தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கைத் தவிர வேறு எவருமே புலிகளை மட்டுமல்ல, புலிகளின் முகவர்களைக் கூடச் சந்திக்க முன்வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திக்க மறுத்த இந்தியத் தலைவர்கள் தற்போது சந்தித்தமைக்குக் காரணங்கள் இருக்கின்றன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் படிப்படியாக மீறியவர்களும், ஆகஸ்ட் மாதம் பதினொராம் திகதி தாக்குதலின் மூலம் படையினரை உசுப்பி விட்டவர்களும் புலிகள் தானென்பது இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரிந்த உண்மைதான். இராணுவத் தளபதி, இராணுவ உயரதிகாரிகள், பாதுகாப்பமைச்சுச் செயலாளர் மீதெல்லாம் தாக்குதல்கள் நடத்தி, படையினரின் பதில் தாக்குதல்களுக்கு வழிவகுத்தன் மூலம் அப்பாவி மக்களைத் துயரத்தின் சுமைதாங்கிகளாக மாற்றியவர்களும் புலிகள்தான். படையினரின் பதிலடிகள் பல அப்பாவி மக்களையும் பாதித்திருக்கின்றனவென்ற உண்மையை மறுக்க முடியாது. ஏ-9 பாதைத் தடைக்கும், கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல விடாமல் தடுத்தமைக்கும் புலிகளே மூல காரணம். உணவு சம்பந்தப்பட்ட ஒரு மனிதாபிமானப் பிரச்சினை, தமிழகத் தலைவர்களின் இதயங்களைத் தட்டியிருக்கிறதென்பதையும் மறுக்க முடியாது. இந்த நிலையில்தான் இந்தியத் தலையீட்டை சர்வதேச சமூகம் மட்டுமல்ல, இலங்கைத் தரப்புகளும் கோரி நின்றன.

இலங்கை விவகாரத்தை இந்தியா ஓரக் கண்ணால் பார்க்கத் தொடங்கியிருக்கிறதென்று மட்டுமே கூற முடியும். தமிழக முதல்வரின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்தியப் பிரதமர் தமிழ்க் கூட்டமைப்பினரைச் சந்தித்திருக்கிறார். இந்திய மத்திய அரசில் 38 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தி.மு.க. கூட்டணியின் அழுத்தத்துக்கு இந்தியா தலை சாய்த்திருக்கிறதென்று மட்டுமே கூறமுடியும். இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடப் போவதில்லையென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி மிகத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். அதுவும் புதுடில்லியில் தமிழ்க் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய தருணத்தில் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்திய அரசின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்திரா காந்தி காலத்திலிருந்தே இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தி வரும் இந்தியா, பிரபாகரன் தனிநாட்டு யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய பின்னர், நாடு பிரிவினையைப் பார்த்துக் கொண்டிருக்குமென நினைப்பது முட்டாள்தனம். இலங்கையில் பிரிவினைச் சக்திகள் வளர்ச்சி பெற்றால், அது தமிழகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துமென்பது இந்தியாவுக்குப் புரியாத தொன்றல்ல. இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் நியாயமான தீர்வு காணக் கூடிய அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமென்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்திருக்கிறார்.

இது வன்செயல்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முனையும் புலிகள் இயக்கத்துக்கும் அவர்களின் முகவரமைப்பான தமிழ்க் கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்டிருக்கும் செய்தி என்பதே உண்மையாகும். இதேவேளை அரசியல் தீர்வை முன்னெடுப்பதன் *மூலம் மட்டுமே இலங்கை இனப்பிரச்சினைக்குத்* தீர்வுகாண முடியுமென்ற செய்தியையும் இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு விடுத்துள்ளதென்றே கூற வேண்டும். புலிகளால் படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியைச் சந்திக்கக் கூட்டமைப்பினர் எடுத்த பகீரத முயற்சி, வெறும் கானல் நீராகிப் போனதன் காரணம் என்ன? சோனியா காந்திக்கு வேறு அலுவல்கள் இருந்ததால், தமிழ்க் கூட்டமைப்பினரைச் சந்திக்க முடியவில்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லையென்பது சோனியா வுக்கும் தெரியுந்தானே.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## ஊரிலிருந்து....



*கிறிஸ்மஸ், ஹஜ், புதுவருஷம் எண்டு தொடர்ச்சியாகப் பண்டிகைகளாக வந்தாலும் முகத்திலை சந்தோஷத்தைக் காணாமல் இருக்கிற நிலைமைதான் இண்டைக்கு இருக்கு.*

*யுத்தம் தந்த இழப்புகளும், வேதனைகளும் எண்டு திரும்புற பக்கமெல்லாம் துன்பமாகக் கிடக்கு. ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொள்ளக்கூட முடியாமல் பாரபட்சமில்லாமல் துயரம் எல்லாரையும் சூழ்ந்திருக்கு. என்ன செய்யிறது. அழுது புலம்பி இந்த வாழ்க்கையை வாழவேண்டிய தலைவிதி நமக்கு எண்டு நினைச்சுக் கொண்டு இருக்க வேண்டியதுதான். தை பிறந்தால் வழி பிறக்கும் எண்டுவினம். உப்பிடி பல தைகளைப் பார்த்துப் போட்டம். இந்தத் தையிலாவது வழி பிறக்குதோ எண்டு பார்ப்பம்.*

# சிரட்டையில் தண்ணீர் கடதாசியில் உணவு
# வாகரை மக்களின் அவலம்

**வாகரை**, கதிரவெளிப் பகுதிகளிலிருந்து இதுவரை இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான மக்கள் மட்டக்களப்பு மாவட்ட இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகை தந்துள்ளனர். இவ்வாறு வந்த மக்கள், சண்டை ஒன்று நடைபெறும் என்ற முன் அறிவித்தல் கிடைக்கப்பெற்று இடம் பெயரவோ அல்லது சொந்த இருப்பிடங்களில் சொகுசாக வாழ்ந்து எடுக்கக்கூடிய பொருட்களை கையில் எடுத்துக்கொண்டு இடம்பெயரவோ இல்லை.

ஏற்கனவே தமது சொந்த இடங்களிலிருந்து உயிரை மட்டும் காப்பாற்றிக் கொள்ளும் குறைந்தபட்ச எதிர்பார்ப்போடு குடும்ப உறுப்பினர்களைத் தொலைத்து அல்லது பலிகொடுத்து காலில் செருப்புக்கூட இல்லாமல் காடு, மேடு எல்லாம் ஓடி மரங்களுக்குக் கீழும், புதர்களுக்குள்ளும் படுத்து எழுந்து, உணவுப் பொருட்கள் கிடைக்காமல், ஒருவேளை கஞ்சியும் இருவேளை தண்ணீருமாகக் கிடந்து பட்டினிச்சாவை எதிர்கொண்டிருந்த நிலையில் செல் வீச்சுக்களின் விரட்டலில் அயலவர்களை, உறவுகளை கண்ணுக்கு முன்னால் பறிகொடுத்து ஓடிவந்தவர்கள். இவ்வாறு ஓடிவரும் போது கூட வந்தவர்களை திக்குத் தெரியாமல் தொலைத்துவிட்டு, பிள்ளைகள் தனியாக பெற்றோர்கள் தனியாக எங்கே இருக்கிறார்கள் என்பது கூடத் தெரியாமல் ஓடி வந்த இடத்தில் அநாதரவாக, அகதியாகி இருக்கிறார்கள். மக்களின் இந்த நிலையை அகதிகள், மக்கள், பட்டினி என்று சேவை பற்றியும், பொதுநலம் பற்றியும் பேசும் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்கள், கர்ப்பிணிகள், சிறுவர்கள், குழந்தைகளின் பசியையும் இட அசௌகரியங்களையும் சேவையாளர்களும் அதிகாரிகளும் புரிந்துகொள்ள வேண்டும். கொட்டில்கள், கூடாரங்கள் என்பன அவசரத்துக்கு ஏதுவானதாக இருந்தாலும், தற்போது நிலவும் மழை காலத்தில் கூடாரங்கள் தாக்குப்பிடிக்குமா? என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது.

தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அநேகமானவர்கள் மாற்று உடை கூட இல்லாத நிலையில் இருக்கின்றனர். இடம் பெயர்ந்து வருபவர்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்படுவது பொருத்தமானதுதான். அந்த உணவை வாங்கிச்சாப்பிட கோப்பைகள் கூட இல்லாமல் அகதி முகாம்களில், பத்திரிகைகளையும், பனை ஓலைகளையும் நீட்டி உணவை வாங்கி புற்தரையில் அமர்ந்து ஒருவேளை உணவை உண்ண வேண்டிய நிலையில் அந்த மக்கள் இருக்கின்றனர். அதேபோல் சிரட்டைகளைச் சுத்தப்படுத்தி தண்ணீர் குடிக்க உபயோகப்படுத்துகின்றனர். அகதியாக ஓடி வந்த இடத்தில் சொகுசான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியாதுதான். ஆனால் குறைந்த பட்ச வசதிகளோடாவது அவர்களைப் பராமரிக்க வேண்டும். குடி தண்ணீர் பிரச்சினை, மலசல கூட வசதிப் பிரச்சினை என்று எல்லாவற்றுக்கும் நெருக்கடி நிலைதான் என்றால், தொற்று நோய்கள் பரவவும், சச்சரவுகள் தலையெடுக்கவுமே கூடுதல் வாய்ப்புகள் இருக்கின்றன. தொண்டு நிறுவனங்கள், கூடாரங்களிலும் தண்ணீர் தாங்கிகளிலும் தங்கள் பெயர் இருப்பதை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் அந்த மக்களின் அனைத்துத் தேவைகளிலும் உங்களின் பெயர் இருக்கும் படியாக அதிகரித்த சேவையை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேபோல் பெற்றோர்களை, பிள்ளைகளைத் தொலைத்து தகவல்கள் தெரியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, உரியவர்களின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களைச் சேர்த்து வீடுவதில் ஐ.சி.ஆர்.சி. போன்ற அமைப்புக்களின் உதவி மக்களுக்குப் பெருமளவில் தேவையாக இருக்கிறது. விரைவான சேவையை இந்த அமைப்புக்கள் வழங்குகின்றபோதும் தேவை அதிகமாக இருக்கிறது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தையும் தாண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடிய நிலையே நிலவுகிறது. இவ்வாறு உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுவதற்காக இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. 2005ஆம் ஆண்டு 8.5 மில்லியன் டொலராக இருந்த யுனிசெப்பின் இலங்கையில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான நிதி ஒதுக்கீடு 2007ஆம் ஆண்டில் 15 மில்லியன் டொலராக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே அடுத்த ஆண்டு இடம்பெயர்ந்தவர்களைப் பராமரிக்கும் செலவுகள் மிகவும் அதிகமாக இருக்கும் என்ற கணிப்பீட்டை யுனிசெப் அமைப்புக் கொண்டுள்ளது. இதே தேவையை உணர்ந்து அரசாங்கமும், இடம் பெயர்ந்த மக்களின் பராமரிப்புக்காகக் கூடுதல் நிதி ஒதுக்கீட்டையும், சேவையையும் செய்ய வேண்டும். இடம் பெயர்ந்த மக்களைத் தொண்டு நிறுவனங்களிடம் விட்டு விட்டு வெறும் அறிவித்தல்களை மட்டும் விடுத்துக் கொண்டிருப்பது அரசினதோ, அமைச்சுக்களினதோ கடமையில்லை. யுத்த நடவடிக்கைகளாலும் இயற்கை அனர்த்தத்தாலும் இடம்பெயர்ந்த மக்களை அரசும், அமைச்சுக்களும் நேரடியாக சென்று பார்த்த அண்மைக்கால செயற்பாடுகள் வாகரையிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களைப் பார்த்து அவர்களுக்குரிய தேவைகளை கவனிக்க ஆவன செய்ததாகவோ, அவர்களிடம் கேட்டறிந்து ஆறுதல் சொன்னதாகவோ அறியமுடியவில்லை. இந்தக் கவலை இடம் பெயர்ந்துள்ள மக்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

இந்த விடயத்தை காலி, கெப்பிட்டிகொல்லாவ, திஸ்ஸமகராம, மூதூர், கந்தளாய் என்று விரிவாகவும், திகதி வாரியாகவும் எழுதுவதற்கு நீண்ட இடம் தேவைப்படாது. ஆனால் அப்படி எழுதுவதனூடாக புதிய குழப்பத்தைத் தோற்றுவிக்கக்கூடாது என்ற பொதுநோக்கு எமக்கு உண்டு. இதே நோக்கம் அதிகாரிகளுக்கும் அமைச்சுக்களுக்கும் இருந்திருக்க வேண்டும். இனியாவது ஏற்பட வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பாகும். வாகரையில் இருந்த மக்கள் ஓடி வருவது வெறுமனே இராணுவத் தேவையாக மட்டும் பார்க்கப்பட்டு விடக்கூடாது. மனிதாபிமானப் பிரச்சினையாகவும் பார்க்கப்பட வேண்டும்.

புலிகளின் பகுதியில் இந்த மக்கள் வாழ்ந்த போது, உணவுத் தட்டுப்பாடு, பாதுகாப்பற்ற நிலை, இருப்பிட வசதியற்ற நிலை என்பவற்றை எதிர்கொண்டதைப் போல், அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலும் நிலைமை இருக்குமாக இருந்தால் இரண்டு பகுதிகளுக்குமான வித்தியாசத்தை மக்கள் உணர முடியாமல் இருக்கும். பாதுகாப்பான சூழல் என்பது மாத்திரம் வயிற்றுப் பசியையோ, வாழ்க்கையையோ ஈடுசெய்து விடாது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு வரும் மக்கள் கேட்பாரில்லாதவர்கள் என்றோ, யாரிடமும் கையேந்தி வாழ்ந்து இப்போது வழியில்லாமல் வந்து நிற்பவர்களோ அல்ல. ஒவ்வொருவரும் ஒருவேளை உணவையாவது வயிறாரச் சாப்பிட்டு, கௌரவமாக உடுத்தி சொந்த வீடுகளில் வாழ்ந்த இந் நாட்டின் பிரஜைகள் என்பதையும் வலியுறுத்தி வைப்பது பொருத்தமாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் இந்த மக்களையும் நேரில் சென்று சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தீர்க்க உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதோடு அந்த மக்களின் பிரச்சினைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசாங்க அதிகாரி மட்டும் முழு அரசாங்கமாகி விட முடியாது. சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு. இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பில் பாரபட்சமான பார்வை காட்டப்பட்டதான ஒரு அவப்பெயர் வரும்படியாக நடவடிக்கைகள் இருக்குமாக இருந்தால், அது தீய சக்திகளுக்கு பரப்புரைக்குத் தீனியாக மாறுவதோடு, அரசுக்கும், அவப்பெயரையே ஏற்படுத்தும்.

இதைக் கவனத்தில் எடுத்து மனிதாபிமான வகையில் அகதி மக்கள் அணுகப்பட வேண்டும். அரசியல் பேதங்களோ, அக்கறையீனங்களோ அகதி மக்களைப் பழியாக்கி விடக்கூடாது. அவ்வாறானதொருநிலையை எவராலும் அனுமதிக்கவும் முடியாது. எனவே உரியவர்கள் விரைந்து செயல்பட்டு இந்த மக்களின் அவல வாழ்க்கைக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது அரசாங்கத்தின் உயர்மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையுள்ள அனைவரினதும் தலையாயக் கடமையாகும். ◎




அவலப்படும் இடம்பெயர்ந்த மக்கள்....

அலசுவது

**- மதியூகி -**

# அதிரடி அய்யாத்துரை



**காவிக்காரர்** ஆயுதமேந்திப் போராடப்போறம் எண்டு ஒரு கதையை அவிழ்த்து விட்டிருக்கினம். ஆன்மீகம் பற்றியும், அன்பு, கருணை பற்றியும் போதிக்க வேண்டியவை உப்பிடிக் கதைக் கினமே எண்டினம் சனம் - அவை ஏன் உப்பிடிச் சொல்லியிருக் கினமெண் டால் வடக்கு - கிழக்கை மீண்டும் இணைக்கிற முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அதை எதிர்த்து பொரும்பான்மைச் சனம் துவக்குத் தூக்கிப் போராடுவினம் எண்டு சொல்லியிருக்கினம். அவை எதைத் தூக்கிப் போராடினாலும் பரவா யில்லை தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு வழங்கப்படவேணுமாக இருந் தால், அது இணைந்த வடக்கு - கிழக்கு எண்டதுக்குள்ளதான் அமையவேணும் எண்ட திலை அனைத்து தமிழ் சக்திகளும் உறுதியா இருக்கினம் எண்டது மட்டும் நூற்றுக்கு இரு நூறு வீதம் நிச்சயமான விசயம். உதைப் புரிஞ்சு கொள்ளாமல் துவக்குத் தூக்குறோம் தடியைத் தூக்கப்போறம் எண்டது புத்திசாலித்தனமில்லை எண்டதை இனியா கிலும் புரிஞ்சு கொண்டால் சரிதான். ஏற்கனவே துவக்குத் தூக்கி ஆரம்பிச்ச சண்டை எங்க போய் முடிகிறதெண்டு திக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருக்கு. உதுக்குள்ள உவை துவக்குத் தூக்கிற கதை கதைச்சிருக்கினம். உந்தமாதிரிக் கதைகள் கதைக்க சுகமாகவும், உணர்ச்சியாகவும் இருக்கலாம் கண்டியளோ.

நடைமுறைக்குச் சாத்தியமாகாது. துவக்குத் தூக்கிறதும் பிறகு அதை வைக்கிறதும் அவ்வளவு லேசுப்பட்ட காரியமில் லையுங்கோ. உதை ஏற்கனவே துவக்குத் தூக்கி அனுபவப் பட்டவையிட்டக் கேட்டாச் சொல்லு வினம். வடக்கு - கிழக்குக்குத் தனித்தனியாக அதிகாரிகளையும் நியமிச்சு, அதிகாரத்தையும் வழங்கினால் தமிழ் மக்களை அடக்கிப் போட லாம் எண்டு யாரும் பகல் கனவு கண்டு, பிரச்சி னையை இன்னும் நீட்டிக் கொள்ளக் கூடா துங்கோ. அப்புடி நினைச்சால் உது வில்லங் கத்தை விலை கொடுத்து வேண்டின கதையா கிப்போயிடும் எண்டு சில தமிழ் பற்றாளர்கள் பதிலடி கொடுக்கினமுங்கோ.

**கூத்தமைப்புக்காரர்** ரெண்டாயிரத்து நாலில பதவி எடுத்து ரெண்டாயிரத்து ஆறில ஒரு சாதனை செய்து முடிச்ச திருப்தியோடை ரெண்டாயிரத்து ஏழாம் ஆண்டை எதிர் கொள் ளினம். உவை தங்கட நிதியில இருந்து ஒரு கக்கூஸ் கூடக் கட்டிக் கொடுக்காதவையாச்சே பிறகென்ன சாதனை செய்து போட்டினம் எண்டு யோசிக்காதையுங்கோ. முதல் தடவை அண்டை நாட்டுக்குப் போய் நெடுங்காலமாகக் காத்திருந்து போட்டு வந்திச்சினம். இம்முறை போய் முதலமைச்சரையும் சந்திச்சுப் பிரதமரையும் சந்திச்சினம் எண்டும் சொல்லலாம். இல்லாட்டில் அவை இவையைச் சந்திச்சினம் எண்டும் சொல்லலாம். உந்தச் சந்திப்பாலை இவை என்ன லாபம் கண்டிச்சினமோ தெரியாது. ஆனால் அண்டை நாடு இலங்கை அதிகாரத் தரப்புக்கு புது மெசேஜ் ஒண்டை வழங்கி யிருக்கெண்டது மட்டும் உண்மை. இந்தியா இலங்கை தமிழர்களுக்கு உதவும் எண்டதை இப்புடியும் வெளிப்படுத்தும் நோக்கம் அண்டை நாட்டுக்கு ஏற்பட்டிருக்கலாம். உதை எங்கட கூத்தமைப்புக்காரர் வரிச்சாயம் பூசி வெளியில பேசக்கூடாது எண்டு தமிழ்நாட்டு அரசும், மத்திய அரசும் வலியுறுத்தின வலியு றுத்தலில பட்டபாடு கூட்டமைப்புக்காரருக்குத்தான் தெரியும்.

உந்த சந்திப்புகளும், பேச்சுக்களும் இலங்கை தமிழ் மக்களுக்காகத்தானே தவிர, ரெண்டெழுத்தாருக்காக இல்லை எண்டதை ஏற்றுக்கொண்டு சம்பந்தமானவர் சம்மதம் தெரிவிச்சா பிறகுதான் உந்தச் சந்திப்புக்கள் நடந்தது எண்டதை கூத்தமைப்புக்காரர் சொல்லி றதும், நாம கேட்கிறதும் சரியில்லை எண்டிட் டுதான் வேறொரு வழியால தெரிஞ்சு கொண்ட நான் உதே நிலைதான் தமிழ்நாட்டில வரிக் கோஷம் போடுறவைக்குமாமுங்கோ...

**ஜோர்தான்** நாட்டு அரிசிக் கப்பலை ரெண்டெழுத்தார் மடக்கிக் கொண்டு வந்திட்டினம் எண்ட செய்தியை சில பேர் சந்தேகத்தோ டைதான் பார்க்கினமுங்கோ. உது தற்செயல் சம்பவமா இல்லாட்டில், திட்டமிட்ட நாடகமா எண்டு சந்தேகிக்கினம். சர்வதேச கடலில இயந்திரக் கோளாறு எண்டால் ரெண்டெழுத்தார் எப்புடி போய் கைப்பற்றிச்சினம். அது மட்டுமல் லாமல் உப்பிடி பல கப்பல்களை ரெண்டெ ழுத்தார் கொள்ளையடிச்சிருக்கினம் எண்டால், கடற்படையும் விமானப்படையும் என்ன உந்த கணக்குச் சொல்லவே இருக்கினம். ஏன் அவையளை தடுக்க முடியாமல் போட்டுதோ எண்ட கேள்விகள் ஒருபக்கமெண்டால், ஆயுதங் கள் எதையும் கொண்டு வந்து கப்பலைக் கடத்திற மாதிரி நாடகமாடி இறக்கிப் போட்டி னமோ எண்டெல்லாம் சில புலனாய்வு மட்டத்தில திங் பண்ணினமாம்.

எப்புடியோ கடலில போய் ஒரு கப்பலை இழுத்துக் கொண்டு தங்கட கரையில கட்ட முடிஞ்சிருக்கெண்டால் கடலில் கண்காணிப்பில ஏதோ பெரிய லீக் இருக்கு எண்டதைத்தான் காட்டுது. உதைப் பூசி மெழுகாமல் சம்பந்தப் பட்டவை ஏற்றுக்கொண்டு இனியாச்சும் உப்பிடி லீக்காக இருக்காமல் பார்த்தால் நல்லது. நாட்டின்ர இறைமை எண்டது இதுவும் சேர்த்துத் தானுங்கோ...வ்...

**வடக்கு** - கிழக்கு இணைந்த ஒரு மாகாண அலகு எண்டதை தமிழ் மக்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கேக்க அதை மூண்டாகப் பிரித்து தனித்தனியாக நிர்வா கங்களை நடத்தவும் சில தயாரிப்புகள் நடை பெற்றுவருவதாக நம்பகமான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கு. முன்னம் ஒரு தடவை சொன்னனான் வடக்கு, கிழக்கு எண்டு பார்த்தால் கிழக்கில கல்முனையைத்தான் பிரதான நகரமாக மாற்றியிருக்கினம் எண்டு. இப்ப என்னடாவெண்டால் திருவாணமலைக்குத் தனியான நிர்வாகமாம் எண்டினம். இணைந்த வடக்கு - கிழக்குக்கே திருமலைதான் நிர்வாக நகரமாக இருந்தது. இப்ப அது தனிச்சுப் போட்டுது. போகிற போக்கைப் பார்த்தால் மாவட்டத்துக்கு ஒரு நிர்வாக அதிகாரம் எண்டு தனித்தனியாப் பிரிச்சுப் போடுவினம் போல எண்டு வாத்தியார் குழம்பிப் போயிருக்காருங்கோ. சட்டரீதியாக ரெண்டாகி இருக்கிற வடக்கையும் கிழக்கையும் இணைக்கவேணுமெண்டதே எதிர்காலத்தில் பெரும்பாடாக இருக்கப்போகுதே. உதில மூண்டாக்கிப் போட்டு என்ன செய்யப் போகினம் எண்டதைப்பற்றி உது மூணாக வேணுமெண்டு உள்ளுக்குள்ள மலை சுரண்டிறவை கொஞ்சம் நிதானமாகச் சிந்திக்க வேணும். "ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது" எண்ட மாதிரி தமிழர் தரப்பு ஒரு கௌரவமான தீர்வுக்கு வாரதுக்கிடையில ரெண்டு மாகாணமும் பல கூறுகளாக்கப்பட்டிடும் போல கிடக்கு. அது சரி "அண்ணன் தம்பிச் சண்டை பங்காளிக்கு மகிழ்ச்சி" எண்டது சரியாத்தான் கிடக்கு.

# முகம்

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். எனக்கென்னவோ இந்தக் கூற்று பொய் என்றுதான்படுகிறது. எந்த மனிதனையும் முகத்தைப் பார்த்து எடைபோட முடியவில்லை. சிரித்துச் சிரித்துப் பேசும் ஒருவனின் செயற்பாடு வஞ்சகம் நிறைந்ததாகவும், சூதுவாது நிறைந்ததாகவும் இருக்



கிறது. அதேபோல் பார்த்தாலே கோபம் வரும் முகங்களைக் கொண்டவர்கள் பழகுவதற்கும், உறவாடுவதற்கும் நல்லவர்களாக இருப்பார்கள். எப்படி இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்வது?

எனக்குத் தெரிய, வஞ்சகர்கள் நமது கண்ணைப் பார்த்துப் பேசமாட்டார்கள் என்பதைப் பல தடவைகள் பார்த்திருக்கின்றேன். அதே போல் கண்ணைப் பார்த்துக் கொண்டு பேசும் ஒருவருக்குப் பொய் சொல்லக் கஷ்டமாக இருக்கும்.

சிலரின் முகத்தைக் கண்டால், அடிக்கடி பார்க்க வேண்டும் போல் இருக்கும். ஏதோ ஒரு பிரகாசம், ஒரு உற்சாகம், ஈர்ப்பு அந்த முகத்தில் இருப்பது போல் இருக்கும். அதே போல், குழந்தைத்தனமாக சிலரின் முகம் இருக்கும். அவர்கள் எத்தனை பெரிய தவறைச் செய்தாலும், அவர்களைப் பார்க்கின்றபோது கோபம் கூட அடங்கி விடும். சிலரின் முகம் எல்லாத் துன்பங்களையும் தனக் குள்ளே மறைத்துக் கொண்டு எப்பொழுதும் இயல்பாகவும், ஒரு புன்னகையோடும் இருக்கும். சிலரின் முகம் வாடிப் போய் சோகம் அல்லது ஏமாற்றம் முகத்தில் சூழ்ந்து கொண்டிருக்கும்.

கொலையாளிகளின் முகத்தில் எப்போதும் ஒரு கொடூரம் இழையோடிக் கொண்டேயிருக்கும். அவர்கள் அதை மறைப்பதற்கு எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், அதை அவர்களால் மறைக்க முடியாமல் இருக்கும். எனக்கெல்லாம் நான் இருக்கும் இடத்தில் ஒரு களவு நடந்து விட்டதென்றால், களவு எடுத்தவனுக்கு முன்னமே எனது முகத்தில் கள்ளத்தனம் ஒட்டிக் கொள்வது போல் மாறிவிடும். அந்தப் பொழுதில் என்னைப் பார்க்கும் யாருக்கும் சந்தேகம் வந்துவிடும். உண்மையான கள்வன் நான் விசாரிக்கப்படுவதைப் பார்த்து எதுவுமே தெரியாதவன் போல் சிரித்துக் கொண்டு முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டிருப்பான்.



## போவோம் ரசிப்போம்

சிலரின் முகத்தில் காலையிலேயே விழிப்பதற்குப் பயமாக இருக்கும். அதேபோல், நமது முகத்தில் விழிக்க சிலருக்குப் பயமாக இருக்கும். அநேக மானவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை உண்டாவது முக அழகில்தான் ஆரம்பிக்கின்றது. சில பெண்களிடம் அதை நேரடியாகவே கேட்டிருக்கின்றேன். "இந்த முகத்தை யாருக்குப் பிடிக்கும்?", "இதெல்லாம் ஒரு முகமா?" என்றெல்லாம் சொல்வார்கள். இதேபோல் ஆண்களும் சொல்வார்கள். ஏன் இந்தத் தாழ்வு மனப்பான்மை? ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு அழகு. அந்த வகையில் ஒருவருக்குப் பிடிக்காத முகம், இன்னொருவருக்குப் பேரழகான முகமாக இருக்கும். இன்னொருவரின் பேரழகான முகம் மற்றொருவருக்குப் பிடிக்காத முகமாக இருக்கும். முகத்துக்கென்று ஒரு வசீகரம் இருக்கிறது. முகத்துக்கு முகம் பார்த்து உறவாடக்கூடிய துணிவு, ஒரு சிலருக்கே வாய்க்கும். தொலைபேசியில் ஒருவர் நம்மைப் பற்றி எதை வேண்டுமானாலும் பேசிவிடலாம். அதே நபர், நம் முகத்துக்கு முன்னால் அத்தனை வார்த்தைகளையும், அதே தொனியில் பேச முடியாதவராக இருப்பார். பொதுவாக கூட்டு வாழ்க்கையில் ஒருவரைப் பற்றி இன்னொருவர் இல்லாததையும், பொல்லாததையும் வாய் உளையாமல் பேசுவதைக் கேட்டிருக்கின்றோம். அபாண்டமாக வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நாலா பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொள்வார். ஏன் அவருக்கு அத்தகைய அச்சம்? அவரால், குறித்த நபருக்கு முன்னால் முகத்துக்கு முகம் பார்த்து நேரடியாக அபாண்டம் சுமத்த முடியாது. அதிலிருந்து தெரிந்துவிடும், பெரும் பேதமை நிறைந்தவர்களால் மட்டுமே ஒருவர்மீது அபாண்டம் சுமத்தி விட முடியும் என்பது.

அப்படிப் பேசும் ஒருவர், யார் மீது அபாண்டம் சுமத்தினாரோ, அவரது முகம் பார்த்துப் புன்னகைத்தபடி உரையாடுவது உலக மகா நடிப்பாக இருக்கும். நம் முன்னோர்கள் வாழ்ந்த காலம் சரித்திரமாகத் திகழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம், அவர்கள் ஒரு பார்வைக்கு - ஒரு வார்த்தைக்குக் - கட்டுப்பட்டவர்களாக, வாக்குறுதிக்கு மதிப்பளிப்பவர்களாக, சத்தியம் காத்து வாழ்ந்ததுதான். அப்படி சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு உண்மைக்காக வாழ்பவர்களை இன்றைக்குக் காண்பதே அரிதாக இருக்கின்றது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

இந்தக் குறளில் வள்ளுவப் பெருந்தகை, முகத்தைக் கண்டு சிரித்துவிட்டுப் போகும் ஒருவரை, அதைக் கொண்டு நட்பாக நாம் நினைத்து விடக் கூடாது. நட்பு மனதிலிருந்து வெளிப்பட வேண்டும் என்கிறார். இந்தக் கூற்றை நம்மால் இன்றைய வாழ்க்கை அனுபவத்தோடு ஒப்பிட்டு நிராகரித்துவிட முடியுமா? முடியாது. மனிதர்கள் நம்மைக் கண்டு ஓடிவந்து கட்டிப்பிடித்து உறவு கொண்டாடுகிறார்கள். நமது தலைக்குப் பின்னால் முகம் வைத்துக் கொண்டு எதிராளியிடம் நம்மை விசர் என்றும், கூடாதவனென்றும் கண்ணாலேயே கதை சொல்லிவிட்டு, மீண்டும் முகத்துக்கு நேர் முகம் காட்டி, "உனக்காக உயிரையும் தருவேன்" என்றும், "நான் பார்த்த ஒரே ஒரு மனிதன் நீ தான் என்றும்" சொல்லும் கபடம், இன்றைக்கும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் வழக்கமாகிவிட்டது.

## முரசு வாசகர்களுக்கான போட்டி

*தினமுரசு வாசகர்களுக்கு...*

### தினமுரசின் 700 ஆவது வெற்றி வார்த்தை முன்னிட்டு நடாத்தப்படும் கவிதை, சிறுகதைப் போட்டி.

ஜனரஞ்சகப் பத்திரிகைத் தளத்தில் இன்றைய கால கட்டத்தை தினமுரசின் முன் அல்லது தினமுரசின் பின் என்று வரையறுக்க முடியும். குறிப்பிட்டவர்கள் மட்டும் பேனை பிடித்து எழுதிப் பிரபலம் தேடிக் கொண்டிருந்த சூழலைத் தகர்த்து, எல்லோருக்கும் களம் அமைத்துக் கொடுத்த பெருமையும் தினமுரசையே சாரும். ஆகையால்தான், தினமுரசு, அதன் ஆசிரியர் அற்புதன் ஆகிய பெயர்கள் ஒவ்வொருவர் மனதிலும் தாரக மந்திரமாகப் பதிந்திருக்கின்றது. இன்றைய படைப்பினைப் பார்க்கின்றபோது அனேகமானோர் முரசு அடையாளங் காட்டியவர்களாகவே இருப்பது பெருமைக்குரியது. எமது நோக்கமும் அதுவே. அதனடிப்படையில் படைப்புலகில் ஏற்கனவே முகம் காட்டியவர்களையும், முகம் காட்ட முயற்சித்துக் கொண்டிருப்பவர்களையும் ஒரே தளத்தில் சந்திக்கச் செய்யும் துணிச்சல் மிகுந்த முயற்சியே இது.

*போட்டி நிபந்தனைகள் :*

கவிதை, சிறுகதை என்பன கீழ்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட வேண்டும்.

! யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்
! சிறகொடிந்த சமாதானப் புறா
! மலையகத்தில் மலர்ந்து சருகாகிப் போனவர்களின் சமகாலம்
! காதலும் வாழ்க்கையும்
! மிச்சமிருக்கும் கல்வி
! நாமும் மற்றவரும்

✦ **கவிதை**: மரபுக்கவிதையாயின் 20 வரிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதையாயின் ஒரு பக்கத்திற்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.

✦ **சிறுகதை**: கையெழுத்துப் பிரதிகளாயின் 05 பக்கங்களுக்கு மேற்படாமலும், தட்டெழுத்துப் பிரதிகளாயின், 03 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம்.

✦ தங்களது சகல ஆக்கங்களும் சொந்தக் கற்பனையில் உருவானதாக இருக்க வேண்டும். ஏனைய படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தழுவியவையோ அல்லது களவாடப்பட்டவையோ நிராகரிக்கப்படும்.


✦ நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் தலா மூன்று சிறந்த ஆக்கங்களுக்குப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

✦ சகல ஆக்கங்களையும் 31. 01. 2007 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டிய முகவரி,

**பரிசுப்போட்டி - 700**
**தினமுரசு வாரமலர்**
**த. பெ. இல. 1772.**
**கொழும்பு.**

**எழுதுவோர் எழுதலாம்**
**ஒவ்வொரு எழுத்தும் பெறுமதி மிக்கது.**






## மலையாள மாந்திரீகம்

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வீ கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும். வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

### எனது தனித்தன்மை என்ன?

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

### இனி உங்கள் பிரச்சினை என்ன?

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**

மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 முஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**

பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**

பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**

தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**உலக மலையாள மாந்திரீக சக்ரவர்த்தி**
பேராசிரியர் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP
PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP

**ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No- 162 KOTAHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137
FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com
எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.
No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.Tel: 052-2222508

## இன்னொருவர் பார்வையில்

# புலிகள் இயக்கத்தின் பிடி கிழக்கில் தளர்ந்து வருகிறது

**கிழக்கில்** இராணுவம் படிப்படியாக நிலை கொண்டிருக்கையில், புலிகளை அந்த மாகாணத்திலிருந்து ஸ்திரமாக இராணுவம் வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. பல வருடங்களாக புலிகள், மனிதக் கேடயங்களாகத் தமிழ் மக்களைத் தடுத்து வைத்திருந்தனர். அவர்களுக்கு எதிராக எழுந்து நிற்க இப்போது அந்த மக்கள் ஆரம்பித்து விட்டனர். தமிழ் மக்களைப் புலிகள் இயக்கம் மிலேச்சத்தனமாகவும் கொடூரமாகவும் நடத்தி வந்ததால், புலிகள் இயக்கம் தனது பிடியையும் மக்களையும் விரைவாகவே இழந்து வருகிறது. புலிகளின் கிழக்கு மாகாணத் தலைமைக்குள் ஏற்பட்டிருக்கும் மோசமான உள்நெருக்கடி, அந்த இயக்கத்தை மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலுள்ள மாவிலாறு பிரதேசத்தில் சில மாதங்களுக்கு முன்னர் யுத்தம் வெடித்ததையடுத்து, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் பல தடவைகள் தமது ஆத்திரத்தை அந்த இயக்கத்திற்கு எதிராக வெளிக் காட்டியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவாங்கேணியில் மக்கள் புலிகளுக்கு எதிராக கிளர்ந்துள்ளனரென்று பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கு மக்கள் இடம் பெயர்ந்து வாழும் முகாமிலிருந்து இளைஞர் ஒருவரை கடத்திச் செல்ல முயன்ற புலி இயக்க உறுப்பினர் ஐவரை, மக்கள் பிடித்துள்ளனர். முச்சக்கர வண்டியொன்றில் புலி இயக்க உறுப்பினர்களின் கும்பலொன்று 26 வயது இளைஞர் ஒருவரை கடத்திச் செல்ல வருகை தந்தபோது, கிராமவாசிகளும் உள்ளூரில் இடம் பெயர்ந்து வாழும் மக்களும் புலி இயக்க உறுப்பினர்களைச் சுற்றி வளைத்து மிக மோசமாகத் தாக்கியுள்ளனர். பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக இந்தப் புலி இயக்க உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டனர்.

புலிகளின் இரும்புப் பிடிகளுக்குக் கீழ் புலி கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்கள் வாழ்கின்றனர். புலிகள் தேடுகின்ற விடுதலையென்பது, சாதாரண மக்களுக்கானது அல்ல சகல வசதிகளையும் அனுபவித்துக் கொண்டு, தமது குடும்பங்களை ஐரோப்பிய நாடுகளில் வைத்திருக்கும் புலித் தலைமைத்துவத்துக்கே விடுதலை தேவைப்படுகிறதென்பதை அப்பாவி மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். மறுபுறத்தில் இந்த யுத்தத்தின் தாக்கங்களைச் சந்திக்கும் குடிமக்கள், தமது பிள்ளைகளை பகடைக்காய்களாகத் தியாகம் செய்ய வேண்டுமென்று புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தற் போது புலிகள் வாகரை மற்றும் தொப்பிகல காடுகளையே தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். மறுபுறத்தில் சில மாதங்களுக்கு முன் னர் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சம்பூர், மணிராசன்குளம், மாவிலாறு ஆகியவை தற்போது இர்ாணுவத்தின் கட் டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக வாகரை, தொப்பிகல மற்றும் அயற் பகு திகளுக்கு புலிகளைப் புறந் தள்ளி அவர் களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அரசாங்கப் படைகளால் முடிந்துள்ளது. வாகரையில் இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்ட பின்னர், புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுமார் 45 ஆயிரம் பொது மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தினர். மனிதக் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து கொண்டு இராணுவத்தினர் மீது புலிகள் ஆட்டிலறி தாக்குதல்களை நடத்தினர். இதற்குப் பதிலாக புலி நிலைகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதனால் அநாதரவான, அப்பாவி பொது மக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

வாகரையில் சிக்கியிருந்த அப்பாவி மக்கள் இம்மாத ஆரம்பத்தில் இறுதியாக அங்கிருந்து தப்பியோடி, வாழைச் சேனையின் ரிதியதென்னையிலுள்ள அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரத் தொடங்கினர். இப்போது இந்த மக்கள் புலிகளிடம் பட்டத் துயரங்களைச் சொல்லத் தொடங்கியுள்ளனர். தம்மிடமிருந்து உணவு, உலர் உணவு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்ட தாகவும் தாம் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அம் மக்கள் தெரிவித்தனர். தமது கிராமங்களை விட்டு வெளியேறாதவாறு இம் மக்கள் தடுக்கப்பட்டனர். இம் மக்களை வெளியேறாமல் தடுப்பதற்காக புலி இயக்க உறுப்பினர்கள், அக்கிராமங்களில் 24 மணித்தியாலமும் காவலிருந்தனர்.த தப்பிச் செல்ல முனைந்தபோது புலிக்ளைச் சந்திக்க நேர்ந்தால் என்ன நடக்குமென்பதை நன்கு தெரிந்து கொண்டே காட்டுப் பகுதிக்கூடாக வாகரையிலிருந்து மக்கள் தப்பிச் சென்றனர். புலிகளின் பயமுறுத்தலுக்கு மத்தியிலும், பெருந்தொகையான தமிழ் மக்கள் இரவு நேரங்களில் தமது வீடு, வாசல்களைக் கைவிட்டு விட்டு தரைவழியாகவும் கடல் வழியாகவும் தப்பிச் சென்றிருக்கின்றனர். சில தினங்களுக்கு முன்னர் படகொன்றின் மூலம் தப்பிச் செல்ல முயன்ற எட்டுப் பேர் துயரமான முறையில் மரணத்தைத் தழுவியுள்ளனர். தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவு வெளியேறுகின்ற நிலைமைக்கு மத்தியிலும் புலிகள் வலுக்கட்டாயமாக அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். தமது அச்சுறுத்தல்கள் பயனளிக்காது என்பதை உணர்ந்து கொண்ட புலிகளின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் பலர், கடந்த 15ஆம் திகதி வாகரை மக்களை அழைத்து அங்கிருந்து வெளியேற வேண்டாமெனக் கேட்டுக் கொண்டனர்.

**புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரையிலிருந்து பெருந் தொகையான மக்கள் வெளியேற ஆரம்பித்துள்ளனர். மனிதக் கேடயங்களாக அப்பாவிப் பொது மக்களைப் புலிகள் இயக்கம் காலம் காலமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறது. அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான மோதலில் மக்களே பெரும் இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் புலிகளின் கட்டுப்பாடுகளையும் மீறி காட்டுப் பாதைகளூடாக மக்கள் தப்பி வருகிறார்கள். சுனில் ஜெயசிறி என்ற அரசியல் ஆய்வாளர் கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் கடந்த 23ஆம் திகதி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**



வாகரை மக்கள்...

குடிமக்களுக்காகவே அரசாங்கப்படைகளுடன் தாங்கள் மோதுவதாகப் புலிகள் அங்கு தெரிவித்திருக்கின்றனர். அப்படியானால் சிரேஷ்ட புலி உறுப்பினர்கள் சிலர் தமது குடும்பத்தவர்களை வன்னிக்கு அனுப்பி வைத்தது ஏனென்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். புலிகளைக் குற்றம் சாட்டிய பொதுமக்கள் அவர்களுடன் கடூரமாக நடக்கவும் தலைப்பட்டனர். இதனால் புலிகளின் அரசியல் தலைவர்கள் பலர் அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு காட்டுப் பகுதியூடாக மக்கள் புறப்பட்ட தினத்தன்று, புலிகளின் குழுவொன்று அவர்களின் பாதையை மறித்து எச்சரிக்கை செய்தது. இதன் பின்னர் பெண்கள் சிலர் புலிகள் மீது வசை பாட ஆரம்பித்தனர். இதன் பின்னர் வேறு காட்டுப்பாதை மார்க்கமாக மக்கள் வெளியேற ஆரம்பித்தனர். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தற்போது பாடசாலை கட்டிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உணவு, மருந்து மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. வாகரையிலிருந்து வெளியேறும் மக்களின் எண்ணிக்கை கடந்த சில தினங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது.

வாகரையிலுள்ள பொதுமக்கள் மீதான தமது பிடியை இழந்து வரும் புலிகள், தற்போது மக்களைத் தப்பிச் செல்ல அனுமதிப்பதா அல்லது தடுப்பதா என்ற இருவேறுபட்ட கருத்துக்களை கொண்டுள்ளனர். மட்டக்களப்பு புலிகள், மக்கள் வாகரையிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட வேண்டுமென கூறுகின்றனர். ஆனால் திருமலை மற்றும் வன்னிப் புலிகள் வாகரையிலிருந்து மக்கள் வெளியேற அனுமதிக்கப்படக்கூடாதென்று வலியுறுத்துகின்றனர்.

இத்தகைய சம்பவங்களையடுத்து மூன்று சிரேஷ்ட புலி இயக்க உறுப்பினர்களை கிழக்கு மாகாணத்துக்குப் புலித் தலைமை அனுப்பி வைத்தது. ஆனால் இந்த மூவருமே இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டமை வன்னித் தலைமைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சரியான தலைமைத்துவம் இல்லாமல் பின்னடைவைச் சந்தித்திருக்கும் புலிகள், பெருமளவு ஆளணிப் பற்றாக்குறையை கிழக்கில் எதிர்நோக்குகிறது. கடந்த சில மாதங்களாக கிழக்கில் புலிகள் இயக்கம் பாரிய இழப்புகளைச் சந்தித்து வருகிறது. கதிரவெளி, வாகரை ஆகிய பிரதேசங்களைத் தம்மால் கைப்பற்ற முடியுமென்று கூறும் பாதுகாப்புப் படையினர், அங்கிருக்கும் பொது மக்களின் பாதுகாப்புக் கருதி உடனடியாக அதைச் செய்யத் தயங்குவதாகக் கூறுகின்றனர். அப்பாவிப் பொதுமக்களை மனிதக்கேடயங்களாக புலிகள் பயன்படுத்தக்கூடிய சாத்தியங்கள் நிறையவே தென்படுகின்றன. கடந்த வாரம் சுமார் 15 ஆயிரம் பொது மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லத் தயாராக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. கிழக்கில் பிரபாகரன் பிடியை இழந்து வருவதால், வடக்கில் புதிய வன்செயல்களை உசுப்பி விடக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

*-நன்றி :- டெய்லி மீரர்*

---

**அன்ரன் பாலசிங்கம்...** *(சென்ற வாரத்தொடர்ச்சி)*

என்று பீடிகையோடு ***உமக்கும் ஒரு பியர் தரட்டே*** என்றார். பத்மநாபா அதை மறுத்ததுடன் **சொல்லுங்கோ அண்ணை** என்று பாலசிங்கத்தின் கதையை கேட்க ஆரம்பித்தார். **Bloody uneducated Barbarian** என்று எடுத்த எடுப்பிலேயே பெரும் தொனியில் ஆரம்பித்த பாலா அண்ணர் ***மூதேசிக்குத் தமிழும் ஒழுங்காகத் தெரியாது, இங்கிலீஸும் தெரியாது, இங்கிலிஸ் தெரிஞ்சவனையும் பக்கத்தில வைச்சிருக்கத் தெரியாது, நாலு அரசியல் விசயம் தெரியாது... விசரன் எதுக்கு எடுத்தாலும் பிஸ்டலை தூக்கிறது. இவனோட எப்பிடித் தம்பி காலந்தள்ளுறது?*** என்று வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கத் தொடங்கினார் பாலா அண்ணை. அன்ரி அடேலும் பத்மநாபாவும் எவ்வளவோ சொல்லியும் பாலா அண்ணரை கட்டுப்படுத்த முடியவில்லை. ***விடு என்னை! இந்த மோடனையும் அவனுடைய இயக்கத்தையும் துலைத்துக் கட்டிட்டு வாறன்*** என்ற கணக்கில பாலா அண்ணர் உருத்ர தாண்டவத்தில் நின்றாராம். பின்னர் இரண்டு கிளாஸ் விஸ்கியை தொண்டைக்குள் வார்த்து வாய் நாற்றத்தை பத்மநாபாவின் முகத்துக்கு நேரே ஊதிய பின்னர்தான் அங்கிள் பாலா சாந்தி அடைந்தார், என்ற உண்மை முதலில் தம்பி பிரபாகரனுக்கு உடனே தெரியவில்லையாம். ஆனால் அங்கு பாலா அண்ணருக்கும் அடேல் அன்ரிக்கும் தெரியாமல் அவர் வீட்டில் உளவுக்காக விடப்பட்டிருந்த சிறுவன் மூலமாகவும் அவரது வீட்டில் ஆங்காங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒட்டுக் கேட்கும் கருவிகள் மூலமும் தம்பிக்கு விபரம் தெரிந்துபோய் விட்டதாம் என்று பின்னர்தான் பாலா அண்ணருக்கே தெரியுமாம். இவற்றிலிருந்து புரிந்து கொள்ளக்கூடியது என்ன? மற்றவர்களுக்கு காட்டுவதற்கு பாலா அண்ணை என்ன துள்ளுத் துள்ளினாலும் பிரபாகரன் என்னும் கொலைகாரப் பேர்வழிக்கு முன்னால்...தனது பதவி என்னும் எலும்புத் துண்டுக்காக எல்லாம் தெரிந்துகொண்டும் ஒரு கொலைகாரக் கும்பலோடு கூடிவாழ்ந்து, தமிழ் சமூகத்தில் இருந்த கொஞ்சநஞ்ச நல்ல அம்சங்களையும் கருவறுத்த குற்றவாளிதான் பாலசிங்கம். அதற்குமேல் வேறொன்றுமில்லை. **பிரபாகரனின் தாளத்திற்கே ஆடிய பாலசிங்கம்** இந்த வருடத் தொடக்கத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு சென்ற பாலசிங்கம் இப்படிக் கூறினார். **We will kill. That is our job...** புலிகள் அமைப்புக்குள் உள்ள மிதவாதியாக பாலசிங்கத்தைக் கருதிய நோர்வே உட்பட பலருக்கும்கூட இது பேரதிர்ச்சியாக இருந்திருக்கலாம். பாலசிங்கத்தின் இந்த தெருச்சண்டித்தனப் பேச்சும் குணமும்தான் பாலசிங்கத்தின் உண்மையான முகம் என்பது பலருக்குத் தெரியாது. அதுதான் அவரை இவ்வளவு காலமும் பிரபாகரனோடும் அவரின் புலிக்குணத்தோடும் சேர்ந்திருக்கவும் வைத்தது. ஒருவரை சீண்டிவிட்டால்தான் அவரின் உண்மையான குணம் வெளிப்படும் என்பார்களே அதுபோலத்தான். பாலசிங்கத்தை சற்று சீண்டி விட்டால் அவர் தன் சுய உருவத்தைக் காட்டி நிற்பார். பாலசிங்கத்தின் மரணம் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு பாரிய இழப்பு என்று நோர்வேயும் ஏனைய பலரும் கூறியிருப்பதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? பாலசிங்கம் உண்மையிலேயே புலிகள் அமைப்புக்குள்ளிருந்த மென்போக்காளர் அல்லது மிதவாதிதானா? அவர் உயிருடன் இருந்திருந்தால் பிரபாகரனையும் புலிகள் இயக்கத்தையும் அர்த்தமுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவைத்திருக்க முடிந்திருக்குமா? என்னும் கேள்விகளெல்லாம் ஒன்றும் விடைகாணப்பட முடியாதவைகள் அல்ல. கடந்த காலங்களில் பிரபாகரனும் புலிகள் இயக்கமும் மேற்கொண்ட எந்தவொரு மோசமானதும் தவறானதுமான செய்கையையும் பாலசிங்கத்தால் மதியுரைஞர் என்ற வகையில் நிறுத்திவிடவோ தடுத்துவிடவோ முடியவில்லை. காரணம் பிரபாகரன் பாலசிங்கத்தை கேட்டு எதுவும் செய்வதுமில்லை அவருக்கு சொல்லிவிட்டு எதுவும் செய்வதுமில்லை. செய்து முடித்ததன் பின்னர் அதை நியாயப் படுத்துவதும், அதற்கு அர்த்தம் கற்பிப்பதும், அதற்கு வெள்ளைச் சாயம் பூசுவதும் மட்டும்தான் பாலசிங்கத்தின் மதியுரைஞர் பணி. அதற்கு மேல் வேறொன்றுமில்லை. ஆகவே பாலசிங்கத்தின் மரணம் என்பது நோர்வேயைப் பொறுத்தவரையும், தமிழ் மக்களை புலிகளின் கைகளில் காவுகொடுத்து பிரச்சினையைத் தீர்க்க வகை செய்பவர்களுக்கும் பேரிழப்பாகத் தெரியலாம். ஆனால் தமிழரின் விமோசனத்திற்கான பாதையில் புலிகளும் அவர்களின் அரசியல் ஆதிக்கமும் தோற்கடிக்கப்படும் அவசியத்துடன் நோக்கும்போது, பாலசிங்கத்தின் மரணம் இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு பெரும் வரப்பிரசாதமே. தனது பதவிக்காகவும் புகழுக்காகவுமே பாலசிங்கம் சகலதையும் செய்தார்.

**-எஸ். மனோரஞ்சன்**

எந்தவொரு கட்டத்திலும் பிரபாகரனையோ புலிகளின் அரசியலையோ விமர்சிக்கும் நோக்கம் அவருக்கு இருக்கவும் இல்லை அதற்கான முதுகெலும்பும் அவருக்கு இருந்ததில்லை. சாதாரண தமிழில் சொன்னால் பாலசிங்கம் ஒரு **நசிஞ்ச கள்ளன்.** பிரபாகரனின் தாளத்திற்கு ஆடி தனது பதவியை தக்க வைத்துக் கொண்டதே அவரது 30 வருட தமிழ் அரசியல் பணி. மதியுரைஞரின் விதி தமிழ் மக்களுக்கு விமோசனமா அல்லது சர்வநாசமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். பாலசிங்கம் எப்போதுமே பிரபாகரனின் ஆதிக்கத்தின் கீழ் மட்டும்தான் இருந்தாரா? அல்லது அவரை ஆட்டுவித்த வேறு சில சக்திகள் இருந்தனவா? அவர்களின் தேவைகளுக்கேற்றபடியும் பாலசிங்கம் ஆடினாரா. புலிகள் இயக்கத்தை ஆட்டுவிக்க முயற்சித்தாரா? அதனால்தான் பிரபாகரனை வைக்கவேண்டிய இடத்தில் வைத்திருந்தாரா? போன்ற கேள்விகளும் கடந்த காலத்தில் அவ்வப்போது எழுப்பப்பட்டன.


*-நன்றி தேனீ*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இந்தப்** பொய்க்கால் குதிரைகள் நூலில் உள்ள புதுக்கவிதைகளைத்தான், திரு. கே. பாலசந்தர் தன்னுடைய அக்னி சாட்சி படத்தில் பயன்படுத்திக் கொண்டார்.

ஒரு நாளிதழைக் கொடுத்தால்கூட, நாலுவிதமாக இசையமைத்துக் காட்டும் திறன் வாய்ந்த என் அன்பு அண்ணன் திரு. எம். எஸ். விஸ்வநாதன் தான், அனைத்துப் புதுக் கவிதைகளுக்கும் அற்புதமாக



மெட்டமைத்தார்.

இயக்குநர் சிகரம் திரு. கே. பாலசந்தரைப் பற்றி எழுத இந்த இடம்தான் சிறந்தது என எண்ணுகிறேன்.

பாலசந்தர் ஒரு பரிபூரண மனிதர் என்கிற முறையில், மென்மையும், மேன்மையும் நிறைந்த அவரது அணுகுமுறைகளில், எனக்கு எள் முனையளவும் ஐயமில்லை. காலம் அவரது தலையில் எத்துணையோ கிரீடங்கள் ஏற்றி வைத்தபோதும்கூட, என் பெற்றோருடன் பழகும் போது, மகுடங்களைக் கழற்றி வைத்துவிட்டுச் சராசரி மனிதனாகப் பழகுகின்ற மகத்துவமெல்லாம் அவரிடம் நீக்கமற நிறைந்திருப்பதை நேரில் கண்டவன் நான்.

'வாலியண்ணா!' என்று வாயார வாஞ்சையோடு அவர் விளிப்பதுண்டு. எந்தக் கோயிலிலும் நான் சத்தியம் செய்து சொல்லுவேன். பாலசந்தர் மகாகனம் பொருந்தியவரே தவிர, மண்டைக்கனம் பொருந்தியவரல்ல; அதனால்தான் இதய நோயிலிருந்து அவரை மீட்டு, இறைவன் அவரது மனைவியாரின் நெற்றிக் குங்குமத்தை நிரந்தரமாக்கினான்.

சினிமா உலகைப் பொறுத்தவரை, அவருக்கு நான் ஆறு வருடம் மூத்தவன். எனவே பிற கலைஞர்களோ, கவிஞர்களோ அவரிடம் காட்டும் பணிவையும், வணக்கத்தையும் அவர் என்னிடம் எதிர்பார்த்திருக்க நியாயமில்லை. இருப்பினும், ஆரம்ப நாட்களில் அவர் படங்களில் நான் பணியாற்றிய பொழுது, என்னுடைய சீனியாரிட்டியை அவரால் ஜீரணிக்க முடியவில்லையோ என்று இப்போது நான் எண்ணிப் பார்க்கிறேன். என்னுடைய கணக்குத் தவறாகக்கூட இருக்கலாம். உண்மையை இறைவனே அறிவான்.

எது எப்படி இருப்பினும், அவர் இயக்கிய பல்வேறு படங்களுக்கு நான் பாடல்கள் புனைந்திருக்கின்றேன். என்னை அவர் கௌரவமாகவே நடத்தியிருக்கிறார். எனினும், எங்கள் இருவருக்கிடையே ஒரு சின்ன இடைவெளி இருப்பதாகவே நான் உணர நேர்ந்தது.

நான், கண்ணதாசனின் சம காலத்தவன். கண்ணதாசனிடமே சிகரெட் வாங்கிப் புகைத்தவன். சினிமா உலகில், கண்ணதாசன் எனக்கு ஆறு ஆண்டுகள் மூத்தவர். இருப்பினும், எந்த அரியாசனத்திலும், எனக்கு சரியாசனம் கொடுத்து என்னை அங்கீகரித்தவர் கண்ணதாசன்.

கண்ணதாசனுக்கு என் கவித்துவம் புரிந்திருந்தது. பாலசந்தர் பார்வையில் அது தட்டுப்படாமல் போயிற்றோ என நான் இப்பவும் எண்ணுவதுண்டு.

என்ன காரணமாயினும், நாங்கள் தொழில் ரீதியாக அடிக்கடி பிரிவதும், மீண்டும் இணைவதுமான ஒரு கண்ணாமூச்சி விளையாட்டைக் காலம் எங்களைக் கொண்டு நடத்தியிருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

அவரது படங்களுக்கு நான் எழுதிய பாடல்கள், அவரது புகழுக்கு பங்கம் விளைவித்திருக்கக்கூடும் என்று செவிடன் கூடச் சொல்ல மாட்டான்.

அப்படியிருக்கையில், 'வாலி, காட்சிக்குப் பொருத்தமாக எழுதுவதைவிட, பாப்புலராவதை மனதில் வைத்துத்தான் எழுதுவார்' என்று ஒரு பேட்டியில் திரு. பாலசந்தர் சொல்லியிருந்தது, மகத்தான மனிதர்கள்கூட சில நேரம் மனச்சான்றைக் கழற்றி வைத்துவிட்டுக் காலதேச வர்த்தமானத்திற்கேற்பப் பேசுவார்கள் என்னும் புதிய சித்தாந்தத்தை எனக்குப் போதிப்பதாக இருந்தது.

(தொடரும்.......)

இதய வெளி



## பிரிட்டிஷ் ராணியின் கூச்ச சுபாவம்

அரசியல் தலைவர்கள், கலை உலகப் பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதர்கள், அறிஞர்கள் என்று ஆயிரக்கணக்கானோரை வாழ்க்கையில் சந்திப்பவர் என்றாலும் பிரிட்டிஷ் ராணியார் இரண்டாவது எலிசபெத் கூச்ச சுபாவம் உள்ளவர் என்றால் நம்பவா முடிகிறது?

ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு வாழ்த்துச் செய்தி தருவது பிரிட்டனில் வழக்கம். அச் செய்தி முன்னதாகவே பதிவு செய்யப்படும். கிறிஸ்மஸ் நாளன்று பிற்பகல் 3 மணிக்கு பி. பி. சி. தொலைக்காட்சி மூலம் 10 நிமிஷங்களுக்கு ஒளிபரப்பப்படும்.

வாழ்த்துச் செய்தி ஒளிபரப்பாகும் போது பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அரண்மனையின் பிரதான கூடத்தில் கூடியிருந்து கேட்பார்கள். பிறகு தங்களுக்குள் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டு மற்ற விஷயங்களைப் பேசுவார்கள்.



அரச குடும்பத்தார் கூடும் அந்த நேரத்துக்கு தேவைப்படும் எல்லா ஏற்பாடுகளையும் (சிற்றுண்டி, பானங்கள்) முன்னின்று கவனிக்கும் ராணியார், நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்போது அருகில் உள்ள தனி அறைக்குச் சென்று ஒளிபரப்பைத் தான் மட்டும் தனியாக இருந்து கேட்பார். அது முடிந்த பிறகுதான் கூடத்துக்கே வருவார். தான் விடுவிக்கும் செய்தியை உறவினர்கள் பார்க்கும் போது அங்கே இருப்பதற்கு அவருக்கு அவ்வளவு கூச்சம்.

"ராணியார் நகைச்சுவை உணர்வு மிக்கவர். தன்னைத் தானே கேலி செய்து கொள்வார். தான் செய்த, செய்யும் காரியங்களை வாய்விட்டு விமர்சிப்பார். வயது ஏற ஏற இந்தப் போக்குஅதிகமாகி வருகிறது. அவருடைய இந்தக் கூச்ச சுபாவமும் வினோதமானது" என்று அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இது குறித்து தெரிவிக்கிறார்.

## மாணவிகளுக்கு செக்ஸ் தடுப்பூசி

இங்கிலாந்தில் பருவம் அடையும் நிலையில் உள்ள 12 அல்லது 13 வயது மாணவிகளுக்குப் பள்ளியில் தடுப்பூசி போட அரசு தயாராகி வருகிறது.

அமெரிக்காக உட்பட மேற்கத்திய நாடுகளில் 12 வயதைக் கடக்கும்போதே பள்ளி மாணவிகள் செக்ஸ் உறவுக்குத் தயாராகி விடுவது அதிகம்.



மாணவர்களுடன் அவர்களது இந்தத் தொடர்பால் H.I.V என்ற வைரஸ் உடலுக்குள் புகுந்து பெண்ணின் இளம்வயதிலேயே கான்சரை ஏற்படுத்துவது அதிகரித்து வருகிறது.

இதனால், ஆண்டுக்கு 1000 பேர் வரை பலியாகின்றனர். இதைத் தடுக்க, 12 அல்லது 13 வயது பள்ளி மாணவிகளுக்கு H.I.V தடுப்பூசி போட இங்கிலாந்து சுகாதாரத்துறை தயாராகி வருகிறது. கடந்த ஆண்டுதான் இந்தத் தடுப்பூசிக்கு அரசு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இதற்கு பெற்றோரிடையே எதிர்ப்பும் உள்ளது. இது பாதுகாப்பற்ற செக்ஸ் உறவை ஊக்கப்படுத்திவிடும் என்கின்றனர் அவர்கள். எனினும், பல பெற்றோர்கள் ரூ.38 ஆயிரம் விலையுள்ள இந்தத் தடுப்பூசியை சொந்தமாக வாங்கி யாருக்கும் தெரியாமல் பெண் குழந்தைகளுக்கு 12 வயதில் போட்டு விடுவதும் நடக்கின்றது.

# புரட்சித் தலைவர் 06 பிடல் காஸ்ட்ரோ



**இதனால்** சில ஏழை மாணவர்கள், முகம் நிமிர்த்திப் பேசவே கூச்சப்பட்டார்கள் அவமானமாகக் கருதினார்கள். இதனால் அவர்கள் தொடர்ந்து கல்வி கற்க ஆர்வம் இல்லாதவர்களாக இருந்தார்கள். கல்வியை இடை நடுவில் விட்டுத் தோட்டங்கள், கரும்பு வயல்களில் வேலைக்குப் போனார்கள். பிடலைவிடத் திறமையாகப் படிக்கக்கூடிய ஏழை மாணவர்கள்கூட படிப்பை இடையில் நிறுத்திக் கொண்டார்கள். அவர்களில் அநேகமானவர்கள் பாடசாலைக்கு வரும் போது காலைச் சாப்பாடுகூட இல்லாமல் வெறும் வயிற்றோடு வந்து படிக்கமுடியாமல் மயங்கி விழுந்ததையும் பிடல் கண்டிருக்கிறார். 'ஏன் இவர்களுக்கு இந்த நிலை?' என்று பிடல் தனக்குள் கேள்விகளை அடுக்கிக் கொண்டார். சில சமயம் இந்தக் கேள்விகளை தன் தந்தையாரிடமும் கேட்பார். "அவர்கள் ஏழைகள்" என்பார் தந்தை. இந்தப் பதில் பிடலுக்கு ஏற்புடையதாக இருக்காது. "அவர்கள் பண்ணைகளில் முழுநேரமாக வேலை செய்கிறார்கள். ஏன் அவர்களின் பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது" என்று திருப்பிக் கேட்பார். பிடலுக்கு எப்படிச் சொன்னால் புரியும் என்று தந்தையார் சிந்திக்கும் போதே, "அப்பா நமக்கு மட்டும் ஏன் இவ்வளவு பணம்? நமக்கு எப்படி இவ்வளவு நிலங்கள் வந்தன?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு போவார்.

தந்தையார் பல பதில்களை மிகப் பக்குவமாக எடுத்துச் சொன்னாலும் பிடலால் எதையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் முரட்டு சுபாவம் நிறைந்த அப்பாவுடன் நீண்ட விவாதத்தை நடத்த முடியாது என்பதால் பல தடவைகளில் தன் கேள்விகளை இடையில் நிறுத்திக் கொண்டு சென்று விடுவார்.

பிடலின் இந்தக் கேள்விகளையும், யோசனைகளையும் புரிந்து கொண்டவராக இருந்தவர் பிடலின் ஆசிரியைதான். அதிகமாக வெள்ளைக்கார ஆசிரியர்கள் இருந்த போதிலும், ஒரு கறுப்பு இன ஆசிரியை இருந்தார். அவர் தான் பிடலின் சிந்தனைகளை அடையாளம் கண்டவர். அவர் பிடலுக்கு அன்போடு உற்சாகமூட்டினார். "நீ நன்றாகப் படிக்க வேண்டும். பெரிய மனிதனாக வர வேண்டும்" என அடிக்கடி புத்தி சொல்வார். தனது ஓய்வு நேரத்திலும், பிடலை அழைத்துப் படிப்பைச் சொல்லிக் கொடுப்பார். கல்வியைத் தொடர முடியாதோ என்று நினைத்த பிடலை, தொடர்ந்து படிக்கவைத்தவர் அந்த ஆசிரியைதான். அவர்மட்டும் அன்று எல்லோரையும் போல் பிடலை அடையாளம் காணாமல் இருந்திருந்தால், பிடலின் வாழ்க்கை வேறொரு திசையில் பயணித்திருக்கும். அந்த ஆசிரியைதான், ஜோஸ் மாட்டியின் புரட்சிப் பாடல்களையும், தேசபக்திப் பாடல்களையும் பிடலுக்குச் சொல்லிக் கொடுப்பாராம். அந்த ஆசிரியை சொல்லிய ஜோஸ் மாட்டியின், தேசபக்தியும், புரட்சியும் நிறைந்த பாடல்களைக் கேட்கும் போதே பிடல் வேறொரு கற்பனை உலகில் சஞ்சரிப்பது போல் மெய்மறந்து ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பாராம். அந்தப் பாடல்களில் இருந்த உணர்ச்சி பூர்வக் கருத்துக்கள் பிடலின் சிந்தனைகளுக்கு உரமூட்டின. கல்வியை விடவும் அந்த ஆசிரியை கூறும் ஜோஸ் மாட்டியின் பாடல்களைக் கேட்பதற்கே ஆசிரியையைத் தேடி பிடல் போவார். பிடலின் ஆர்வத்தை மதித்த ஆசிரியையும், நேரம் கிடைக்கும் போதெல்லாம், அலுப்புப் பார்க்காமல் மாட்டியின் தேசபக்திப் பாடல்களைப் பிடலுக்குச் சொல்லிக் கொடுத்தார். பிடலின் புரட்சிக்கு வித்திட்டது அந்த அம்மையார் விதைத்த ஜோஸ் மாட்டியின் விதைகள்தான் என்றால் அது மிகையாகாது.


உயர் படிப்புக்காக பிடல் ஓரியண்ட் மாநிலத்தில் இருந்து சாண்டியாகோவில் ஒரு கத்தோலிக்கப் பாடசாலையில் சேரவேண்டியதாயிற்று. அங்கே தங்கியிருப்பதற்கு, டன் ஏஞ்சலின் நண்பர் ஒருவர் வீட்டில் பிடலும் சகோதரிகளும் தங்கியிருந்து கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை பிடலின் தந்தையார் செய்தார்.

உணவுக்காகவும், தங்குவதற்காகவும், கைச்செலவுக்காகவும் தந்தையார் மாதா மாதம் பணம் அனுப்பிக்கொண்டிருந்தார். தந்தையார் எல்லா வசதிகளையும் செய்து தந்தபோதும், பிடலின் எண்ணமெல்லாம் ஜோஸ் மாட்டியின் பாடல்களிலும், அந்த ஆசிரியை மீதுமே இருந்தது. ஆனால், பிள்ளைகளைப் பெரிய பாடசாலைகளில் சேர்த்துவிட்டு, உயர் படிப்புக்காக அங்கேயே தங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான பணத்தையும் அனுப்புவதை டன் ஏஞ்சல் தனக்குக் கௌரவமாகக் கருதினார். இதையே சக பணக்காரர்களிடம் டன் ஏஞ்சல் பெருமையாகச் சொல்லுவார்.

தருவது : எம். கேஷிகன்.

ஓரியண்ட் மாநிலத்திலிருந்து மேல் படிப்புக்காகச் சாண்டியாகோவுக்குப் போன ஒரு சிலரில் பிடலும், சகோதரிகளும் அடங்குவர். இதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று பிடலுக்கு வசதி வாய்ப்பு இருந்தது தான்.

சின்ன வயதிலிருந்து பிடலுக்கு இருந்து வந்த யாருடைய கட்டளைகளுக்கும் பணிந்து நடக்காத குணம் மீண்டும் தலைதூக்கியது. மேல் படிப்புக்காக தங்கியிருந்த வீட்டில் தந்தையாரின் நண்பர் போட்ட பல கட்டுப்பாடுகள், கண்டிப்பான நடைமுறைகள் பிடலுக்குப் பிடிக்கவில்லை. முரண்பட்டார். தந்தையின் நண்பர் பணத்துக்காகவும், தன் தந்தையிடம் நல்ல பெயர் எடுத்துக் கொள்ளவும் அவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதைப் பிடல் புரிந்து கொண்டார். அவர் அன்பு செலுத்துவது போலவும், கௌரவப்படுத்துவது போலவும் காட்டிக் கொள்வது வெறும் பாசாங்கு என்று புரிந்து கொண்டார். இதனால் தொடர்ந்தும் அந்த வீட்டில் தங்கியிருக்க விரும்பாமல் தன் கல்லூரி நண்பர்களுடன் கதைத்து, கல்லூரியிலேயே தங்கிவிடுவது என்ற முடிவை எடுத்தார். பிடல் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதால் பிடலின் தந்தையார் இதற்குச் சம்மதித்து பிடலை கல்லூரியில் தங்கிப் படிக்க அனுமதித்தார். பிடல் தனியாகச் சென்றுவிடவும், தம்பியும், சகோதரிகளும் மிகுந்த துயரம் அடைந்தனர்.



அண்ணனுடன் கல்லூரி வளாகத்தில் போய்த் தங்கமுடியாத படியால், பிடலின் தம்பி தன் படிப்பை இடையில் முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பினார். ஊரில் பண்ணையில் ட்ராக்டர் ஓட்டுவதில் அக்கறை காட்டினார். ஆனாலும் பிடலின் சகோதரி வேறொரு பாடசாலையில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார்.

சகோதரனின் படிப்பு இடைநடுவில் தடைப்பட்டதற்கும், சகோதரி மன உளைச்சலுக்கு மத்தியில் படித்துக் கொண்டிருப்பதற்கும் தந்தையின் நண்பரின் பொய்யான நட்புத்தான் காரணம் என்று நினைக்கையில், பிடலுக்குக் கோபம் வரும். அதைத் தாங்கிக் கொண்டார். தான் எதிர்கொள்ள வேண்டியது இவரை அல்ல என்பதில் உறுதியாக இருந்தார். படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தினார்.

(அசத்தல் தொடரும்)




# விண்வெளி சோதனையில் விபத்து: ராக்கெட் வெடித்து 7 விண்வெளி வீரர்கள் மரணம்

**அமெரிக்க** நிபுணர்கள் விண்வெளிக்கு ராக்கெட் மூலம் வீரர்களை அனுப்பி சோதனை நடத்தி வருகிறார்கள். இதற்காக அங்குள்ள கென்னடி முனையில் ராக்கெட் ஏவுதளம் உள்ளது.

### ராக்கெட் வெடித்துச் சிதறியது

28-01-1986 அன்று "சாலஞ்சர்" என்ற ராக்கெட் ஏவப்பட்டது. இந்திய நேரப்படி அது இரவு 10.08 மணிக்குப் புறப்பட்டது. வழக்கம்போல புகையைக் கக்கியபடி வானத்தில் சீறிப் பாய்ந்தது. ஆனால் விஞ்ஞானிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் அந்த ராக்கெட் திடீரென்று வெடித்துச் சிதறியது. புறப்பட்ட 2 நிமிட நேரத்தில் இந்தப் பயங்கரச் சம்பவம் நடந்தது. ராக்கெட் பறப்பதைப் பார்க்கக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் உறைந்து போனார்கள். விண்வெளி சோதனைப் பயணத்தில் இது மிகவும் மோசமான சம்பவம் என்று கூறப்பட்டது.


விண்வெளி வீரர்கள் புறப்படும் போது.....

### 7 வீரர்கள் சாவு

"சாலஞ்சர்" ராக்கெட்டில் 2 பெண்கள் உட்பட 7 வீரர்கள் சென்றார்கள். அந்த 7 பேரும் பரிதாபமாக இறந்தார்கள். அந்த 7 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

1) கிறிஸ்டா மக்னீப் (வயது 37)
2) கமாண்டர் ஸ்கோபி (46)
3) மைக்கல் ஜே.ஸ்மித் (40)
4) ஜூடித் ரெஸ்னிக் (36)
5) ரொனால்டு ஈ மக்டுளர் (35)
6) எலிசன் எஸ். ஒனிசிகா (39)
7) கிரகரி ஜோர்விஸ் (41).

### ஆசிரியை

உயிர் இழந்தவர்களில் ஒருவரான கிறிஸ்டா மக்னீப், பள்ளிக்கூட ஆசிரியை ஆவார். நியூ ஹாம்ஷயர் நகரைச் சேர்ந்தவர். அங்குள்ள கொன்கோர்ட் உயர்நிலைப் பள்ளியில் சமூகப் பாட ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார்.

ராக்கெட்டில் ஒரு ஆசிரியையைப் பறக்க விட விஞ்ஞானிகள் விரும்பினர். இதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பித்தனர். இதில் அதிர்ஷ்டம் காரணமாக கிறிஸ்டா மக்னீப் தேர்வு பெற்றார்.

ஆசிரியை ராக்கெட்டில் பறப்பதால், அதைச் சுட்டிக்காட்டுவதற்காக புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி மக்னீப், ராக்கெட்டில் பறந்தபடியே பூமியில் உள்ள மாணவர்களுக்கு 15 நிமிடம் வீதம் 2 தடவை பாடம் நடத்துவது என்று திட்டமிட்டு இருந்தார்கள்.

அதை டெலிவிஷனில் நேரடியாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் காட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ராக்கெட் விபத்தினால் இந்தத் திட்டம் சீர்குலைந்து போனது.

கிறிஸ்டா ராக்கெட்டில் பறக்க விடப்படுவதைப் பார்த்து மகிழ அவரது தந்தை எட்வர்ட், தாய் கிரேஸ், 9 வயது மகள் எல்லோரும் கேப்கானவர்ஸ் விண்வெளி நிலையத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கும் மற்ற விண்வெளி வீரர்களின் குடும்பத்தினருக்கும் விசேஷ இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது.

ராக்கெட் பறக்கத் தொடங்கியதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் புன்னகை மலர இருந்தார்கள். இந்த மகிழ்ச்சி 2 நிமிடம் கூட நீடிக்காமல் போய் கண் கலங்கினார்கள். "கடவுளே ஐயோ.... இல்லை.... இல்லை...." என்று அலறினார்கள். ஆசிரியை குடும்பத்தினரை நண்பர்கள் அரவணைத்து அழைத்துச் சென்றனர்.

ஆசிரியை, வேலை செய்த பள்ளியிலும் ராக்கெட் பறக்க விடப்படுவதைப் பார்க்க விசேட ஏற்பாடு செய்து இருந்தார்கள். பள்ளிக்கூடமே விழாக்கோலம் பூண்டு இருந்தது. 1,200


அதிர்ச்சியில் உறவினர்கள்

மாணவர்கள் வகுப்பு அறைகளில் சத்தம் போடும் கருவிகளுடன் டெலிவிஷன் பெட்டி முன் காத்து இருந்தார்கள்.

ராக்கெட் புறப்பட்ட உடன் பள்ளிக்கூடத்தில் உற்சாகமும், ஆரவாரமுமாக இருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் நிலைமை தலைகீழாக மாறியது. ஆரவாரம் மறைந்து பள்ளிக்கூடம் துயர வெள்ளத்தில் மூழ்கியது.

### ரீகன் அதிர்ச்சி

ராக்கெட் வெடிக்கும்போது அதிபர் ரீகன் தன் உதவியாளர்களுடன் ஆலோசனை நடத்திக்கொண்டு இருந்தார். தகவல் தெரிவிக்கப்பட்டபோது அவர் அதிர்ச்சி அடைந்தார்.

ராக்கெட் வெடித்துச் சிதறிய காட்சியை டெலிவிஷனில் போட்டுப் பார்த்தார். அப்போது அவர் துயரத்துடன் மௌனமாகக் காணப்பட்டார். உயிர் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த துணை ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷை அனுப்பி வைத்தார்.

### நிறுத்த மாட்டோம்

ராக்கெட் விபத்து பற்றி அதிபர் ரீகன் கூறியதாவது:-

"விண்வெளியை வெல்ல வேண்டும் என்ற நமது திட்டத்தை இந்த விபத்து காரணமாகக் கைவிடமாட்டோம். நமது ஆராய்ச்சி முடிவடைந்து விடவில்லை. இப்போதுதான் தொடங்கி இருக்கிறது. நமது திட்டத்தை நிறுத்திவிடமாட்டோம்.

ராக்கெட்டில் பயணம் செய்தவர்கள் தைரியமானவர்கள். ஆபத்துக்கு அஞ்சாமல் சென்றார்கள். வருங்காலம் கோழைகளுக்கு அல்ல. தைரியசாலிகளுக்குத்தான் சொந்தம்.

முதல் முறையாக ராக்கெட்டில் பயணம் செய்த ஆசிரியை மக்னீப் உயிர் துறந்துவிட்டார். ஆனாலும் நாம் ஆராய்ச்சியைத் தொடர்வோம். மேலும் பல சாதாரண மக்களை, ஆசிரியைகளை விண்வெளி ஆராய்ச்சியில் பயன்படுத்துவோம்.

இப்போது நடந்த விபத்து தேசத்துக்கே பெரிய இழப்பு. இதனால் நானும், என் மனைவி நான்சியும் துயரம் அடைந்து இருக்கிறோம்" இவ்வாறு ரீகன் கூறினார்.

பிரதமர் ராஜீவ் காந்தி அன்று இரவு ரீகனுடன் தொடர்புகொண்டு தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

### 9 தடவை வெற்றிப் பயணம்

வெடித்துச் சிதறிய அந்த "சாலஞ்சர்" ராக்கெட்டு ஏற்கனவே 9 தடவை விண்வெளிக்கு சென்று திரும்பியது. 10ஆவது முறையாக 6 நாட்கள் விண்வெளியில் சுற்றிவிட்டு பூமிக்குத் திரும்ப திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இந்தப் பயணம் வெற்றிகரமாக அமையவில்லை.

இறந்தவர்களின் உடல்களைத் தேடிக் கண்டுபிடிக்க 'அட்லாண்டிக்' கடல் பகுதிக்கு கப்பல்களும், ஹெலிகாப்டர்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

ராக்கெட் கடல் மட்டத்துக்கு மேலே 60 மைல் உயரத்தில் சென்றபோது வெடித்தது. அதன் சிதைவுகள் நாலாபக்கமும் நொறுங்கிக் கிடந்தன. அட்லாண்டிக் கடலில் 30 மைல் தூரம் வரை சென்று தேடினார்கள். வீரர்களோ அல்லது அவர்களது உடல்களோ கிடைக்கவில்லை. 7 மணி நேரம் தேடியபின் ராக்கெட்டின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

இந்த "சாலஞ்சர்" ராக்கெட்டின் எடை 100 டன்.

ரூபா.1,440 கோடி செலவில் உருவாக்கப்பட்டது.

ராக்கெட் வெடித்த சம்பவத்துக்கு உலக நாடுகள் சபை (ஐ.நா.) பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் வருத்தம் தெரிவிக்கப்பட்டது. அனுதாபம் தெரிவித்து அதிபர் ரீகனுக்கு ஐ.நா. சபை செயலாளர் குயிலர் செய்தி அனுப்பினார்.

### 3 ஆவது விபத்து

இந்தச் சம்பவத்துக்கு முன்பு 24 முறை அமெரிக்க வீரர்கள் ஷட்டில் ராக்கெட்டில் போய் பத்திரமாகத் திரும்பி இருக்கிறார்கள். 25-ஆவது தடவை சென்றபோது இப்படி விபத்தில் சிக்கி இருக்கிறது.


ராக்கெட் வெடித்துச் சிதறும் போது

விண்வெளிப் பயணத்தில் வீரர்கள் உயிர் இழந்தது இது 3ஆவது தடவை.

1967ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ராக்கெட்டில் சென்ற 3 அமெரிக்க வீரர்கள் திரும்பும் வழியில் மூச்சுத் திணறி செத்துப்போனார்கள். ஏற்கனவே 4 ரஷ்ய வீரர்களும் ராக்கெட்டில் பறக்கும்போது இறந்து விட்டார்கள்.

# பாப்பா முரசு



பொன்னும் நல்ல மணியும் – சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்!
மின்னு நின்றன் வடிவிற் பணிகள்
மேவி நிற்கும் அழகை...

– சுப்பிரமணிய பாரதியார்

## பணச் செருக்கு



விமலன் பலசரக்குக் கடையொன்றில் வேலை பார்த்து வந்தான். மிகவும் ஏழை. படிக்க வேண்டும் என்று ஆசை. இருப்பினும் குடும்பத்தின் வறுமை காரணமாகக் கடையில் வேலைக்குச் சேர்ந்தான். அவன் முதலாளி வேதநாயகம் சரிவர நடத்துவதே கிடையாது.

'டே...நாயே, வாடா...போடா' என்று எப்பொழுதும் மரியாதை இன்றிக் கூப்பிடுவார். இது அவனுக்குப் பல நேரம் மனவருத் தத்தைக் கொடுக்கும். 'டேய்...பரதேசி. அங்கு என்ன செய்ற...சோத்துக்கு வழியில்லைன் னாலும் சுறுசுறுப்பைக் காணோமே...'எனத் திட்டுவார்.

ஆனாலும், என்ன செய்ய, 'நாய் வேஷ மென்றால் குரைத்துத் தானே ஆக வேண்டும்' என்று எண்ணி, தன் வேலையை ஒழுங்காகச் செய்தான். கல்வியில் தோற்றாலும் தொழிலில் ஜெயிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு முழு மூச்சாக அவன் செய்த வேலையில் கவனம் செலுத்தி வந்தான்.

அதனால் அவன் வெகு சீக்கிரத்திலேயே, அந்தத் தொழிலின் நுணுக்கமெல்லாம் அறிந்து கொண்டான். அவன் அவ்வளவு சீக்கிரம் தொழில் நுணுக்கங்களைக் கற்றபோதும், அவன் முதலாளி அவனை மதிப்பதே கிடையாது. அப்போதும் அதே வாடா போடா தான். ஆனாலும், அவன் அதைக்

### பாப்பா முரசு சிறுகதை

கண்டு கொள்ளாமல், செய்யும் தொழிலைத் தெய்வமாக எண்ணிச் செய்தான். அதனால் அவனுள் தொழில் பக்தி கூடியது.

அதன் விளைவாக, அவன் வெகு சீக்கிரத்திலேயே, தன் மீது மரியாதை இல்லாத அந்த முதலாளியை விட்டுப் பிரிந்து, தனியாகச் சின்னதொரு பலசரக்குக் கடை தொடங்கினான். அந்தக் கடை திறப்பு விழாவிற்கு தன் பழைய முதலாளியையே வந்து திறந்திடச் செய்தான். அவரும் மரியாதைக்காக வந்து கடையைத் திறந்து வைத்துப் போனார். ஆனாலும் உள்ளுக் குள் ஆத்திரம் பொங்கியது. என்ன செய்ய முடியும். அதன் பிறகு அவனின் கடின உழைப் பாலும், திறமையாலும் அந்தத் தொழிலில் படிப்படியாக உயர்ந்தான். கொஞ்சக் காலத்திலேயே அவன் மிகப் பெரிய கடைக்கு முதலாளியானான்.

அதேநேரம், விமலனின் பழைய முதலாளி, தன்னுடைய மரியாதை இல்லாத பேச்சாலும் தவறான நடவடிக்கையாலும், தன் வியா பாரத்தைத் தானே கெடுத்துக் கொண்டார். ஒரு பையனும் அவர் கடையில் நிலைக்கவே இல்லை. எல்லாரும் ஓடிவிட்டதால் சரியாகப் பிசினஸ் செய்ய முடியாமல் தவித்தார். அத்துடன் அவரின் ஆடம்பரச் செலவு அவரை வெகு சீக்கிரத்திலேயே மிகப் பெரிய கடனாளி ஆக்கியது.

கடன் தொல்லை தாளாமல், தான் குடியிருந்த வீடு, வாங்கிய சொத்து எல்லா வற்றையும் விற்று, கடனையெல்லாம் அடைத்தார். கடைசியில், வயிற்றுப்பாட்டிற்காக ஏதாவது வேலை பார்த்தால் நல்லது என்ற எண்ணத்தில் ஒவ்வொரு இடமாக வேலை தேடி அலைந்தார். கடைசியில் தன்னிடம் வேலை பார்த்து, இன்று பெரிய ஆளாக இருக்கும் விமல னிடம், "ஏதாவது வேலை கிட்டுமா?" என்று கேட்டார். அதைக் கேட்ட விமலனின் மனம் கலங்கியது. தன்னுடைய முதலாளிக்கு இன்று இப்படியொரு நிலையா? என்று எண்ணி வருந் தினான். உடனே அவரை நல்லபடியாகக் கவனித்தான்.

"நம்ம முதலாளியை...ஒரு காலத்தில் இவர் எப்படி எல்லாம் தரக்குறைவாகப் பேசினார் தெரியுமா? அப்படி இருந்தும் நம்ம விமலன் சார், அவரோட முதலாளியை எப்படிக் கவ னிக்கிறார் பாருங்க...நம்ம விமலன் சார் மனசு யாருக்கு வரும்?" என்று கடையில் வேலை செய்பவர்கள் பேசிக் கொண்டது பழைய முதலாளியின் காதில் விழவே, தான் செய்த தவறுகளை எண்ணி கண்ணீர் விட்டு அழுதார்.

அருமைக் குழந்தைகளே! இன்று பணம் இருக்கிறது என்பதற்காக யாரையும் கேவலமாக நினைக்கக்கூடாது. மரியாதை, அன்பு, அடக்கம், பணிவுடன் இருந்தால் வாழ்க்கையில் எப் போதுமே நல்ல நிலைமையில் இருக்கலாம். சரியா?

## ஆத்திசூடி


### கெடுப்பது ஒழி

நீ, மற்றவர் வாழ்வை கெடுத்து அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கக் கூடிய தீமையான செயல்களில் ஈடுபடாதே!

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## மழை!



சில்லென்று உடல் சிலிர்க்க
குளிர்ந்த காற்று வீசுது!
மரக் கிளைகள் படபடவென
இலைகள் தனை உதிர்க்குது!
குளத்து தவளை வெளியில் வந்து
கரகரவென கத்துது!

கரிய மேகம் வான் வெளியில்
அணி அணியாய் திரளுது!
பளிச்சென்று வடக்கோடியில்
மின்னல் பல அடிக்குது!

வரப்போகுது மழை என்று
மக்கள் மனம் மகிழுது!
பலத்த இடி ஓசையுடன்
சட சடவென மழை பெய்யுது!
காய்ந்து கிடந்த பூமித்தாயின்
மேனி எங்கும் நனையுது!
மனதிற்கினிய மண்ணின் மணம்
வீதியெங்கும் கமழுது!

மழையைக் கண்ட மயிலினங்கள்
தோகை விரித்து ஆடுது!
மழையில் தன்னை நனைத்துக்
கொண்ட
மரங்கள் மெல்லத் துளிர்க்குது!

வண்ண மலர்கள் பூத்துக்கொண்டு
வாசம் எங்கும் வீசுது!
வறட்சி போக்கி வாழ்வளித்த

மழையின் சிறப்பைப் போற்றுவோம்!
வான் மழை நன்கு பெய்திடவே
வீட்டிற்கொரு மரம் நடுவோம்!

## அதிசய உலகம்

### ஒட்டகம் ஒட்டகம்தான்!

ஒட்டகமும் யானையைப் போன்றே இருந்தாலும், இறந்தாலும் பயன்படுகிறது. ஒட்டகம் ஒரு நாளைக்கு 18 லீட்டர் பால் கறக்கும். பசுவின் பாலைவிட இனிப்பாக இருக்கும். காய்ச்சினால் திரைந்து விடும். இதன் உரோமம் கம்பளி செய்வதற்கும் தோல் கூடாரத் துணி செய்வதற்கும் செருப்புகள் தைப்பதற்கும்



குதிரைச் சேணத்திற்கும் பயன்படுகின்றது. இதன் சாணம் அடுப்பு எரிக்கப் பயன்படுகிறது. ஒட்டகத்தின் இறைச்சி அரபு நாடுகளில் விரும்பி உண்ணப்படுகிறது. இதன் எலும்பிலிருந்து பலவிதமான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

ஒட்டகத்தின் தாடி ரோமத்திலிருந்து தூரிகை தயாரிக்கப்படுகிறது. எகிப்தில் நிலத்தை உழுவதற்கும், ராஜஸ்தானத்தில் வண்டி இழுக்கவும் ஒட்டகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சவாரி ஒட்டகங்களுக்கு டிராமிட்ரீ என்றும் இராணுவத்திலிருக்கும் ஒட்டகங்களுக்கு மெஹ்ரீ என்றும் பெயர்.

இவற்றின் முதுகில் 450 கிலோ எடையை ஏற்றலாம். ஒட்டகத்தின் மூலம் ஒரு நாளைக்கு 120 முதல் 140 கிலோ மீட்டர் வரை பயணம் செய்யலாம். சீனாவிற்கும், ரஷ்யாவிற்கும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒட்டகத்தின் வாயிலாக வணிகமும் நடந்துள்ளது.

### ஒட்டகப் பால்

ஒட்டகத்தின் பாலில் தாதுச் சத்துக்களும், உயிர்ச் சத்துக்களும் அதிக அளவில் இருக்கின்றன. பசும்பாலில் இருப்பதைவிட 10 மடங்கு இரும்புச் சத்து இதில் இருக்கிறது.

இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி ஒட்டகப் பாலுக்கு நிறையவே உண்டு. எய்ட்ஸ், புற்றுநோயை எதிர்த்துப் போராடும் 'ஆன்ட்டிபாடி'கள் இதில் அதிகமிருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மேலும் ஞாபக மறதிக்கும் சீ - டைப் மஞ்சள் காமாலைக்கும் ஒட்டகப் பால் நல்ல பலன் அளிக்கிறது.

இந்தியா மற்றும் அரபு நாடுகளில் 20 கோடிப் பேரும், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஒரு கோடிப் பேரும் ஒட்டகப் பால் அருந்துகிறார்கள்.

ஒட்டகப் பாலின் விலை அதிகம். தவிர, இந்தப் பாலில் இருந்து வீசும் ஒருவித வாசனை பெரும்பாலானவர்களுக்குப் பிடிப்பதில்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.01.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 675**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 673

**பரிசுக்குரியவர்:**
**கே.ஹரிணி,**
**19, பன்சல வீதி, இராகலை, ஆள்கரனோயா.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, 61/1ஏ/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்தை. | கே.பிரஷாந்தி, 89, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| எம்.யூ.எம்.நஸ்றுல் உஸ்மான், 212 ஹுகொஹதென்ன, அக்குறணை, கண்டி. | சௌமியா தயாபரன், 248/38, ஆட்டுப்பட்டி தெரு, கொழும்பு - 13. |
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | ரி.ஆர்.ஆன் டிலுக்ஷி, 82, புதுச் செட்டித்தெரு, கொழும்பு - 13. |
| எஸ்.விக்னேஸ்வரி, 22, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13. | ஜெ.திவாரீசன், ஆண்டு 3ஏ, ம.இ.வி., கொழும்பு. |
| ஜே.பி.சுதர்ஷிலா, 32/2 கோணவல ரோட், திகண ரஜவெல்ல. | சி.மகேஸ்வரன் எம்.தீபன், தங்கக்கலை தோட்டம், லிந்துல. |

## சில விடுகதைகள்

1. நான் கூப்பிட்டால் அவனும் கூப்பிடுவான் அவன் யார்?
2. நான் அவனைப் பார்த்தால் அவன் என்னைப் பார்ப்பான்; நானும் அவனும் ஒன்றே. நாங்கள் யார்?
3. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இரவில் மட்டும் எண்ணற்ற பூக்கள் அது என்ன?
4. சுடுவான், சுட்டதைத் தின்பான் அவன் யார்?
5. குட்டைத் தண்ணீரில் எட்டுக் கப்பல் அது என்ன?
6. தாய் தரையிலே, மகள் மன்னர் முடியிலே அது என்ன?
7. தரையில் குதித்தவன் தண்ணீரில் மிதந்தான் அவன் யார்?
8. சின்னப் பெட்டிக்குள் சித்திரம் கண்டேன் அது என்ன?
9. புள்ளி போட்டவன் துள்ளிப் போகிறான் அது என்ன?
10. காடு மேடாய்த் திரிந்தாலும் கூட்டம் கூடி உண்பான் அவன் யார்?

**விடைகள்**

1. எதிரொலி
2. கண்ணாடி
3. நட்சத்திரங்கள்
4. தோசை
5. தவளை
6. முத்துச்சிப்பி - முத்து
7. பந்து
8. தொலைக்காட்சி
9. மான்
10. காகம்.

# தகவல் பெட்டி

## தோல்விப் பயணம்




**பிரிஸ்டல்** பல்கலைக்கழகக் கடற்படை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் படகொன்றின் மூலம் அத்லாந்திக் சமுத்திரத்தைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். 'அத்லாந்திக் வரியர்' என்ற பெயர் கொண்ட படகின் மூலம் இச்சவாரியை 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் திகதி ஆரம்பித்தனர். சார்ள்ஸ் பாயர்ஸ்டோவ் (இடது புறம்) ரொம் பிரைற் ஆகிய இருவரும் கனரி தீவுகளிலுள்ள லாகொமேரா என்ற இடத்திலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் அன்ரிகுவாவை நோக்கித் தமது படகுச் சவாரியை ஆரம்பித்தனர். மூவாயிரம் மைல்கள் தூரத்தை இவர்களால் தாண்ட முடிந்திருந்தால், அத்லாந்திக் சமுத்திரத்தைப் படகு மூலம் கடந்த மிக இளைய வயதினர் என்ற சாதனையை இவர்கள் புரிந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் அச் சாதனையைப் புரிய முடியவில்லை.

## யாத்திரை




**ஆண்டி** கீச் என்பவர் சிறு இறக்கைகள் கொண்ட மென்ரக விமானமொன்றில் பறந்து பதினொரு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இவ் வருட ஆரம்பத்தில் 10,880 அடி உயரத்தில் பறந்து 38 மைல்கள் கடந்து சாதனை படைத்தார். 52 கலன்கள் கொள்ளக்கூடிய இரண்டு துணை எரிபொருள் டாங்கிகளைப் பொருத்திக் கொண்டு பறந்து மற்றொரு சாதனையைப் படைத்தார். தரையிறங்காமலேயே 667 மைல்கள் பறந்து மற்றொரு சாதனையைப் படைத்தார். மணிக்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் பறந்து சாதனை படைத்தார்.

## வானம்பாடி




## புராதன கல்



**பிரான்ஸின்** கர்நாக் என்ற கிராமத்தில் வரலாற்றுக் காலத்துக்கு முந்திய மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கற்சின்னங்கள் காணப்படுகின்றன. தனிக் கற்களாகவும், பல கற்களைக் கொண்ட கூட்டுச் சின்னங்களாகவும் இவை காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முந்திய கற்காங்களில் இவை எழுப்பப்பட்டிருக்கின்றன. வரலாற்று ஆய்வாளர்கள் கூற்றுப்படி ஆரம்ப, மத்திய மற்றும் கற்காலங்களிலும், பிந்திய நியோதிலிக் மனிதனின் கற்காலங்களிலும் இவை நிர்மாணிக்கப்படிருக்கின்றன.

**அமெரிக்காவைச்** சேர்ந்த ஆர்தர் பிளெசிற் என்பவரே மிக அதிக தூரம் தனியொருவராகச் சமய யாத்திரையை மேற்கொண்டவரென்ற பெயரைத் தட்டிச் சென்றுள்ளார். 1969ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி 12 அடி உயரமான மரச் சிலுவையைச் சுமந்து கொண்டு, வேதாகமப் போதனையை மேற்கொண்ட இவர், கடந்த 37 வருடங்களாக ஏழு கண்டங்களையும் கடந்து இன்னமும் உலகைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றார். 59,571 கிலோ மீற்றர்கள் அல்லது 37,015 மைல்களை இவர் கடந்துள்ளார். நாடுகள், தீவுகள், கிராமங்களென இதுவரை 305 தேசங்களைக் கடந்திருக்கிறார்.

## பெரிய தூபி



**உலகிலேயே** மிகப் பெரிய பௌத்த தாகபை அல்லது தூபி இலங்கையில் தான் உள்ளது. புராதன நகரான அநுராதபுரத்தில் அமைந்திருக்கும் கஜதவனாராமய தூபியேயே இந்தப் பெருமையைத் தட்டிச் செல்கிறது. செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்தத் தூபியின் உயரம் 120 மீற்றர்கள். அதாவது 400 அடிகள்.



தனுஷ் - ஷ்ரேயா
திருவிளையாடல் ஆரம்பம்

## வடிவேலுவுக்கு சிம்ரன் ஜோடியா?

**'இம்சை அரசன்'** படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' என்ற படத்தில் வடிவேலு கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக சிம்ரன் நடிப்பதாக் கோடம் பாக்கத்தில் பேச்சு அடிபடுகிறது.

இதுபற்றி அவரிடம் கேட்டபோது அவற்றில் சிறிதும் உண்மையில்லை என்று ஆவேசமாக மறுத்தார்.

"நான் சில விளம்பரப் படங்களில் நடிப்பதற்காகவே சென்னை வந்திருக்கிறேன். மற்றப்படி என்னைப் பற்றி எழும் கிசுகிசுக்கள் எதுவும் உண்மையில்லை. தெலுங்கில் பாலகிருஷ்ணாவுக்கு ஜோடியாக தற்போது நடித்துக் கொண்டிருக்கிறேன். கடைசி வரை கதாநாயகி வேடம்தான் ஏற்பேனே தவிர, ஒருபோதும் 2ஆவது கதாநாயகி வேடத்தை ஏற்கமாட்டேன்.

என்னுடைய சினிமா வாழ்வு முடியும் வரை முக்கிய வேடத்தில் மட்டுமே நடிப்பேன். அது எந்த மாதிரியான வேடமாக இருந்தாலும் சரி. 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' படத்தில் வடிவேலுவுக்கு ஜோடியாக நான் நடிக்கிறேன் என்பதில் சிறிதும் உண்மையில்லை. அப்படி நடிக்கச் சொல்லி யாரும் என்னை அணுகவும் இல்லை" என்றார், ஆவேசமாக.



வர்ஜன் - சோனா
முரட்டு பயலே

## ரசிகர்கள் விரும்பும் நாயகன் ஷாருக்கான்! கனவு நாயகி ராணி முகர்ஜி!

**இந்தி** நடிகர், நடிகைகளில் பிடித்தமானவர் யார்? என்று தனியார் அமைப்பு கருத்துக் கணிப்பு நடத்தியது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள ரசிகர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. இதில் ரசிகர்கள் விரும்பும் நடிகராக ஷாருக்கான் தேர்ந்தெடுக்கப்பட்டார். மொத்தம் 12 லட்சத்து 85 ஆயிரம் பேரிடம் கருத்து கேட்டதில் அதிக வாக்குகள் ஷாருக்கானுக்குக் கிடைத்தன. ஷாருக்கான் நடித்த 'குச் குச் கோத்தா ஹை' ஒரு வருடத்தைத் தாண்டி ஓடி சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் வெளியான 'டான்' படமும் ஹிட் ஆனது. நடிகைகளில் கனவு நாயகியாக ராணி முகர்ஜி தேர்வானார். வாக்கெடுப்பில் இவர் முதலிடத்தைப் பெற்றார். சமீபத்தில் அமிதாப்பச்சனுடன் 'பிளாக்' படத்தில் நடித்ததற்காக ராணி முகர்ஜிக்கு விருது கிடைத்தது. தமிழில் கமலஹாசனுடன் 'ஹேராம்' படத்தில் நடித்து தமிழ் ரசிகர்களிடமும் பிரபலமானவர்.



விஜய் - அசின்
போக்கிரி

## மனதைத் திருடியவன்! - பிபாஷா

**இரண்டாம்** நிலை நடிகராக இருந்த பிபாஷா பாசுவின் காதலர் கொஞ்சம் கொஞ்சமாக முதல் இடத்தை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருக்கிறார். ஜான் ஆபிரஹாம் மாடல் உலகில் நம்பர் - 1 ஆக இருந்தாலும் பாலிவுட்டில் அவர் எப்போதும் இரண்டாம் வரிசை நடிகர்தான்! வில்லன், கேரக்டர் ரோல் இவைதான் ஜானுக்கு ஆரம்பத்தில் கிடைத்தன. தனது காதலி பிபாஷாவுடன் நடித்த 'ஜிஸம்' விதிவிலக்கு. (அதுவும் மீடியம் பட்ஜெட் படம் என்பது வேறு விஷயம்).


'தூம்' படத்தின் முதல் பாகத்தில் அபிஷேக்பச்சன் ஹீரோ என்றால் ஜான், வில்லன். காபூல் எக்ஸ்பிரஸ் ஜானின் தலையெழுத்தை சற்று மாற்றியிருக்கிறது. ஆப்கானிஸ்தானில் நடைபெறும் 'காபூல் எக்ஸ்பிரஸ்' படத்தின் கதைக்காக, ஆப்கானிஸ்தான் சென்று ராக்கெட்டுகளுக்கும் பீரங்கிகளுக்குமிடையே வெற்றிகரமாகப் படம் பிடித்து வந்திருக்கிறார்கள். இதன் பலனாக உலக திரைப்பட விழாக்களில் தவறாமல் இடம்பெறுகிறது 'காபூல் எக்ஸ்பிரஸ்'!

இந்தப் படத்துக்குப் பிறகு ஜான் நடிக்கும் படம் 'கோல்'. யெஸ், நீங்கள் யூகித்தது சரி. கால்பந்தாட்டம்தான் படத்தின் கதை. இந்தப் படத்துக்காக ஜானுக்கு சிறப்பு கால் பந்தாட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக சர்வதேச அளவில் புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரர் ஆண்டி அன்யா மும்பை வந்திருக்கிறார்.

'கோல்' ஜானின் சினிமா வாழ்வில் புதிய மைல்கல்லாக அமையும் என ஜானும் அவரது காதலியும் நம்பு கிறார்கள்!

## சி னி வி சி ட்






மல்லிகா ஷெரவாத்
குரு

## விக்ரம் பாராட்டிய கிளைமாக்ஸ்

**எஸ்.ஏ.சந்திரசேகரன்** இயக்கிய 'நெஞ்சிருக்கும் வரை' படம் டைரக்டர்கள், நடிகர்களுக்கு சிறப்பு காட்சியாகப் போட்டுக் காண்பிக்கப்பட்டது. படம் பார்த்தவர்கள் ஒட்டு மொத்தமாக கிளைமாக்ஸ் காட்சியைப் பாராட்டியுள்ளனர். விக்ரம் படம் பார்த்துவிட்டு டைரக்டரிடம், "காதலுக்காக அதிக தியாகம் செய்த படம் இதுதான். இது மாதிரி படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்காததற்காக வருந்துகிறேன்" என்று கனத்த இதயத்தோடு சொல்வதாகச் சொன்னாராம்.

## வெயிலில் நடிகர் காட்டில் மழை

**"காதல்"** படத்தில் நாயகனாகி தொடர் வெற்றிப் படங்கள் கொடுத்து முன்னணி நடிகர் வரிசைக்கு உயர்ந்துள்ளார் பரத். சமீபத்தில் வெளியான 'எம்மகன்' படமும் ஹிட். ஒரே நேரத்தில் வெளியான 'சென்னைக் காதல்', 'வெயில்' படங்களும் ஓடுகின்றன. அடுத்து ஏ.வெங்கடேஷ் இயக்கத்தில் 'கில்லாடி'யில் நடிக்கிறார். அந்தப் படம் முடிந்ததும் ஹரி, கே.எஸ்.ரவிக்குமார் ஆகியோரின் 'முகவரி', 'துரை' படங்களில் நடிக்க பேச்சு நடக்கிறது.









## நான் நடித்த பாடல் காட்சிகளால் அவமானமாக இருக்கிறது! - மும்தாஜ் வருத்தம்

நான் ஆடிய சில பாடல் காட்சிகளை இப்போது பார்க்கும்போது அவமானமாக உள்ளது. எனது 16ஆவது வயதில் 'குஷி' படத்தில் கட்டிப்புடி, கட்டிப்புடிடா...பாடல் எனக்கு புகழைத் தேடி தந்தது. அந்த புகழ் இப்போதும் உள்ளது.

'குஷி' படத்துக்குப் பிறகு அதே மாதிரியான வாய்ப்புகள்தான் எனக்கு நிறைய வந்தன. ஒரு முறை ஆடை இறக்கத்தின் அளவைக் குறைத்தால், பிறகு அதில் வெட்கப்பட என்ன இருக்கிறது. பட அதிபர்கள், டைரக்டர்கள் விருப்பப்படி தான் அப்படிக் கவர்ச்சியாக நடித்தேன்.

தமிழ்நாட்டைப் போல சேலையும், சுடிதாரும் அணியும் பெண்கள்தான் பாரத பண்பாட்டின் பிரதிபலிப்பாக இருக்கிறார்கள். ஒரு பெண் ஆடையை அவிழ்க்கும்போது இருப்பதைவிட, ஆடை அணியும்போதுதான் அழகாக இருப்பாள்.

எனக்கு கமலஹாசனையும், ஸ்ரீதேவியையும் பிடிக்கும். நான் ரசித்த பாடல் மூன்றாம் பிறை படத்தில் வரும் 'கண்ணே கலைமானே' பாடல்.

இவ்வாறு மும்தாஜ் கூறினார்.


மாதவன் - வித்யாபாலன்
குரு


ஸ்ரேயா

## தேவயானி தயாரிப்பு - நாயகனாகிறார் ராஜகுமாரன்!

மீண்டும் ரிஸ்க் எடுக்கிறார் தேவயானி. சென்ற முறை ராஜகுமாரன் இயக்கிய படத்தைத் தயாரித்தவர், இந்த முறை ராஜகுமாரனையே ஹீரோவாக்கியிருக்கிறார். விக்ரமனின் அசிஸ்டெண்ட் ராஜகுமாரன். அவர் பாணியை அப்படியே உருவி 'நீ வருவாய் என' படத்தை எடுத்தவர். படம் ஹிட்! அடுத்தது விண்ணுக்கும் மண்ணுக்கும். 'சேது'வில் நடித்த விக்ரம் அடுத்ததாக விண்ணுக்கும் மண்ணுக்கும் படத்துக்கு கால்ஷீட் கொடுத்திருந்தார்.

ஒழுங்காகப் படம் எடுப்பதற்குப் பதில், தேவயானியின்மீது தனக்கிருந்த காதலை ராஜகுமாரன் படத்தில் பிரதிபலிக்க, காதல் சக்சஸ், படம் ப்ளாப்!

அதற்குப் பிறகு தேவயானியின் கணவர் என்ற கௌரவப் பதவியுடன் ஒதுங்கியிருந்தவர் 'காதலுடன்' படத்தை இயக்கினார். தயாரிப்பு தேவயானி. கற்கால பார்முலாவில் இருந்த 'காதலுடன்' தேவயானிக்கு பல கோடிகள் கடன் வைத்ததுதான் மிச்சம். 'கோலங்கள்' சீரியல் நடித்து கடன்களை அடைத்து இப்போதுதான் நிமிர்ந்திருக்கிறார். அதற்குள் அடுத்த ரிஸ்க்.

இந்த முறை ராஜகுமாரன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குவதுடன் ஹீரோவாக நடிக்கவும் செய்கிறார். இதற்காக உடற்பயிற்சிகள் செய்து உடம்பை கும்மென்று வைத்திருக்கிறார். படத்துக்கு 'திருமதி தமிழ்' பெயர் வைத்திருக்கிறார்கள். ராஜகுமாரன் படம் இயக்குவதே பெரிய சேதி. ஹீரோவாக நடிப்பது பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. படத்தில் இவருக்கு இரண்டு ஜோடிகளாம்!

தமிழர்கள் எப்படித் தாங்கப் போகிறார்களோ...

## ஜெயம் ரவி - ஜீவா கூட்டணியில் தாம் தூம்!

ஒரு படத்தின் தொடக்க விழாவை தாம் தூமென்று நடத்துவது சகஜம் தான். ஆனால் ஜெயம் ரவி நடிக்கும் புதுப் படத்திற்கும் 'தாம்தூம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. படத்தின் தலைப்பு ரத்தினச் சுருக்கமாக இருந்தாலும் தயாரிப்பு நிறுவனத்தின் பெயரை வாசிக்கும் போதுதான் மூச்சிரைக் கிறது. புதுப்பட நிறுவனம் தயாரிக்கும் இதனை ஒளிப்பதிவாளர் ஜீவா இயக்குகிறார். ஹாரிஸ் ஜெயராஜ் இசை, எஸ்ராமகிருஷ்ணன் வசனம் என பலே கூட்டணி ஒன்று சேர்கிறது.


அஜித் - அசின்
ஆழ்வார்

## ஐம்பது வயதில் திருமணத்து ஆசைப்படும் நடிகை!

அந்த நடிகை ஹாலிவுட்டைச் சேர்ந்தவர் அல்ல. இந்தியாவின் பாலிவுட்டைச் சேர்ந்தவர். உங்களால் யூகிக்க முடிகிறதா? வயது போன பின்னும் இளமை போகாத ரேகாதான் அந்த நடிகை.


"என் மனசுக்குப் பிடித்தமான ஆண் மகனை இன்னும் நான் சந்திக்கவில்லை."

ஐம்பத்தொரு வயதாகும் ரேகாவிடம் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று கேட்டதற்குக் கிடைத்த பதில் இது.

இந்தப் பதில் ரேகாவின் வயதையொத்த ரசிகர்களுக்கு சிரிப்பை வரவழைக்கும். காரணம், ரேகாவின் காதல்! அமிதாப்பச்சன் மீது கண்டபடி காதல் வயப்பட்டு, (அவரும்தான்) கட்டினால் பச்சான் தான் என்று ஒற்றைக் காலில் நின்றவர் ரேகா. அவர் தவத்தை ஜெயாபச்சன் ஒன்றுமில்லாததாகச் செய்த பிறகு, திருமணம் குறித்து யோசிக்கவில்லை ரேகா என்பதே உண்மை!

ஐம்பது வயது தாண்டிய பிறகு ரேகாவுக்கு கல்யாண ஆசை வந்திருக் கிறது. 'பொருத்தமானவர் என்று தோன்றக் கூடியவரைச் சந்தித்தால் திருமணம் செய்து கொள்ளத் தடையில்லை' என்று கூறியிருப்பவர், அவருக்கு நன்றாகச் சமைத்துப் போடுவேன். குறிப்பறிந்து கடமையாற்றுவேன், என வாக்குறுதி களை அள்ளி வீசியிருக் கிறார்.

ரேகாவின் இந்த வலையில் விழப்போவது கிழப் புலியா? இல்லை புள்ளி மானா?



## நமீதா மகிழ்ச்சி

நமீதா பெரிய பட வாய்ப்புகள் இன்றி இருந்தார். தற்போது விஜய்யுடன் 'அழகிய தமிழ் மகன்' படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால் மகிழ்ச்சியில் திளைக்கிறார். அதோடு ஜீவாவுடன் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## ஆயிரம் துணை நடிகர்களுடன் அஜீத் நடனம்

சுஜாதா சினி ஆர்ட்ஸ் ஆட்லாப்ஸ் (மும்பை) நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் கிரீடம் படப்பிடிப்பு டிசம்பர் 6ஆம் திகதி ராஜமுந்திரியில் தொடங்கியது. அஜீத், வெங்கடாஜலபதி கோவிலில் மணியடித்து சாமி கும்பிடுவது, முதல் ஷாட்டாக எடுக்கப்பட்டது. அதன்பிறகு பிரமாண்டமான மைதானத்தில் "திருட்டு மாங்காய்க்குத்தான் ருசி அதிகம்' திருடி வெச்ச பிள்ளையாருக்கு சக்தி அதிகம் கல்லையும், மண்ணையும் கிரவுண்டாக்க நல்ல கருணைகாட்டு கணேசா" என்ற நா.முத்துகுமார் பாடலை சங்கர் மகாதேவன் பாட, தினேஷ் நடனம் அமைக்க, ஆயிரம் துணை நடிகர்கள், நடிகைகள் ஐம்பது டான்ஸர்கள் ஆகியோருடன் அஜீத் ஆடிப் பாடும் பாடல் காட்சி படமாக்கப்பட்டது.

## வாடகை வீட்டில் நடிகைகள்

தமிழ்ப் படங்களில் நடிக்கும் வடக்கத்திய நடிகைகள் நட்சத்திர ஹோட்டல்களில் தங்கி இருந்தனர். ஹோட்டல் வாடகை கட்டுப்படியாகாததால் மாத வாடகைக்கு வீடு பிடிக்கிறார்கள். கீர்த்தி சாவ்லா, தேஜாஸ்ரீ போன்றோர் வாடகை வீட்டுக்கு மாறிவிட்டனர். மேலும் சில நடிகைகள் வாடகை வீடு தேடுகிறார்கள்.

## குள்ள சத்யராஜ்

'பெரியார்' படத்தில் சில காட்சிகளில் நடிக்க சத்யராஜ் சிரமப்படுகிறாராம். பெரியாரைக் காட்டிலும் சத்யராஜ் உயரம். எனவே நடந்து வருவது, கூட்டங்களில் பேசுவது போன்ற காட்சிகள் எடுக்கும்போது சத்யராஜ் உயரமாய்த் தெரிவதால், அதை மறைக்க உடல் தசைகளை இளக்கியும் லேசாகக் குனிந்தும் தன்னை குள்ளமாகக் காட்டி நடிக்கிறாராம்.





செல்வராகவன் - சோனியாஅகர்வாலின் திருமணத்தின் போது...





# தேன் கிண்ணம்

## உன்னை நான் அறிந்தேன்!

சிற்பியின் கையில்
சிலை போல
தூரிகை மேயும்
சித்திரம் போல
அவன் கவிதைகள்
என்னை ஆட்டிப் படைத்தது
காலம் கடந்தபின் தான்!

வெறும் சதை
எலும்புகளைச் சுமந்து கொண்டு
உலகக் கனவுகளில்
உலவித் திரிந்தவளை
கவிதை கடிவாளத்தில்
கட்டி இழுத்தது,
அவனது வசனங்களின்
வசீகரிப்புக்கள்தான்!

சின்னச் சின்ன
குறுமணிகளைச் சுமந்து
உலக மூலைக்கெல்லாம்
ஓடித்திரிந்த அவனது
கவிதை எறும்புகள்
ஒரு தசாப்தத்தின் பின்தான்
இவளது இதயத்திலும்
ஊர்ந்தது.

வண்ணங்களை
வகைப்படுத்திய போது
வாளா திருந்துவிட்ட இவள்...
சின்னங்களால் சிலை
செதுக்கிய போது
சிந்திக்காது இருந்துவிட்ட இவள்...
எண்ணங்களில் இடியிடித்தபோதுதான்
அவனை
படிக்கத் தொடங்கினேன்!

காதலைப் பற்றிய
அவனது கருத்துக்களே
விசித்திரமானவை!
நட்சத்திரங்களைப்
பகைத்துக் கொண்டு
திங்களுக்குத் தெரியாமல்
பிஞ்சில் பழுத்தவைகள்
இங்கே காதல் செய்வதால்
பள்ளிகள் அறைகளும்
பள்ளி அறையும்
பாழாய்ப் போய்விட்டதாம்!

-நா.ஜெயபாலன், பிபிலை.

## இறைவன் புல்லுப் போட்டான்

பொதுச் சொத்தை
முடியுமானவரை
சிலர் சுரண்டினார்கள்

சுயநலத்திற்காய்
அடுத்தவர்களின்
உரிமையை
பிடுங்கிக் கையில்
எடுத்தார்கள்

முட்டைக் கோதுக்கு
முலாம் பூசினார்கள்
உயர் கழுகுகள்
இதைக் கண்டும்
காணாதிருக்க
பணக் கட்டுகளைக்
கொட்டினார்கள்

தட்டிக் கேட்கத் துணிந்தோரை
சுட்டுத் தள்ளினார்கள்

எல்லோர்க்கும் இவர்கள்
புல்லுப் போட்டார்கள்
இவர்களுக்கு இறைவன்
புல்லுப் போட்டான்

தங்கமாயிருந்த
அங்கங்களை
ஊனமாக்கியும்
அறுவைச் சிகிச்சை மூலம்
உறுப்பு மாற்றம்
செய்ய வைத்தும்
ஏன்...
விலையுயர்ந்த
ஊசிகளையும்
தேவைப்படுத்தித்தான்.

ஏமாற்றியவர்களே!...
ஏமாறியவர்களே!...
ஏமாற்றயிருப்பவர்களே!...
பார்த்தீர்களா?...
அறுவடைகளை!

-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.

## சிறகுடையும் இதயத்து சப்தங்கள்...!

விழி நிறைய
மொழிகளை
வைத்துக்கொண்டு
ஓர்
தண்டவாள மௌனத்துள்
தடம்புரள்கிறேன்...!

ஹைகூ முளைக்கும்
தாவணி தேசத்தின்
வேதம் பயிற்றுவிக்கும்
பார்வை பகிடிவதை!

நினைவு தொகுத்து
நிரந்தர
சாபமிட்டதாய்
அடி நெஞ்சின்
நெருஞ்சிமுட் காட்டிற்குள்
தனிமைகளை
ஓதுகிறேன்...!

அமாவாசை உடுத்திய
அர்த்தப் பொழுதில்
ஜீவன் பொறுக்கிய
தூசு மண்டலத்தில்
ஊடல் வரையும்
பரனைட் பாசம்...!

உன்
அழகுமுனையின்
அனுசரணையில்
பூமத்திய ரேகையில்
கவி வரைகிறேன்...!

வா...
மரணங்கள்
மறந்து
தனித்ததொரு தீவில்
தாஜ்மஹால் செய்வோம்...!

-நஸீம்ரூமி.

## ஏன் சந்தேகம்

என்
தூரப் போக்கை ஏன்
நீ...காதலின் துரோகம்
என நினைக்கிறாய்...

இந்த
இரண்டு வருட பிரிதலின்
வேதனையை நானே
அறிவேன்...

என்
கண்ணீரோடு தினம்
வழக்காடி நிற்கிறேன்
உனை நான் பிரிந்து
நின்ற அந்த இரண்டு வருட
வாழ்தல் நரக
வாழ்தல் தான்...
இதை நீ அறிவாயா...?

உன்
நினைவு முட்கள்
எனை தினம்
தீண்டிக் கொண்டே
இருக்கும்...



நான்
தான்
கொஞ்ச
நாள்
மூட்டை கட்டி
வைத்
திருந்தேன்
உன்
ஞாபகங்களை.
ஏன்
தெரியுமா...?

நீ
களங்கம் இல்லா
என் காதலோடு - எனக்காய்
காத்திருப்பாய் என்ற
நம்பிக்கையில் தான்!

இன்று
சுதந்திரம் தேடி
உன்னிடம் வந்தால்
ஒரு கணமும் யோசிக்காமல்
வார்த்தைகளால் - எனை
ரணப்படுத்தி விட்டாயே!
இது நியாயமா...?

-ஜே.பிரோஸ்கான்,கிண்ணியா.



## உன் நினைவுகளில்...!

தேவைப்படும் போதெல்லாம்
உன் ஞாபகம் தான்
சுகம் தரும்!

தினம் பெயரை
சுவாசிக்கும் போது
மனம் திருப்திப்படும்!

குறுகிய இந்த ஆயுளுக்குள்
ஒரு யுகமான
வாழ்க்கை வேண்டும்
நீயே துணையாக வர
வேண்டும்!



எப்போதும்
நமதான எதிர்காலக்
கனவுகள்
சீனப் பெருஞ்சுவராக
நீள்கிறது...!

அப்படியே தான்!
உன் நினைவுகளில்
மூழ்கிப் போகையில்
வலிகளை மறந்து
வாழ்வு சுகமாகிறது
மரணம் வெகு தூரமாகிறது...!!


-ஏ.ஆர்.எம்.நதார், ஜின்னாநகர்.

## சில்மிஷங்கள்

பருவ உணர்ச்சிகள்
உருவத்துடன் செத்து
சிற்றின்பங்காணத் துடிக்கிறது
எனதான ரணங்களை
உன் மீது எச்சில்படுத்தி.

இதயம் ஈர்க்கின்ற
உனதான நினைவுச் சுகம்
ஒவ்வொரு விநாடியும்
உலகத்தில் - நான்
உயிர்த்துப் பிறக்கிறேன்.

சந்தோஷம் தொலைத்து
உடலின் ரணங்களை
அடிக்கடி சீண்டி
போரிட்டுக் கிடக்கிறாய்...
என்னிருப்பையே வாட்டி



சிணுங்கும் மனசு
சிரிக்கும் உன்னிதழ்கள்
கலங்கிய விழிகளும்
எனதான ஈர்ப்புகள்
உனக்குள்
நானாகி நானாகித்தான்...

பெண்ணே...
அடிக்கடி - என்னை
இனியும் சிலுவையிடாதே!
உனதான ஞாபகங்களால்...
சிக்கித் தவிக்கிறது உசிரு.

-செயின் தம்பி ஸியாம், கல்முனை - 06.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு; சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் கவிதைகள் வரையும் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக இணையத்தில் இருந்து சில கவிதைகளை சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம்.*

### இன்பநிலை வெகுதூரமில்லை

என்றும் துன்பமில்லை, இனிச்
சோகமில்லை
பெறும் இன்பநிலை, வெகுதூரமில்லை
இனி வஞ்சமும் பஞ்சமுமில்லை
நெஞ்சை வாட்டிடும் கவலைகளில்லை
கொடும் வாதைக்கும் போதைக்கும்
வேலையில்லை

எங்கள் வாழ்வினில் துயர்வரப்
பாதையில்லை
என்றும் துன்பமில்லை இனிச்
சோகமில்லை
நம் வாழ்வில் துயர்வரப் பாதையில்லை
என்றும் துன்பமில்லை இனிச்
சோகமில்லை

அன்புத் தாயெனும் கோயிலை நாடி
அலைபாயுது ஆசைகள் கோடி
என்னை வாவென்று தாவிடும்
பாசக்குரல்
வந்து வாழ்ந்திடும் போற்றிடும்
நேசக்குரல்

என்றும் துன்பமில்லை இனிச்
சோகமில்லை
பெறும் இன்பநிலை வெகுதூரமில்லை
இங்கு சொல்வதும் செய்வதும் மோசம்
வந்து சூழ்ந்திடும் நேசமும் வேஷம் (இங்கு)

இனி செல்கின்ற தேசத்தில்
பேதமில்லை
கொடும் தீமை பொறாமை
விரோதமில்லை
என்றும் துன்பமில்லை இனிச்
சோகமில்லை
பெறும் இன்பநிலை வெகுதூரமில்லை.

-பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

### உன்னை நேசிப்பது எவ்விதம்?

எவ்விதம் நேசிப்பது உன்னை?
எண்ண வேண்டும் நான்
எத்தனை விழிகள் உள்ளன வென்று!
ஆழமானது என் காதல்!
அகல்வது! நீள்வது என் காதல்!
உணர்ச்சி கண்மறையும் போது,
ஒப்பிலா நளினத்தில்
உன்னை எட்டிவிடும் என் ஆத்மா
பரிதிச் சுடர், மெழுகுவர்த்தி
ஒளிபோல்
அவசியத் தேவை
அனுதினம் காதல் எனக்கு!
மனத் தடங்கலின்றி
காதலிக்கிறேன்,
மானிட உரிமைத் தேடலாய்!
தூய மனதுடன் நேசிக்கிறேன்,
என் புகழின் திருப்பமாய்!
முந்தைத் துக்கங்களிடையே
குழந்தையின்
அழுத்த நம்பிக்கையோடு
பித்தானேன் உன்மேல்!
இழந்த புனிதரிடம்
எனக்கிருந்த காதல் நழுவி
நாடுகிறது உன்னை!
பெருமூச்சு காட்டுது
என் காதலை!
கண்ணீரும் காட்டுது
என் காதலை!
வாழ்வு பூராவும் நேசிப்பேன்
முடிவிலே
கடவுளின் விதி அதுவாயின்,
அழுத்தமாய் இருக்கட்டும்
காதல் மட்டும்,
உன்மேல்
சாதலுக்குப் பிறகும்!

- மூலம் : எலிஸபெத் பிரௌனிங்
தமிழாக்கம் : சி. ஜெயபாரதன், கனடா.

### நினைவிருக்கும் வரை...

இதயம் வலிக்காமல்
எப்படிச் சொன்னாய்..?
எட்டிப்போ என்று...
அந்த
மரண வார்த்தையைக் கேட்டதும்
என் செவி நரம்புகள் சேதமடைந்து
விட்டன.

கோடிக் குண்டுசியை
கொட்டிக் கொட்டி
விழிகளுக்குள்
அழுத்தியது போல...
கொடூரமானதல்லவா உன் பிரிவு...

இதயம் கூட ஏதோ
ஓர் இருட்டறையில்...
சிலு சிலுக்கும் தென்றலாய்
சிதறிச் சேர்கிறேன்...
முகாரி ராகத்தை மூச்சு போல
முணுமுணுக்க முடியாமல்...

விளக்கைத் தொடாமல்
விட்டில்கள் சாவதில்லை
தென்றலைத் தழுவாமல்
பூக்கள் மலர்வதில்லை
கனவுகள் தொடாமல்
காதலர்கள் இணைவதில்லை.

விரிசல்கள் ஏற்படாமல்
விதைகள் முளைப்பதில்லை
ஆனால்
வெளிச்சத்தைப் பார்க்காமல் சூரியனும்
அல்லியை அறியாமல் நிலவும்
நீயும் நானுமாக....

- ஜே. ஜான்ரவி.

### மரண அவஸ்தை

தட்டுவதற்கு தயார் தான்
தாழ் திறக்குமா?
தெளிவாகத் தெரிந்து விட்டால்
தெம்பாகத் தட்டலாம்
தெரியாத வரையில்
மரண அவஸ்தை தான்!

வானம் வசப்படுமா?
தெரிந்தால் மட்டும் தான்
என்னால் சிறகு விரிக்க முடியும்
தெளிவாகத் தெரியாமல்
சிறகுகளைச் சிதைத்துக் கொள்ள
என்னால் எப்படி முடியும்?

உனக்குள் நான் கட்டிய
மெலியதாய்த் தொடுகையில்
இனிதாய் சப்திக்கும்
வீணைக்கம்பிகள் இன்னும்
அறுந்து போகாமல் இருக்கின்றனவா?

தெரிந்து விட்டால்
தட்டி விட்டு
காத்திருப்பதிலும்
ஒரு சுகம் மறைந்திருக்கிறது
தெரியாத வரையில்
மரண அவஸ்தைதான்!

- பி. பாலமுருகன்.

### நடை பாதை

அதிகமாய்
நடைபாதையில் நடக்கிறேன்
நடைபாதையிலேயே
நடக்கிறேன்
கைகளைக்கூட
அக்கம் பக்கம் பார்த்துத்தான்
வீசுகிறேன்
எப்போதும் போல் இல்லை
என்
நடையும் மனமும்
இப்போது.

- பிச்சினிக்காடு இளங்கோ (சிங்கப்பூர்)

# அழகு பலன்களை அள்ளித் தரும் வெட்டிவேர்

முகம் முழுக்க அடிக்கடி பருக்கள் தோன்றி அவதிப்படுகிறவர்களுக்கு, அரு மருந்தாக திகழ்கிறது வெட்டிவேர் விழுது...

### பருக்கள் நீங்க...

சிறு துண்டுகளாக்கின வெட்டிவேர் - ஒரு மேசைக் கரண்டி, கொட்டை நீக்கிய கடுக்காய் - ஒன்று இந்த இரண்டையும் முந்தின நாள் இரவே கொதிநீரில் ஊற வையுங்கள். மறுநாள் இதை அம்மியில் அரைத்து, அந்த விழுதை பருக்கள் மீது முழுவதுமாக மறைப்பதுபோல் தடவுங்கள்.

ஒரு நாள் விட்டு ஒருநாள் இப்படிச் செய்து வந்தாலே பருக்கள் உதிர்ந்து விடும். பருக்கள் இருந்த வடுவும் தெரியாது என்பதுதான் இந்த சிகிச்சையின் சிறப்பம்சம்!



### தழும்புகள் நீங்க...

பழைய பருக்கள் ஏற்படுத்திவிட்டுப் போன தழும்புகளால், சிலருக்கு முகம் கரடு முரடாக இருக்கும். அதற்கான நிவாரணம் இதோ...

ஒரு பிடி வெட்டிவேரை சிறு துண்டுகளாக்கி வெந்நீரில் போட்டு மூடுங்கள். ஒரு இரவு இது ஊறட்டும். மறுநாள் ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க விடுங்கள். முந்தின நாள் ஊறவைத்த வெட்டி வேரையும் தண்ணீரையும் தனியே பிரித்து வையுங்கள்.

இப்போது கொதிநீரில் வெட்டிவேரைப் போட்டு ஆவி பிடியுங்கள். அப்படியே முகத்தைத் துடைக்காமல், வெட்டிவேர் ஊறின தண்ணீரில் சுத்தமான வெள்ளைத்துணியை அமிழ்த்திப் பிழிந்து முகத்தை ஒற்றி எடுங்கள்.

வாரம் இரு முறை இப்படிச் செய்து வந்தால், தழும்புகள் மறைந்துவிடும்.

### ஸ்பெஷல் பேக் இது...

சிலர் எப்போது பார்த்தாலும் வியர்வையில் குளித்திருப்பார்கள். அதனாலேயே பருக்களும் அதிகமாக இருக்கும். அவர்களுக்கான ஒரு ஸ்பெஷல் பேக் இது...

வெட்டிவேர், ரோஜா மொட்டு, மகிழம்பூ, செண்பகப்பூ, சம்பங்கி விதை...இவற்றை சம அளவு எடுத்து மெஷினில் கொடுத்து அரைத்துக் கொள்ளுங்கள். (இவற்றை எவ்வளவுதான் அரைத்தாலும் திப்பி திப்பியாக இருக்கும். இதை நன்றாகச் சலித்து, நைஸான பவுடரை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்). இந்தப் பவுடரை தண்ணீரில் குழைத்து முகத்தில் பூசி, கழுவுங்கள்.

வெட்டிவேர் முகத்தில் உள்ள எண்ணெய்ப் பசையை எடுத்துவிடும். சம்பங்கி விதை முகத்துக்குப் புத்துணர்ச்சியைக் கொடுக்கும். சோர்வைப் போக்கி நிறத்தைக் கொடுக்கிறது. ரோஜா மொட்டு, மகிழம்பூவும் செண்பகப்பூவும் வியர்வை நாற்றத்தைப் போக்கி வாசனையைக் கொடுக்கிறது.

### சருமம் மிருதுவாக

சிலருக்கு தோள்பட்டையிலும் முதுகுப் புறங்களிலும் பரு போன்ற சிறு கட்டிகள் இருக்கும். சில ஆண்களுக்கு உடலில் வரி வரியாக இருக்கும்.

இந்த இரு பிரச்சினைகளுக்குமான ஒரே தீர்வு வெட்டி வேரில் இருக்கிறது.

பச்சைப்பயறு - 100 கிராம்

சிறு துண்டுகளாக்கின வெட்டிவேர் - 50 கிராம்


இந்த இரண்டையும் சேர்த்து நன்றாக அரையுங்கள். இந்தப் பவுடரை உடலுக்குத் தேய்த்துக் குளியுங்கள்.

தினமும் இப்படிக் குளித்து வந்தாலே சிறு கட்டிகளும் வரிகளும் ஓடிப் போகும். சருமமும் மிருதுவாகும்.

# கண்களில் புத்துணர்ச்சி பெறுங்கள்!

கண்களின் கீழ் கருவளையம் வருவதற்குக் காரணம் தூக்கம் இன்மை, ஒழுங்காகச் சாப்பிடாமல் இருப்பது. தண்ணீர் அதிகமாகக் குடிக்காமல் இருப்பதும், அதிகமாக டி.வி.பார்ப்பதும் கூடக் காரணமாகிறது. கருவளையம் வராமல் தடுக்க, குறைந்தது 8 மணி நேரம் ஆழ்ந்த நித்திரை இருக்க வேண்டும். தூங்கும் போது எந்த விதமான மன உளைச்சல்களும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

படுப்பதற்கு முன் சூடான பாலில் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நல்ல தூக்கம் வரும். மனதையும், உடலையும் டென்ஷன் ஆக வைத்துக் கொள்ளாமல் ரிலாக்சாக இருப்பதும், நல்ல தூக்கத்திற்கு வழி செய்யும். மலச்சிக்கல் வராமல் தடுக்க வெந்நீரில் தேன், எலுமிச்சை கலந்து வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். அல்லது காலையில் வெறும் வயிற்றில் 3 டம்ளர் தண்ணீர் குடிப்பது நல்லது.



இரவில் படுக்கப் போகும் முன்பு ஒரு துண்டுப் பப்பாளி சாப்பிட்டுப் படுத்தாலும் மலச் சிக்கலைத் தடுக்கலாம். சாப்பிடும் உணவில் காய்கறி, கீரை வகைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக அதிக நார்ச் சத்து உள்ள காய் கறிகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது. வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு, தக்காளி ஆகியவற்றை மெலிதாக கட் செய்து கண்களுக்கு மேல் வைக்கவும். இதனால் கண்களுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**


## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி


53

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

..................................

தே.அ. அட்டை இல : ..................................

கையொப்பம் : ..................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
02.01.2007

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -53**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 51
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.பத்மஸ்ரீதரன், முதலாம் ஒழுங்கை,
புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




# பூச்சிகளிடமிருந்து விடுதலை வேண்டுமா?

◆ பியரில் நனைத்த கோணியை ஒரு நாள் இரவு முழுக்க சமையலறையில் போட்டு வையுங்கள். கரப்பான் பூச்சிகள் அனைத்தும் அதில் தஞ்சம் புகும். காலையில் அகற்றி விடலாம்.



◆ எங்கே பார்த்தாலும் பூச்சிகள் கூட்டமா? ஒரு வெங்காயத்தைப் பாதியாக நறுக்கி,அறையின் ஒரு ஓரத்தில் வைத்து விடுங்கள். பூச்சிகள் காணாமல் போகும்.

◆ கொசுவர்த்தி, மேட் என எதற்குமே அஞ்சாமல் கொசுக்களின் ராஜ்ஜியம் கொடி கட்டிப் பறக்கிறதா? மண்ணெண்ணெய் அல்லது பேகானில் அகர்பத்திகளை நனைத்து ஏற்றி வைத்தால் பிரச்சினை தீரும்.

◆ சர்க்கரை டப்பாவினுள் இரண்டு, மூன்று கிராம்புகளைப் போட்டு வையுங்கள். எறும்புகள் அண்டாது.

◆ ரவையை மெல்லிய துணியில் கொட்டிப் பரப்பி, அரை மணி நேரம் கழித்து சலித்து எடுங்கள். புழுக்கள் எல்லாம் துணியோடு ஒட்டிக்கொண்டு போய்விடும்.

◆ காய்ந்த புதினா இலைகளை அரிசிக்குள் போட்டு வைக்க, பூச்சிகள் வராது. சாதமும் வாசனையாக இருக்கும்.

◆ பருப்பு வைத்துள்ள டப்பாவில் சிறிய துண்டு பெருங்காயம் போட்டு வைக்க, வண்டு வராது.

◆ காய்கறிகளை நறுக்கிப் போடும் தண்ணீரில் சிட்டிகை மஞ்சள் தூள் போட்டு வைக்க, பூச்சி, புழு இருந்தால் மேலே மிதந்து வந்து விடும்.

# நுனிமுடி பிளவைத் தவிர்க்கலாம்!



✦ நுனி முடி பிளவுபட்டால் மாதத்திற்கு ஒரு முறை நுனி முடியை வெட்டிவிடுங்கள்.

✦ ஈரமான முடியை சீப்பால் வாராதீர்கள்.

✦ தலைக்கு எண்ணெய் தடவும் போது நுனிக்கும் எண்ணெய் தடவுங்கள்.

✦ கண்டிஷனர்களைப் பயன்படுத்தினால், இதைத் தவிர்க்கலாம். அப்படி முடியாதவர்கள் கீழ்க் கண்ட வழியைப் பின்பற்றலாம்.

✦ அடுக்கு செம்பருத்திப் பூ மற்றும் மஞ்சள் கரிசலாங்கண்ணி இரண்டையும் தேங்காய் எண்ணெயில் போட்டு பாத்திரவாயை துணியால் மூடி 15 நாட்கள் வெய்யிலில் வைத்து விடுங்கள். பின்பு இதைத் தடவி வர நுனி முடி பிளவு படாது.

✦ இயற்கை ஷாம்புவிற்கான சின்ன ரெசிபி இது.

புங்கங்காய் (தனியே நீரில் ஊற வைத்து) தேய்த்தால் ஷாம்பு போல் நுரை வரும். அல்லது சீயக்காய் (75%) தூளும், புங்கங்காய் (25%) தூளும் கலந்து தேய்த்தாலும் இயற்கை ஷாம்பு ரெடி!

✦ முடிந்தவரை ஹேயர் ட்ரையர் உபயோகிப்பதை தவிர்த்தால் தலைமுடி உலர்ந்து வெடிப்பதை தவிர்க்க முடியும்.

✦ கூந்தலுக்கு செயற்கையான வர்ணங்கள், ஜெல் மற்றும் இரசாயன பாவனையை தவிர்த்து இயற்கை வழிமுறைகளைக் கையாள்வது சிறந்தது.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–


## மக்காச் சோளம்

***தேவையான பொருட்கள்:-***

மக்காச் சோளம் - 250 கிராம்
பால் - 450 மில்லி
எண்ணெய் - 20 மில்லி
சீரகம் - 5 கிராம்
இஞ்சி - 10 கிராம்
மிளகாய்த் தூள் - 10 கிராம்
கொத்தமல்லி - 10 கிராம்
தேங்காய் விழுது - 50 கிராம்
பச்சை மிளகாய் - 2
உப்பு - தேவைக்கேற்ப.

***செய்முறை*** :-

சோளத்தைப் பாலுடன் சேர்த்து கொதிவராமல் வேக வைக்கவும். பாலின் அளவு மிகக் குறையும் வரை வேக விடவும். வாணலியில் எண்ணெயை ஊற்றி சீரகம், நறுக்கிய இஞ்சி மற்றும் பச்சை மிளகாயைப் போட்டுத் தாளிக்கவும். மிளகாய்த் தூளையும் போடவும். இதனுடன் வேக வைத்த சோளத்தை எஞ்சி இருக்கும் பாலுடன் சேர்த்துக் கிளறவும். சிறிது நேரம் கிளறிய பின் தேங்காய் விழுது, சிறிதளவு தண்ணீர் சேர்க்கவும். பின் தேவையான உப்பு சேர்த்து ஒரு கொதி வந்ததும் இறக்கி விடவும். இதனை பாணுடன் சேர்த்து சாண்ட்விச்சாகச் சாப்பிட சுவையாக இருக்கும்.




**பெரிய** பாய்மரத்தை விரித்தேன். எங்களைப் பற்றி நாங்களே மகிழ்ந்த வண்ணம் மீண்டும் பயணத்தைத் தொடங்கினோம். குவளைகள் மூலம் படகுக்குள்ளிருந்த தண்ணீரை மொண்டு மொண்டு வெளியே கொட்டினோம். போர்வைகளைப் பாய்மரத்தில் விரித்துக் காயவைத்தோம். ஸ்ட்ராங்க் காப்பியும் கொஞ்சம் ரம்மும் அடித்தோம். மேலும் ஆறு நாட்களுக்கு நாங்கள் பயணம் செய்தோம்.

காலை பத்து மணி. துளிகூடக் காற்று இல்லை. ஒரே அமைதி. கிட்டத்தட்ட நாலு மணி நேரம் நான் தூங்கினேன். எழுந்தபோது என் உதடுகள் எரிச்சலாய் எரிந்தன. காய்ந்து உலர்ந்து இருந்தது. மூக்கிலும் அப்படியே. வலது கை சொறசொறவென்றிருந்தது. மாசுரெட்டுக்கும் அப்படித்தான் - ஜோன்ஸுக்கும் அதேபோல். தினந்தோறும் இரண்டு முறை நாங்கள் எங்கள் முகத்திலும், கைகளிலும் எண்ணெய் தடவிக் கொண்டு வந்தோம். அப்படியும் போதவில்லை. உஷ்ணப் பிரதேசத்து வெயில் அதை உலர வைத்துவிட்டது.

சூரியனைப் பார்த்தேன். பிற்பகல் இரண்டு மணி இருக்குமென்று தோன்றியது. சாப்பிட்டேன். கடல் மிக அமைதியாக இருந்ததால், பாய்மரத்தைத் திறப்பாகப் பொருத்தினோம்.

மாசுரெட் சாப்பாட்டுத் தட்டுக்களைக் கழுவிய இடத்தில் மீன்கள் துள்ளிக்கொண்டு குதித்தன. கையில் கத்தியை எடுத்துக் கொண்டேன். கொஞ்சம் சோற்றை வீசியிறைக்கும்படி மாசுரெட்டுக்குச் சொன்னேன். ஏற்கனவே தட்டைக் கழுவிய இடம் நுரைத்துக் குழம்பியிருந்தது. தண்ணீர் மட்டத்துக்கு மேலே ஒரு மீன் தலை நீட்டியது. மறுபடியும் அதை ஓங்கிக் குத்தினேன். ஒரே குத்து. அவ்வளவுதான் மல்லாந்துவிட்டது: இருபது பவுண்டு எடை இருக்கும். நறுக்கி உப்புத் தண்ணீரில் போட்டு வேக வைத்தோம். அன்று மாலை மாவில் கலந்து தின்றோம்.


நாங்கள் கடல் பிரயாணம் செய்யத் தொடங்கி அன்று பதினொரு நாட்களாகிவிட்டன.

எங்கேதான் இருக்கிறோம் என்று மண்டையை உடைத்துக் கொள்ளத் தொடங்கினேன். வெகுதூரம் வந்திருக்கிறோம். அது நிச்சயம். ஆனால், ட்ரினிடாட் எங்கே இருக்கிறது? இங்கிலீஷ் தீவுகள் எங்கே இருக்கின்றன? தெரியவில்லை.

இரண்டு நாள் கழித்து, நிலம் அருகிலிருக்கிறது என்பதைப் பறவைகள் வந்து கூறின.

"சுதந்திரம்! சுதந்திரம்!" நாங்கள் பள்ளிச் சிறுவர்களைப் போலக் கொட்டமடித்தோம்.

ஒன்பது மணி சுமாருக்குக் கரையைக் கண்டோம். அமைதியான கடலில், காற்று எங்களை வேகமாகத் தள்ளிச் சென்றது. பிற்பகல் நாலு மணி ஆகிவிட்டது. சிறிய, கொத்துக் கொத்தான வெள்ளை வீடுகள் ஓரம் கட்ட, ஏராளமான தென்னை மரங்களின் உச்சிகள் கூரையிட்டிருந்த அந்த நீண்ட தீவின் விவரங்களைத் தெளிவாகக் கண்டுகொள்ள, அது தீவுதானா அல்லது தீபகற்பமா என்பதை எங்களால் அறிய முடியவில்லை. அந்த வீடுகளில் மனிதர்கள் வசிக்கிறார்களா என்பதும் தெரியவில்லை. மேலும் ஒரு மணி நேரம் காத்திருந்த பின்னர்தான், நாங்கள் இறங்கப் போகும் கடற்கரையை நோக்கி மக்கள் ஓடிவருவதைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இருபது நிமிடத்திற்குள் வண்ண வண்ணமான ஒரு கும்பல் அங்கே கூடிவிட்டது. எங்களை வரவேற்பதற்காக அந்தச் சின்னஞ் சிறு கிராமம் மொத்தமும் திரண்டு விட்டது. அந்தக் கிராமத்தின் பெயர் 'ஸான் பெர்னாண்டோ' என்று பிற்பாடு தெரிந்து



கொண்டோம்.

கரையிலிருந்து முந்நூறு கெஜ தூரத்தில் நங்கூரம் பாய்ச்சினேன். உடனேயே கப்பென்று கவ்விக் கொண்டது.

பாய்மரங்களைச் சுருட்டி வைத்துவிட்டு நாங்கள் காத்திருந்தோம். ஒரு சிறிய படகு எங்களை நோக்கி வந்தது. இரண்டு கறுப்பர்கள் துடுப்பு வலித்தார்கள். ஒரு வெள்ளைக்காரர் தலையில் தொப்பியுடன் இருந்தார்.

எழுதியது: ஹென்றி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"ட்ரினிடாடுக்கு வருக! வருக!" என்று அருமையான பிரெஞ்சு மொழியில் கூறினார் அந்த வெள்ளைக்காரர். நீக்ரோக்கள் சிரித்தார்கள், தங்களுடைய வெள்ளைப் பற்கள் மொத்தமும் தெரியும்படி.

"தங்கள் வரவேற்புக்கு நன்றி. கரை எப்படி இருக்கிறது? மணலா, பாறையா?"

"மணல்தான். எவ்வித ஆபத்துமில்லாமல் வரலாம்."

நங்கூரத்தை எடுத்து விட்டோம். அலைகள் எங்களை மெதுவே கடற்கரைக்குத் தள்ளிச் சென்றன. கரையை அடையுமுன் பத்துப் பேர் தண்ணீரில் இறங்கி வந்து, எங்கள் படகை ஒரே மூச்சில் இழுத்துக் கரையேற்றிவிட்டார்கள். சிலர் எங்களை வியப்புடன் தொட்டுப் பார்த்தார்கள். கூலிப் பெண்கள் - இந்தியர்களா, நீக்ரோக்களா தெரியவில்லை - தலையசைத்து எங்களை வரவேற்றார்கள். நாங்கள் அவர்களுடன் தங்க வேண்டுமென்று அவர்கள் எல்லோரும் விரும்புவதாக, பிரெஞ்சு மொழி பேசிய அந்த வெள்ளைக்காரர் தெரிவித்தார். மாசுரெட் ஒரு பிடி மண்ணை எடுத்து முத்தமிட்டான். எத்தனை உற்சாகம்! ஜோன்ஸின் நிலையைப் பற்றி வெள்ளைக்காரரிடம் சொன்னேன். அவனைத் தன் வீட்டுக்குத் தூக்கிச் செல்லும்படி ஏற்பாடு செய்தார். கடற்கரைக்கு மிக அருகில்தான் இருந்தது அவர் வீடு. எங்கள் உடைமைகள் எல்லாவற்றையும் மறுநாள் வரையில் படகிலேயே விட்டு வைத்திருக்கலாம் என்று கூறினார் அவர். யாரும் எதையும் தொடமாட்டார்கள் என்றார். "கெட்டிக்காரக் கப்டன்! சின்னப் படகில் ரொம்பத் தூரம் வந்திருக்கிறீர்" என்றார்கள் எல்லோருமே.

இருட்டி விட்டது. படகை இன்னும் கொஞ்சம் மேலே இழுத்துவிடச் செய்து கடற்கரையில் கிடந்த வேறொரு பெரிய படகோடு அதைப் பிணைத்தேன். பிறகு அந்த ஆங்கிலேயரைப் பின் தொடர்ந்தேன். என் பின்னே மாசுரெட் வந்தான். ஆங்கிலேயரின் வீட்டில் ஜோன்ஸ், கை வைத்த நாற்காலியில் வீற்றிருக்கக் கண்டேன். காயம் பட்ட காலை இன்னொரு நாற்காலியில் நீட்டிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஓர் அம்மாளும் ஒரு பெண்ணும் இருந்தார்கள்.

"என் மனைவி, என் பெண்," என்றார் ஆங்கிலேயர். "இங்கிலாந்தில் பல்கலைக்கழகத்தில் படிக்கிறான் ஒரு மகன்."

"இது உங்கள் வீடு போல" என்றாள் அந்த அம்மாள், பிரெஞ்சு மொழியில்.

"உட்காருங்கள் ஐயா" என்று அந்தப் பெண் இரண்டு பிரம்பு நாற்காலிகளை எடுத்துப் போட்டாள்.

"நன்றி அம்மா! எங்களுக்காகச் சிரமப்படாதீர்கள்"

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். கவலைப்படாதீர்கள். மறுபடியும் சொல்கிறேன். இது உங்கள் வீடு போல."

அந்த ஆங்கிலேயர் ஒரு பாரிஸ்டர். போவன் என்பது அவர் பெயர். இருபத்தைந்து மைல் தொலைவிலுள்ள தலைநகரமான போர்ட் ஆப் ஸ்பெயினில் அவருடைய அலுவலகம் இருந்தது.

பால்டோஸ்ட், வெண்ணெய், ஜாம் முதலியவற்றுடன் டீ கொண்டு வந்தார்கள் எங்களுக்காக. நாங்கள் சுதந்திர மனிதர்களாக அனுபவித்த முதல் மாலை நேரம் அது. ஒருபோதும் எனக்கு அது மறக்காது. எங்கள் கடந்த காலத்தைப் பற்றி ஒருவரும் குடையவில்லை. அசந்தர்ப்பமான கேள்வி ஒன்று கூட இல்லை. எவ்வளவு நாட்களாக நாங்கள் கடலில் பிரயாணம் செய்தோம் என்பதைப் பற்றியும், பிரயாணம் எப்படி இருந்தது என்பதைப் பற்றியும் மட்டுமே கேட்டார்கள்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*





"**பெண்களே** நாட்டின் கண்கள்" எனக் கூறுவார்கள். பெண் என்பவள் குடும்பத்தின் விளக்கு, பெண் இனம் பொன் இனம் என்றெல்லாம் போற்றப்பட்டு வந்த பெண்களின் வரலாறுகள் அதிகம் உண்டு. இவ்விதம் எத்தனை பெருமையாய் பெண்கள் போற்றப்பட்டனரோ அதற்கு அதிகமாய் கேவலமான கருத்துக்கள், சட்டம், சம்பிரதாயம், மரபு, ஆணாதிக்க இடைச்செருகல்கள், இத்தனையும் இணைந்து பெண்களை அடக்கி ஒடுக்கினய சம்பவங்கள், வரலாற்றுப் பாதையில் சுவடுகளாய் உள்ளன. இவ்வித சுவடுகளைப் பதித்த பெண்கள் இந்நாட்டிலும் இருக்கவே இருக்கின்றனர். சொல்லொணா வேதனை, சூழ்நிலையோ பயங்கரம், இதன் மத்தியில் குடும்பத்தின் தலைவனையும் பிள்ளைகளையும் கவனித்து தலையில் கூடையைச் சுமந்தபடி கொழுந்து எடுக்கும் தேயிலைத் தோட்டப் பெண்களே இவ்வித சுவடுகளை சரித்திரத்தில் பதித்துள்ளனர். அதேவேளை இலங்கை நாட்டுக்கு ஏறக்குறைய 167 ஆண்டுகளாக மில்லியன் மில்லியனாக அந்நிய செலாவணியை தேடிக் கொடுத்துக் கொண்டே இருப்பவர்களும் இப்பெண்கள்.

ஆங்கிலேயரின் அடக்குமுறையில் மட்டுமல்ல இயற்கை, சூழல், மனிதன் அனைத்திலுமே அன்று வாழ்ந்த வனிதையர் துன்புறுத்தப்பட்டனர். இம்மங்கையர், மனிதர்களாகத் தங்களை யாருமே கணிக்காத குரூர நிதர்சனத்தையே தெரிவித்தனர். குடும்பத்திலும் கொடூரமான அடக்கு முறையில் அகப்பட்டு, அல்லட்படும் அபாக்கியவதிகளாய் வாழ்ந்தனர். உயர்சாதியினரான பிராமணர்கள், பெண்களை வீட்டிற்கு வெளியே அழைத்துச் செல்வதில்லை. இம்முறையை தாழ்குலத்தினரும் பின்பற்றினர். மேலும் கடற்பிரயாணம் கடினமானதெனவும், இலங்கையிலுள்ள கோப்பித் தோட்ட நிலைமைகள் தெரியாததினாலும் பெண்கள் அழைத்து வரப்படவில்லை. "பெண்கள் கடல் கடப்பதினால் குடும்பத்திற்கு கெடுதி விளையும்" என்ற கருத்தும் நிலவி வந்தது. இவ்விதமான கருத்துக்கள் பரவலாக இருந்தாலும் வறுமையின் கொடுமையினால் குடும்பமாக இலங்கை வந்தனர். அதனைப் பற்றிய விபரம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு - மாதம் | | ஆண் | பெண் | சிறுவர் |
|---|---|---|---|---|
| 1839 தை | குடியேற்றம் | 64 | 13 | 14 |
| | வெளியேற்றம் | 91 | 10 | 4 |
| 1841 மாசி | குடியேற்றம் | 265 | 31 | 16 |
| | வெளியேற்றம் | 270 | 35 | 10 |
| 1843 பங்குனி | குடியேற்றம் | 250 | 14 | 7 |
| | வெளியேற்றம் | 314 | 13 | 9 |
| 1845 சித்திரை | குடியேற்றம் | 329 | 36 | 15 |
| | வெளியேற்றம் | 224 | 20 | 18 |
| 1847 வைகாசி | குடியேற்றம் | 294 | 42 | 13 |
| | வெளியேற்றம் | 215 | 21 | 13 |

*இவ்வட்டவணை மூலம் குறைந்தளவு பெண்களே வருகை தந்துள்ளனர்.*

மனித வளத்தை மட்டுமே எதிர்பார்த்த பிரித்தானியர், கூலிக்கு குடும்பம், மனைவி என்பன தேவையா? என நினைத்தனர். குடும்பம் எப்போது பிள்ளைகள் பராமரிப்பு, பொருளாதாரப் பிரச்சினைகள் என்பன வேலையில் பாதிப்பைக் கொண்டு வரும். இதனிமித்தமாக கூலியாட்கள் திறன்பட வேலை செய்யமாட்டார்கள். இதனை மனதிற்கொண்ட பிரித்தானியர்கள் பெண்கள் இலங்கை வருவதை குறித்து சிரத்தை காட்டவில்லை. கணவன் ஒரு புறம், மனைவி ஒரு புறம் என்ற நிலையில் குடும்பங்கள் பிளவுபட்டு காணப்பட்டன. கணவன், மனைவியை சந்தேகத்துடன் பார்க்கும் வாய்ப்புகள் அதிகரித்தன. மனைவியை குறித்த ஊமையான பொய்கள் குடும்பங்களில் பல பிரச்சினைகளை உருவாக்கின. இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் போதும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் போதும் மனைவி தனிமையிலிருக்கிறாள். மீண்டும் கணவன் வந்ததும் கூறப்படும் பொய்களினால், அவளுக்கு அடியும் உதையும் தான் கிடைக்கின்றது. இதில் பெண்கள் வாய் பேசாத பூச்சிகளாய் அடக்கியாளப்பட்டனர். எதிர்த்துப் பேசும் பெண்களை கணவன்மார் வீட்டை விட்டுத் துரத்தினர். வாளாவெட்டி என்ற பெயர் சூட்டி ஒதுக்கிவைத்தனர். அதே வேளை ஆண்கள் எவ்விதமாக நடந்தாலும் மனைவியானவள் கேட்கக்கூடாது. கணவன் செய்யும் பிழைகளை, மனைவி கண்டாலும் காணாதவள் போல இருக்கவேண்டும் என வற்புறுத்தப்பட்ட வாழ்க்கைக்குள், ஆணாதிக்க அடிமைக்குள் அமிழ்த்தப்பட்டாள். ஆனாலும் உழைப்பில் உயர்மகளிராக இங்கு வந்த தென்னிந்தியப் பெண்கள் திகழ்ந்தனர். இதற்குப் பின்வரும் பாடல் எடுத்துகாட்டாக உள்ளது.



**கோப்பி மரத்தில் தொட்டில் கட்டி**
**குழந்தையை அதில் தூங்க**
**வைத்து சாப்பிடக் கூட நேரம் இன்றி**
**சலியாமல் உழைத்த**
**இம்மாதரினம்**

என்று மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தனர். இவ்வித வாழ்க்கையை உள்ளடக்கியதாக அக்காலப் பெண்கள் வாழ்ந்தனர். ஆன்று ஆதிக்கம் புரிந்த ஆங்கிலேயனும் குதிரை மேலேறி சாட்டையோடு வந்து சத்தம் போட்டு மிரட்டி, பெண்களை நடுநடுங்க வைத்தான். இப்படியான சிரமங்களை, சிக்கலான வாழ்க்கை வாழ்ந்தே மலையகப் பரம்பரை சரித்திரம் படைத்துள்ளது. கோப்பிக் காலம் முடிந்து தேயிலை பயிர் செய்கையின் போது கொழுந்து பறிப்பதற்கு அதிகம் பெண்கள் தேவைப்பட்டனர். இதன் காரணமாக பிரித்தானியார் இந்தியாவிலிருந்து பெண்களை வரவழைத்தனர். அவர்களின் விவரம் பின்வருமாறு உள்ளது. 1844 – 1850 வரையுள்ள பெண், ஆண்களின் வருகை மிகக்கிட்டிய முழு எண்களில், நிரல் வரைபுகளில் குறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறிய சதுரங்களும் 250 ஆட்களைக் குறிக்கும்.

**(துளிர்க்கும்)**

ஸ்ரீ முகன்

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"







**அவைகள்** தீர்ந்துவிடுவதற்கு முன்னால், தங்கம் கிடைக்கிதோ இல்லையோ தங்கள் ஊர்களுக்குத் திரும்பி வந்துவிட வேண்டும். இல்லையென்றால் பட்டினி, பனி காரணமாக சாவு நிச்சயம். போனவர்களில் பலர் பசியினால் மரணம் அடைந்தார்கள். தங்கம் கிடைக்காமல் பனி மழையில், காற்றில் சிக்கிப் பைத்தியம் பிடித்து அலைந்தார்கள்.

தங்கத்தைத் தேடிச் சென்றவர்கள் யார்? பெரும்பாலானவர்கள் ஏழைகள். பணக்காரனாக வேண்டும் என்ற பேராசை கொண்டவர்கள் பலர். 'துணிச்சலான காரியங்களைச் செய்து முடித்து வெற்றி பெற வேண்டும்' என்ற மனப்பான்மை சிலர் இரத்தத்தில் ஊறியிருக்கும். இமயமலை உச்சியைத் தொட வேண்டும் என்று சொல்கிறார்களே அவர்களைப் போல.

தங்கம் நிறையவே கிடைக்கிறது என்ற பொன்னான செய்தி அமெரிக்க நாட்டில் பரவியவுடன் பலர் கிளாண்டைக்கிற்குச் சென்றார்கள். அங்கே சேருவதற்கு முன்பு 'கில் கூட் பாஸ்' என்ற பனி சூழ்ந்த மலைகளுக்கு நடுவில் செல்ல வேண்டும். அங்கு



சென்றவர்களின் அனுபவங்கள், பட்ட கஷ்டங்கள் இவைகளெல்லாம் அமெரிக்காவில் மக்களிடையே கதை போல் பரவியது. அக்காலத்தில் இருந்த சில பத்திரிகைகளும் அவைகளைப் பற்றி எழுதின. அதைப் படித்த சாப்ளினின் மனதில், அந்தப் பொன் தேடும் புராணத்தை மையமாக வைத்துப் படத்தை எடுக்க வேண்டும் என்று தோன்றியது. 'க்ளாண்டைக்' பிரதேசத்தில் பனிக்கு அடியில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை எடுக்க அமெரிக்க மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லத் தொடங்கினார்கள். சில முதலாளிகள் தாங்கள் செல்லாமல், சிலரை வேலைக்கு அனுப்பினார்கள். இது ஒரு வியாபாரமாகவே முளைத்தது. இந்தப் பேராசையின் பெருக்கத்தில் தங்கத்தை நாடிச் சென்ற கூட்டம் அதிகரிக்கவே 'க்ளாண்டைக்' கோல்டு ரஷ் என்று அழைத்தார்கள். சாப்ளின் முதல் வார்த்தையை நீக்கிவிட்டு தன் படத்திற்கு "கோல்ட் ரஷ்" என்று பெயர் வைத்தார். இதில் சிரிப்பைவிட சாப்ளின் மக்களைச் சிந்திக்க வைக்க நினைத்தார். வயிற்றை நிரப்ப, பசியை அடக்க உலகத்தில் மனிதன் எதையெல்லாம் செய்யத் துணிகிறான்! பசிக்காகத் தங்கத்தைத் தேடுவானேன்? அது ஆசையா? ஆர்வமா? அல்லது பேராசையா? பசியால் வாடும் மனிதனின் மனதில் இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றுமா? சொந்த ஊரில் வேலை கிடைக்கவில்லை என்ற நிலைமையில் உள்ள ஏழை - படத்தில் சாப்ளினைப் போல - ஒரே ஒரு தங்கக்கட்டி கிடைத்தால் உடனடியாக வசதியான வாழ்க்கை வாழலாம் என்ற எண்ணத்தில் தான் செல்கிறான் என்ற கொள்கை சாப்ளினுக்கு. அவன் செல்வதற்கு அடிப்படைக் காரணம் பொன் ஆசை அல்ல, பசிதான். மனிதர்கள் புதுவாழ்வைத் தேடி பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளுக்குச் செல்வானேன்? அதற்கும் அடிப்படையில் பசிதான் காரணம். ஆரம்ப காலத்தில் பசி பட்டினியால் வாடியதால் சாப்ளினுக்கு இந்த அடிப்படைக் கொள்கை, மனதில் சூழ்ந்திருந்தது என்றால் அதில் ஆச்சரியமே இல்லை.

"கோல்ட் ரஷ்" முதல் காட்சியில் நடந்து, நடந்து ஓய்ந்து போன பலர் சில்கூட்பாஸ் வழியாகப் பனிமலையில் ஏறுவதோடு ஆரம்பிக்கிறது. அந்த வரிசையில் கடைசியில் கைப் பிரம்பை அப்படி இப்படி ஆட்டிக் கொண்டு தன் வழக்கமான நடை அலங்காரத்தோடு பனியில் பவனி வருகிறார் சாப்ளின். அவருக்குப் பின்னாலேயே வருகிறது ஒரு கரடி! அது அவருக்குத் தெரியாது. அவர் கவலை எல்லாம் எங்கு உணவு கிடைக்கும்.... எங்கு தங்குவது... எங்கு தூங்குவது என்பவை பற்றித்தான்.

அந்தப் பிரதேசத்தில் கரடிகள் மட்டும்தான் வாழமுடியும். மனிதர்களால் முடியாது. பின்னால் வரும் கரடி அவரைத் தாக்காமல் நிதானமாகவே நடக்கிறது. அது தங்கும் குகை வந்ததும் உள்ளே நுழைந்து விடுகிறது. மிருகத்திற்கும் தங்க வீடு உள்ளது. மனிதனுக்கு இல்லையே என்ற ஒரு ஆழமான கொள்கையை இந்த ஒரு சிறு காட்சியின் மூலம் புரிய வைக்கிறார் சாப்ளின். இப்படித் தொடக்கத்திலிருந்தே பார்ப்பவர்களை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறார் சாப்ளின். அதுதான் அவருடைய சிறப்பு. அவருடைய படங்கள் இத்தனை ஆண்டுகள் கழிந்த பிறகும் மக்களைச் சிரிக்க வைப்பது மட்டுமன்றி சிந்திக்கவும் வைக்கிறது என்றால் அதற்குக் காரணம் அவருடைய திறமையும், உழைப்பும் மட்டுமல்ல, மனித சமுதாயத்தைப் பற்றி அவர் ஆழமாகச் சிந்தித்ததும்தான். இந்த எண்ணம் சாதாரணமாகத் திரைப்பட உலகில் இருப்பவர்களின் மனதில் தோன்றாது. அந்த வகையில் சார்லி சாப்ளின் ஆயிரத்தில் ஒருவர் அல்ல, பல கோடியில் ஒருவர்.


பலமாக வீசிக் கொண்டிருக்கும் பனிக்காற்றில் தத்தளித்து, பாறைகளின் மீது ஏறிக் கீழே விழுந்து, மீண்டும் ஏறி நடக்கலானார். அப்பொழுது அவர் கண்ணில் படுகிறது, பனிமலையின் உச்சியில் உள்ள ஒரு சிறிய குடில் (Cottage). தட்டுத் தடுமாறி அதற்குள் நுழைகிறார். அங்கு இருந்தவன் ஒரு முரடன். சாப்ளினை உடனடியாக வெளியேறும்படி மிரட்டுகிறான் அவன். அவர் கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல அடி எடுத்து வைக்கும் போது, வீசிக் கொண்டிருக்கும் பனி, புயல், காற்று அவரை மீண்டும் உள்ளே தள்ளி விடுகிறது! அந்த முரடன் அவரைப் பலமாகத் தள்ள முயற்சிக்கிறான். இருவரையும் தள்ளுகிறது காற்று. இதற்குள் வீசும் புயலின் வேகத்தில் மற்றொருவன் உள்ளே தள்ளப்படுகிறான். அதுவும் தனியாக அல்ல; அவனது கூடாரத்தோடு. அவன் பெயர் 'பிக் ஜிம். பெயருக்குத் தகுந்தாற் போல் உயரமும், அகலமும் உள்ளவன். இப்பொழுது முரடனுக்கு இருவரையும் வெளியேற்ற வேண்டிய நிலைமை. வீசும் புயல்காற்றில் மூவரும் வெளியிலிருந்து உள்ளே தள்ளப்படுகிறார்கள். அந்தக் குடிலுக்குப் பின்புறம் ஒரு கதவு. இரண்டு முரடன்களும் இரண்டு கதவுகள் வழியாக வீசும் காற்றின் பலத்தால் உள்ளேயும், வெளியேயும், வெளியேயும், உள்ளேயும் பின் முன் கதவுகளின் வழியாகத் தள்ளப்படுகிறார்கள். மீண்டும் உள்ளே வருகிறார்கள். இரண்டு கதவுகள், வீசும் புயல்காற்று இவைகளை மட்டும் வைத்துக் கொண்டே ஒரு பிரமாதமான நகைச்சுவைக் காட்சியை உருவாக்கினார். அதில் ஒரு பாடத்தையும் வைத்தார். மனிதனால் இயற்கையோடு போராட முடியாது என்பதுதான் அது.

*(தொடரும்)*

# திருமணமாகாத யுவதிகளிடத்தில் அதிகரிக்கும் கருக்கலைப்பு!!

**இலங்கையில்** அண்மைக்காலங்களில் திருமணமாகாத பெண்கள் கருக்கலைப்புச் செய்து கொள்ளும் சதவீதம் அதிகரித்துள்ளதாக சுகாதாரக் கல்விப் பணியகம் உட்பட பல்வேறு அமைப்புகளின் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதில் 25 வயதிற்குட்பட்ட இளம் யுவதிகளே இவ்வாறு சட்டவிரோதமாகக் கருக்கலைப்புச் செய்து கொள்வதாகவும் குறிப்பாக பாடசாலை மாணவிகள், தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் பெண்கள், பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லும் யுவதிகள், ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் புரியும் பெண்கள் போன்றோரே இப்புள்ளி விபரத்தில் அதிகமாக உள்ளடக்கப்படுகின்றனர்.

அனாவசியமாக ஏற்படும் கர்ப்பத்தினைக் கலைப்பதற்காக இவ்வாறு மேற்கொள்ளப்படும் சட்ட விரோதமான கருக்கலைப்பினால் உடல் ரீதியாக விபரீதமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதுடன், இதனால் ஏற்படும் கலாசாரச் சீரழிவுகள், பாலியல் நோய்கள் பற்றியும், சமூகத்தில் ஏற்படக்கூடிய அவப் பெயர் மட்டுமல்லாது எதிர்கால இல்லற வாழ்க்கையே சூனியமாகிப் போகக்கூடிய விளைவுகள் பற்றி தற்போதைய இளம் யுவதிகள் சிந்திக்கத் தவறுவதும், காதல் என்ற பெயரில் எல்லை தாண்டிய தகாத உறவுகளாலுமே இன்றைய இளம் யுவதிகள் இத்தகைய பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. திருமணமாகும் முன்பே இளம் யுவதிகள் கர்ப்பமாவதற்கும், அதிலிருந்து மீள்வதற்காக கருக்கலைப்புச் செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவதற்கு பல புறக்காரணிகள் இருக்கின்றபோதும், சம்பந்தப்பட்ட பெண்களின் நடத்தையும், முன்யோசனையற்ற தன்மையுமே முதன்மை பெறுகிறது. இன்றைய இளம் யுவதிகளில் குறிப்பாக பாடசாலை மாணவிகள், பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லும் யுவதிகளில் அநேகமானோர் காதல் என்ற பெயரில் இனக்கவர்ச்சியினால் தூண்டப்பட்டு உணர்ச்சிகளுக்கு அடிமையாகி இரண்டொரு நாள் ஓர் இளைஞனுடன் பழகியதும் ஹோட்டல், பீச் என்று சுற்றத் தொடங்குகிறார்கள். இத்தகைய சூழலில் அவர்கள் எல்லை மீறி நடந்து கொள்வதனால் இத்தகைய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. நகரப்புற பாடசாலை மாணவிகள் சிலர் தமது புத்தகப்பைகளுக்குள் மேலதிகமாக மாற்று உடைகளை மறைத்துப் பெற்றோர்களுக்குத் தெரியாமல் எடுத்துச்



செல்கின்றனர். பின்னர் பாடசாலை செல்லாது உடையை மாற்றிக் கொண்டு தமது ஆண் சிநேகிதர்களுடன் தமது இஷ்டப்படி பொழுதைக் கழித்துவிட்டு குறிப்பிட்ட நேரத்தில் சீருடையுடன் வீடு செல்கின்றனர். இதனால் இவர்களது கல்வி சீரழிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் புத்தகத்திற்குப் பதிலாக வயிற்றில் குழந்தையைச் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். எதிர்காலம் பற்றிய போதிய விழிப்புணர்வின்மை, ஆடம்பர மோகம், அளவுக்கதிகமான சுதந்திரம், பணவசதி போன்றன, இத்தகைய மாணவிகளின் சீரழிவிற்குத் துணை போகின்றன.


இதுதவிர இத்தகைய தவறுகளுக்குப் பெற்றோர்களும் காரணமாக இருக்கின்றனர். அதாவது பொறுப்பற்ற பெற்றோர்களை இதற்குள் அடக்கலாம். பெற்றோர்கள் தமது பெண்பிள்ளைகளுக்கு அதிகளவு சுதந்திரம் கொடுப்பது, சிறுவயதிலேயே அதிக ஆடம்பரம், வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது, தமது பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள், செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்காது அலட்சியப்படுத்துவது, கண்டிப்பின்றி வளர்ப்பது போன்ற காரணங்களால் பிள்ளைகள் பயமின்றி தமது இஷ்டத்திற்கு நடந்து கொள்கின்றனர். எனவே பெற்றோர் தமது பெண் பிள்ளைகள் விடயத்தில் மிகவும் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பும், தேவையும் அவசியம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் குடும்பங்களில் நிலவும் வறுமையும் இத்தகைய சூழலுக்கு இளம் யுவதிகள் தள்ளப்படுகின்றமைக்குக் காரணமாகின்றது. குறிப்பாக வறுமை காரணமாகவே பல இளம் யுவதிகள் தனியார் நிறுவனங்களிலும் ஆடைத் தொழிற்சாலைகளிலும் தொழில் புரிய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் இங்கும் வழமையான காதல் என்பதற்கும் மேலதிகமாக முதலாளிமார்களின் பணவீச்சுக்கும், மிரட்டலுக்கும் அடிபணிந்து தம்மை அடகு வைக்கும் இளம் பெண்கள், இத்தகைய கருக்கலைப்புக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் பலர் இரவு நேர வேலைக்குச் செல்வதாலும் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லாததாலும், பெற்றோர் வறுமை காரணமாக தமது மகளிடமிருந்து வருமானத்தை மட்டுமே எதிர்பார்ப்பதாலும் பல தவறுகள் இடம் பெற ஏதுவாகின்றது. ஏழைகளாக இருப்பினும், தமது மகளுக்கு குறிப்பிட்ட வயதில் ஒரு திருமணத்தை நடத்தி வைக்கும் பொறுப்பிலிருந்து பெற்றோர்கள் தவறிவிடுவதும் இளம் பெண்கள் தவறான வழியில் தமது காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள வழி வகுக்கின்றது. எது எப்படி இருப்பினும், இளம் பெண்கள் தமக்குத் தாமே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பெரும்பாலும் பல சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதுடன், சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழுகின்ற நிலைமையைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இளமையின் வேகமும், முன் யோசனையற்ற தன்மையினாலும் தவறு செய்யும் இளம் யுவதிகள் தாம் கருக்கலைப்புச் செய்து கொள்வதால், ஏற்படக்கூடிய விபரீதங்களை அறிந்திருப்பதும் அவசியமானது. திருமணமான பெண்கள் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் தவிர்க்க விரும்புகின்ற போதும், முறையற்ற குடும்பக் கட்டுப்பாட்டு முறையினை பின்பற்றுவதால் ஏற்படும் கர்ப்பத்தையும், இளம் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுவதால் ஏற்படும் கர்ப்பத்தினையும் தாமாக விரும்பி பாதுகாப்பான முறையில் வைத்தியரின் ஆலோசனைப்படி செய்து கொள்ளும் கருக்கலைப்பானது ஓரளவு பாதுகாப்பானது என்று கருதினாலும்,

**- எஸ்.வர்மன் -**

திருமணமாகாத இளம் பெண்கள் சட்டவிரோதமாக பாதுகாப்பற்ற முறையில் செய்து கொள்ளும் கருக்கலைப்பு பல தீமைகளை ஏற்படுத்தக்கூடியது. கருக்கலைப்புச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உரிய முறையில் தொற்று நீக்கப்படாதவிடத்து கர்ப்பப்பை, பலோப்பியன் குழாய் என்பன கிருமித் தொற்றுக்கு உள்ளாகி பாதிக்கப்படுவதுடன், அரைகுறையாக செய்யப்படும் கருக்கலைப்பின்போது எஞ்சிய பகுதிகளில் கிருமித் தொற்று ஏற்பட்டு இரத்தத்தில் நச்சுப்பொருட்கள்



சேர்வதால் மரணம் கூட சம்பவிக்கும். இன்னும் சிலர் கர்ப்பமானதை உணர்ந்தவுடன், சுயமாக முடிவெடுத்து அஸ்பிரின் போன்ற மாத்திரைகளை அளவுக்கதிகமாக உட்கொள்கின்றனர். இதனால் ஏற்படும் கருச்சிதைவினால் அதிகளவு இரத்தப்போக்கு ஏற்பட்டு பல மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. தவிரவும், கர்ப்பப்பை, பலோப்பியன் குழாய் என்பன பாதிப்புக்குள்ளாவதால் பிற்காலத்தில் நிரந்தரமாக தாய்மைப்பேற்றை இழக்கக்கூடிய நிலைமை அல்லது தொடர்ச்சியான கருச்சிதைவு

*(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## வி.பி.சிங், சந்திரசேகர் அரசுகள் இலங்கையில் தலையிட விரும்பவில்லை

**1983ஆம்** ஆண்டு ஆடி இன சங்காரத்தை அடுத்து, இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆறாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இலங்கை அரசியல் யாப்புக்கு விசுவாசமாக இருப்பதென்றும், நாடு பிரிவினைக்கு ஆதரவு வழங்குவதில்லையென்றும் இச் சட்டத்திருத்தம் வலியுறுத்தியது. இச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து அமிர்தலிங்கம் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தனர். 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பில் போட்டியிட்ட அமிர்தலிங்கம் தோல்வியுற்றார். இருந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின் கீழ் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப்., ரெலோ ஆகியவற்றின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பி.யாக அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டார். மீண்டும் பாராளுமன்றம் வந்த அமிர்தலிங்கம் மிகுந்த முதிர்ச்சியுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டாரென்று 'புரண்ட் லைன்" சஞ்சிகையின் ஆசிரியரான என்.ராம் பின்னாட்களில் குறிப்பிட்டார்.




ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அரசாங்கத்துடன் நட்புறவு பாராட்டிவந்த காலத்திலேயே தமக்கு எதிரானவர்களை அழித்தொழிக்கும் கைங்கரியத்தில் புலிகள் இயக்கம் ஈடுபடத் தொடங்கியது. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகிய மிதவாதத் தலைவர்களை மட்டுமல்ல, பத்மநாபா உட்பட ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்கள் பலரைப் புலிகள் இயக்கம் சென்னையில் வைத்து சுட்டுக் கொன்றனர். தமிழக முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனின் மறைவு, இந்திய மத்திய அரசின் அதிகாரத்தை வி.பி.சிங் தலைமையிலான கூட்டணி கைப்பற்றிக் கொண்டமை போன்றவற்றால், இலங்கை-



*1990ஆம் ஆண்டு சென்னை சர்க்காரியா காலனியில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபாவும், அவ் இயக்கத்தைச் சேர்ந்த மேலும் பன்னிரெண்டு முக்கியஸ்தர்களும் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொலையுண்ட சிலரின் பிரேதப் பேழைகளைச் சுற்றி நின்று மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர்.*

- இந்திய நிலைப்பாடுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவராக ராஜீவ் காந்தி விளங்கிய போதிலும் இலங்கைத் தமிழ் குழுக்கள் பலர் காந்தியுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு கேட்டுக் கொண்டன. இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்குமாறு வி.பி.சிங். அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்குமாறு இக் கட்சிகள் ராஜிவ் காந்தியை வேண்டிக் கொண்டன.

அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்ட பின்னரும் கூடப் புலி இயக்கப் பிரதிநிதிகள் ராஜிவ் காந்தியை

(அரசியல் தொடர்)

அணுகிப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மதித்து, அதனடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு ராஜிவ் காந்தி வலியுறுத்தினார். இது தொடர்பாகப் பிரேமதாசா அரசுடன் பேசுமாறு தமிழ் குழுக்களை ராஜிவ் காந்தி வேண்டிக் கொண்டார். தமிழகத்தில் கருணாநிதியின் ஆட்சியின் கீழ் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் மீண்டும் புத்துயிர் பெற்றன. இலங்கையிலிருந்து வெளியேறிய வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கு ஒரிஸாவில் பாதுகாப்பும் தங்குமிட வசதிகளும் இந்திய அரசால் செய்து கொடுக்கப்பட்டது. இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டு வெளியேறியபோது இங்கிருந்து சென்ற ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப். ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு தமிழகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இதற்கிடையில் வடக்கு, கிழக்கில் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப், ரெலோ இயக்க உறுப்பினர்களைப் புலிகள் இயக்கம் வேட்டையாடத் தொடங்கியது. பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் கைது செய்யப்பட்டனர். மாற்று இயக்கங்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட சுமார் ஐயாயிரம் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு புலிகளின் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இவர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. சுமார் ஐயாயிரம் பேர் வரையிலான இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. இவர்களில் பலர் கொல்லப்பட்ட செய்திகள் பல வருடங்களின் பின்னர், சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் புலிகள் இயக்கத்தினால் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் வி.பி.சிங் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த, இலங்கை விவகாரத்தில் தலையிடாக் கொள்கை புலிகள் இயக்கத்திற்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தது. இலங்கையில் வடக்கு, கிழக்கெங்கும் புலிகள் தமது செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொண்டதோடு, அரசாங்கப் படைகள் மீது பரவலாக தமது தாக்குதலைத் தொடுக்க ஆரம்பித்தது. அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீதூடாக இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தை குழப்பியடிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைக்கென யாழ்ப்பாணம் சென்றிருந்த அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத், கொழும்பு செல்வதற்கு விமானம் ஏறியபோது, அவருக்கு சமீபமாக புலிகள் எறிகணைத் தாக்குதல்களைச் சரமாரியாக நடத்தினர். அமைச்சர் ஹமீத் மயிரிழையில் உயிர் தப்பினாரென்று அப்போது பரவலாக கதைகள் அடிபட்டன. 1990ஆம் ஆண்டு புலி

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

களின் வன்செயல் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன. இந்தியாவில் வி.பி.சிங் அரசாங்கம் அதிக காலம் நீடித்து நிற்கவில்லை. வி.பி.சிங்கிற்குப் பின்னர் சந்திரசேகர் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றுக் கொண்டார். அவரது அரசாங்கம் கூட நீடித்து நிற்கக்கூடிய நிலை காணப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே சந்திரசேகரின் அரசாங்கம் ஈடாடத் தொடங்கியது. இதற்கிடையில் ராஜிவ் காந்திக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை வி.பி.சிங் அரசாங்கமும் சந்திரசேகரின் அரசாங்கமும் படிப்படியாக குறைத்துக் கொண்டன.

1991ஆம் ஆண்டு இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறுவது தவிர்க்க முடியாதது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. ராஜிவ் காந்தியின் தோல்விக்குப் பின்னர் இந்திய அரசியலில் ஏற்பட்ட குழப்ப நிலை, ராஜிவ் காந்திக்குச் சாதகமானதாக மாறியது. பொதுத் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் ராஜிவ் காந்தி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய சாதகமான அம்சங்களே அதிகமாகக் காணப்பட்டன. ராஜிவ் காந்தி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இந்தியா மீண்டும் இலங்கை விவகாரத்தில் தலையிடக்கூடிய சூழ்நிலை எழக்கூடுமென்ற பீதி மனோபாவம் புலிகள் இயக்கத்தினர் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. இந்திய அமைதிப் படையை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு ஒத்துழைப்பு நல்கிய புலிகள் இயக்கம், பிரேமதாசா அரசு மீது தாக்குதல்களைத் தொடுக்க ஆரம்பித்திருந்தது. இதனால் புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியப் படையை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கம் கோரலாமென்று புலிகள் இயக்கம், பயம் கொண்டிருந்தது. ஆனால் இலங்கை விவகாரத்தில் மெத்தனத் தன்மையைக் கடைப்பிடிக்கும் போக்கே ராஜிவ் காந்தியிடம் காணப்பட்டது. இலங்கை விவகாரத்தில் விரலைச் சுட்டுக் கொண்டு விட்டதால், ராஜிவ் காந்தி மீண்டும் தலையிடமாட்டாரென்ற அபிப்பிராயமே பெரும்பாலும் பொதுவாகக் காணப்பட்டது. இலங்கையில் சிங்களத் தரப்பினரும், சமாதானத்தை விரும்பிய தமிழ் தரப்பினரும் இந்தியாவில் ராஜிவ் காந்தி ஆட்சிக்கு வர வேண்டுமென்பதையே பெரிதும் விரும்பினர்.

(தொடர்ந்து வடியும்....)




பிரபாகரனோட ஆத்மா, உடம்பில்லாம திரிஞ்சாகூடப் பரவாயில்லை. அத சுகமா எப்படி எங்க வாழ வைக்கனும்னு எனக்குத் தெரியும். ஏ! சொல்புத்தி கேக்கற பைசாசமே! தொலைஞ்சு போ!" என்று கத்திக் கொண்டே கோவிந்தனை நோக்கிப் பாய்ந்தாள் ஸ்ரீதேவி.

அவள் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.அத்தனை நேரம் வெறியோடு நின்றிருந்த கோவிந்தன், ஸ்ரீதேவியின் உக்ர வடிவத்தைப் பார்த்து அப்படியே காலில் விழுந்தான். "அம்மா ரட்சிக்கணும். பகவதி! என்னைக் காப்பாத்து. என்னை ஒண்ணும் பண்ணிடாத. அந்த ஜயந்தன் தான் இந்த உடம்பைக் கொடுத்தான். அதுக்கு விஸ்வாசமா இருக்கணும்னுதான் நான் பழியா அலையறேன். என்ன எரிச்சுடாத! என்னக் கொண்ணுடாத! என்ன ஒண்ணும் பண்ணிடாத!" என்று கதறினான்.

ஸ்ரீதேவி அப்படியே கோபக் கனல் சிலையாக நின்றாள். "டேய் எழுந்திரு! நேரா தோப்புக்குப் போ. அங்க இருக்கற உன் எஜமானருங்கள தீர்த்துக்கட்டு. நீ தனி ஆளா செய்ய வேணாம். நானும் துணைக்கு வாறேன். சந்து நாயருக்கு கொள்ளி வைக்கக்கூட ஒருத்தனும் மிஞ்சக்கூடாது. அவன் பரம்பரை மொத்தத்துக்கும் நாளைக்குப் பால் ஊத்தணும். அவங்க கதை முடிஞ்சதும், நீ பிரபாகரனோட உடம்ப விட்டு ஓடிடணும். இல்ல..." என்று விரட்டினாள் ஸ்ரீதேவி.

"உடம்பு இல்லாம நான் என்ன பண்ணுவேன்?" என்று அரற்றினான் கோவிந்தன். "உனக்கு நல்ல கதி கொடுக்கறது என் பொறுப்பு. இது சத்தியம். இப்ப ஓடு!" என்றாள் ஸ்ரீதேவி.

கோவிந்தன் ஓட ஆரம்பித்தான். நடப்பது எதுவும் சரிவரப் புரியாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தார் குமார். அவரை அழைத்துக் கொண்டு புயலைப் போல் தென்னந்தோப்பை நோக்கிச் சென்றாள் ஸ்ரீதேவி.


தோப்புக்குள் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தனர்

**எழுதுவது**
**சிவன்**

ஜயந்தனும், சந்து நாயரும். "இன்னிக்கு எப்படியிருந்தாலும் அவங்க கதைய முடிச்சுடுவான் கோவிந்தன்" என்று சொல்லிச் சிரித்தார் சந்துநாயர். "முடிக்காம நான் சும்மா விடுவேனா? அவன் உடம்பை பிடுங்கிடமாட்டேன்?" என்று ஆர்ப்பாட்டமாகச் சிரித்தான் ஜயந்தன். அப்போது ஆவேசமாக உள்ளே நுழைந்தான் கோவிந்தன். அவனைப் பார்த்ததும், "என்ன கோவிந்தா? ஒழிஞ்சானா அந்த வாத்தியாரு?" என்றார் சந்துநாயர். கோவிந்தன் பதில் பேசாமல் அவர்களை முறைத்தபடி நின்று கொண்டிருந்தான். சந்துநாயர் மறுபடியும் ஏதோ கேட்க ஆரம்பித்தபோது, ஜயந்தன் அவரைத் தடுத்தான். "நாயரே கொஞ்சம் சும்மா இருங்க. நம்ம ஆளுகிட்ட ஏதோ மாற்றம் தெரியுது" என்று கிசுகிசுத்தான்.

அதைப் பார்த்த கோவிந்தன், "என்னடா முணுமுணுக்கற? நீ கொடுத்த உடம்பும் வேணாம்; நீயும் வேணாம். அந்தப் பொண்ணு என் கண்ணைத் தொறந்துடுச்சு. நீங்க ரெண்டு பேரும் மரியாதையா அவ கால்ல விழுந்து மன்னிப்புக் கேளுங்க. இல்லேன்னா நானே உங்க ரெண்டு பேரையும் பரலோகம் அனுப்பிடுவேன்" என்றான்.

சந்து நாயருக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'நேற்று வரை நாய் போல் கிடந்தவனுக்கு, எங்கிருந்து இத்தனை தைரியம் வந்தது?' என்று யோசித்தார். ஜயந்தனோ ஆத்திரத்தின் எல்லைக்கே போய்விட்டார்.



"கோவிந்தா! நீ என்ன பேசற, யார்கிட்ட பேசறேன்னு தெரிஞ்சுதான் சொல்றியா? என்னை யாருன்னு நினைச்சுக்கிட்டிருக்க? அந்த ஸ்ரீதேவி மாதிரி நூறு பேரைச் சமாளிப்பேன். உனக்கு அவ்வளவு துணிச்சலா? அந்தப் பொட்டச்சி உன்னை மந்திரிச்சு அனுப்பினாளா?" என்று குரோதமாகக் கேட்டார்.

"ஆமாம். நான்தான் அவனை அனுப்பினேன். இப்ப என்ன பண்ணப்போற?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தாள் ஸ்ரீதேவி. அவள் பின்னால் குமார். ஜயந்தனுக்குக் கோபம் கண்ணை மறைத்தது. பயங்கர சக்தியுடைய தன் ஜப மாலையைக் கழற்றி அதை ஸ்ரீதேவியைப் பார்த்து வீசினார். கண்ணிமைக்கும் நேரத்தில் வாயைக் குவித்துபெருத்த ஓசையோடு அந்த மாலையைப் பார்த்து ஊதினாள் ஸ்ரீதேவி. அது எங்கேயோ மூலையில் பறந்து போய் விழுந்தது.

ஜயந்தனுக்கு உடல் நடுங்கியது. ஆனாலும் தளர்ந்து விடாமல் ஸ்ரீதேவியோடு மோதத் தயாரானார். சந்து நாயருக்கு ஒன்றும் பிடிபடவில்லை. பயத்தில் தன் பிள்ளைகளின் பேரைக் கூப்பிட்டுக் கத்தினார். தோப்பின் ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்த அவர்கள், என்னவோ ஏதோவென்று பதறியபடி, அங்கே ஓடி வந்தார்கள். அதற்குள் கமண்டலத்திலிருந்த தண்ணீரை எடுத்து ஏதோ ஜபிக்கத் தொடங்கினான் ஜயந்தன்.

நிலைமை தீவிரமாவதை உணர்ந்த கோவிந்தன், ஒரேயடியாகத் துள்ளி ஜயந்தனின் வயிற்றில் ஒரு உதை விட்டான். அந்த உதையின் வேகத்தில் ஜயந்தனின் கையிலிருந்த கமண்டலம் எகிறி விழுந்தது. வயிற்றில் விழுந்த பலமான அடியால் அவன் வாயிலிருந்து இரத்தம் கசிந்தது. மூலையில் சுருண்டு விழுந்த ஜயந்தன், மறுபடியும் சில மந்திரங்களை அவசர, அவசரமாக உருவேற்றத் தொடங்கியபோது, அவனுடைய தாடை பிளந்து போகும்படி ஒரு அறை விட்டான் கோவிந்தன். அப்போது ஜயந்தன் அலறிய அலறலில் ஊரே நடுங்கியது. மரத்தில் தங்கியிருந்த பறவைகள் கோரமாகக் கத்திக் கொண்டு அங்கும், இங்கும் பறந்தன. ஊரில் தூங்கிக் கொண்டிருந்தவர்களின் காதுகளிலெல்லாம் ஜயந்தனுடைய அலறல் கேட்டது. தூக்கம் கலைந்த ஜனங்கள், வீட்டை விட்டு வெளியே வந்து தென்னந்தோப்பு இருக்கும் திசையைப் பார்த்தனர்.

அதற்குள் குமாரும் களத்தில் இறங்கியிருந்தார். சந்து நாயரும், அவர் பிள்ளைகளும் தப்பி ஓடிவிட முடியாதபடி சுழன்று, சுழன்று தாக்கினர். குமார் விட்ட உதைகள் தாங்காமல், அவர்கள் எல்லோருமாகப் போட்ட சத்தத்தில், ஊர் மக்களெல்லாம் தென்னந்தோப்பைப் பார்த்து ஓடிவரத் தொடங்கினார்கள். அவர்கள் யாருமே நாயரின் தோப்புக்குள் நுழைந்தது கிடையாது. சந்து நாயரிடம் அவ்வளவு பயம். அங்கே ஏதோ நிழலான காரியங்கள் நடக்கின்றன என்ற அளவுக்குத்தான் அவர்களுக்கு விஷயம் தெரியும்.

ஊர் மக்களெல்லாம் தோப்புக்குள் தடி, அரிவாள் என்று கையில் கிடைத்த ஆயுதங்களோடு நுழைந்து கொண்டிருந்தனர். உள்ளே குமாரும், கோவிந்தனும், சந்து நாயரையும் அவர் பிள்ளைகளையும் ஜயந்தனையும் கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சியைப் படுபயங்கர திருப்தியோடு பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீதேவி. பொதுமக்கள் கொட்டகைக்கு உள்ளே நுழைய ஆரம்பித்த போது, "நிறுத்துங்க" என்று கம்பீரமாகக் கட்டளையிட்டாள் அவள். எல்லோரும் ஒரு நிமிடம் அசையாமல் நின்றனர். "வாங்க போகலாம்" என்று குமாரையும், கோவிந்தனையும் பார்த்துச் சொன்னாள் ஸ்ரீதேவி.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# பொய் சொல்லாதிருப்பது எப்படி?


நினைத்துப் பாருங்கள்... நமது பால்யக் காலத்தை!

'பொய் சொல்லக்கூடாது... திருடக்கூடாது... கஷ்டம் வந்தால் மூட்டை தூக்கிக்கூடப் பொழைக்கலாம், தப்பில்லை...' என்று எத்தனை எத்தனை நல்ல விஷயங்களை நமக்குக் கற்றுத் தந்தார்கள்.

ஆனால், இன்று..? அந்த அடிப்படை நல்லொழுக்கமே மெள்ள மெள்ள நீர்த்துப் போய்க் கொண்டிருக்கிறதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. பாமரர்களைவிடப் படித்தவர்களும் விஷயம் தெரிந்தவர்களுமே அதிகம் பொய் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

வீட்டில் போன் மணி அடித்தால், 'அப்பா வீட்டில் இல்லைன்னு சொல்லு' என்று குழந்தைகளுக்கு நாமே பொய் சொல்லக் கற்றுத் தருகிறோம்.

'ஏன் லேட்...?' என்று மனைவி கேட்டால், நம் கைவசம் ஏதோ ஒரு பொய் எப்போதும் தயாராக இருக்கிறது.



தெரிந்தே ஒரு பொய்யை, மெய் என்று நம்புவதில் எவ்வளவு ஆபத்து இருக்கிறது, தெரியுமா?

இதோ, இந்தக் கதையைப் படியுங்கள்.

ஒரு முறை முல்லா, பக்கத்து வீட்டுக்காரரிடம் பானை ஒன்றை இரவல் வாங்கினார். சில நாட்களுக்குப் பிறகு, பக்கத்து வீட்டுக்காரர் தயங்கித் தயங்கி, "என் பானையைத் திருப்பிக் கொடுக்க முடியுமா..?" என்று முல்லாவிடம் கேட்டார்.

"அடடா... உங்களிடம் இரவல் வாங்கிய பானையை உடனே திருப்பிக் கொடுக்காமல் மறந்துபோனதிலும் ஒரு லாபம் இருக்கிறது. ஆமாம்... உங்கள் பானை ஒரு குட்டி போட்டிருக்கிறது, பாருங்கள்!" என்று சொல்லி, தான் இரவலாக வாங்கிய பானையுடன் சேர்த்து ஒரு குட்டிப் பானையையும் கொடுத்தார் முல்லா. பக்கத்து வீட்டுக்காரருக்குத் தாங்க முடியாத சந்தோஷம்.

அடுத்த வாரமே முல்லா மறுபடியும் பக்கத்து வீட்டுக்காரரிடம் சென்று, "போன தடவை கொடுத்ததைவிடப் பெரிய பானை ஒன்று இருந்தால், இரவலாகக் கொடுங்களேன்!" என்று கேட்க... அவரும், 'ஒன்றுக்கு இரண்டாகப் பானை கிடைக்கும்' என்ற சந்தோஷத்தோடு, வீட்டிலிருந்த மிகப் பெரிய பானையைத் தூக்கி முல்லாவிடம் கொடுத்தார்.

ஒரு வாரம் ஆயிற்று. பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் சென்று, தான் இரவலாகத் தந்த பானையைத் திரும்பக் கொடுக்க முடியுமா? என்று கேட்டார்.

"அதை ஏன் கேக்கறீங்க...? நேத்து உங்க பானை செத்துப் போச்சு!" என்றார் முல்லா.

பக்கத்து வீட்டுக்காரருக்கு மகா எரிச்சலாகி விட்டது! "என்னை என்ன மடையன்னு நினைச்சியா? பானை எப்படிச் செத்துப் போகும்?" என்றார் கோபமாக.

"பானை குட்டி போட முடியும்னு உன்னால் நம்ப முடியுது. பானை செத்துட்டுதுன்னு சொன்னா நம்ப முடியலையா?" என்று திருப்பிக் கேட்டார் முல்லா. பக்கத்து வீட்டுக்காரர் வந்த சுவடே தெரியாமல் நடையைக் கட்டினார்.

இப்போது புரிகிறதா? பொய் சொல்வது எவ்வளவு தப்போ, அவ்வளவு தப்பு - பொய் என்று தெரிந்தும் அதை நம்புவது!

சரி, நாம் பொய் சொல்லும்படியான அவசியம் ஏற்படாதிருக்க என்ன வழி?

இல்லை, முடியாது போன்ற வார்த்தைகளைச் சொல்லக் கற்றுக் கொண்டால், ஏறக்குறைய ஐம்பது சதவிகிதப் பொய்களைச் சொல்லவேண்டிய அவசியமே ஏற்படாது.

ஆபீஸில், உடன் வேலை செய்பவர் மோட்டார் சைக்கிளை இரவலாகக் கேட்கிறார். "ஸாரி... என் மோட்டார் சைக்கிளை நான் யாருக்கும் இரவல் கொடுப்பதில்லை" என்று நேரடியாகச் சொல்லிவிட்டால், எதிராளியின் முகம் வாடிப்போகுமே என்று பயந்து, "இல்லையப்பா... பெட்ரோல் இல்லை, பிரேக் பிடிக்கலை..." என்று வாய்க்கு வந்த பொய்யைச் சொல்கிறோம். எதிராளியின் முகம் வாடிப் போய்விடக்கூடாது என்பதற்காக, நாம் பொய்யன் என்ற பட்டத்தைச் சுமப்பது எந்த விதத்தில் சரி?

பொய் சொல்லக்கூடாது என்றால்... மனைவி, தாய், தந்தை, குடும்பத்தினர், நண்பர்கள் இவர்களிடம் எல்லாம் பொய் சொல்லலாமா, அப்படியே பொய் சொன்னாலும், அது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்...?

ஒரு சின்னக் கதை.... ஒரு கல்லூரியில் நான்கு நண்பர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். தாவரவியல் மாணவர்கள். ஒரே ஒரு பரீட்சையைத் தவிர, மற்ற எல்லாப் பரீட்சைகளையும் எழுதிவிட்டார்கள். மிச்சமிருந்த ஒரு பரீட்சைக்கு இன்னும் ஒரு வார காலம் இருந்தது.

மேலும், அது சுலபமான பேப்பர்தான் என்பதால், இடைப்பட்ட காலத்தில் பக்கத்தில் இருந்த ஒரு மலைவாச ஸ்தலத்திற்குப் பிக்னிக் போனார்கள். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என ஜாலியாக இருந்தார்கள். அவர்கள் கிளம்ப வேண்டிய தருணம் வந்தது.

அப்போது ஒரு மாணவன், "க்ளைமேட் அருமையாக இருக்கிறது. இன்றிரவும் இங்கேயே தங்கிவிட்டு, நாளை காலை ஆறு மணிக்கு காரில் கிளம்பினால் போதும்... பரீட்சை நேரத்துக்குக் கல்லூரிக்குப் போய்விடலாம்..." என்றான்.

'அதுவும் சரிதான்' என்று மாணவர்கள் அன்று முழுவதும் அங்கேயே கோலாகலமாகக் கழித்துவிட்டு, இரவு தாமதமாகத் தூங்கினார்கள். நெடுநேரம் கழித்துக் கண்விழித்தார்கள். 'சரி, புரொபசரிடம் ஏதாவது பொய் சொல்லி, மாற்றுப் பரீட்சைக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்' என்ற நம்பிக்கையோடு புறப்பட்டார்கள்.

புரொபசர் முன் நல்ல பிள்ளைகள் மாதிரி வந்து நின்றவர்கள், "சார்... நாங்கள் அரிதான சில தாவரங்களைச் சேகரிப்பதற்காக ஒரு மலைவாச ஸ்தலத்துக்குச் சென்றிருந்தோம். அங்கிருந்து நேராகப் பரீட்சை எழுதக் கல்லூரிக்கு வந்துவிடலாம் என்ற திட்டத்தில், விடியற்காலை காரில் கிளம்பினோம். வழியில் கார் பஞ்சராகிவிட்டது. அதனால் பரீட்சை எழுத முடியவில்லை. நீங்கள்தான் பெரிய மனசு பண்ணி, எங்களுக்கு மாற்றுப் பரீட்சை வைக்கவேண்டும்..." என்று பொய்யை, மெய் மாதிரி உருகிச் சொன்னார்கள்.

பேராசிரியரும் ஒப்புக்கொண்டார். அந்த நான்கு மாணவர்களையும் நான்கு வெவ்வேறு அறைகளில் அமரவைத்துப் பரீட்சை எழுதச் சொன்னார். மாணவர்களுக்கு செம குஷி. உற்சாகத்துடன் பரீட்சை எழுத உட்கார்ந்தார்கள்.



முதல் கேள்வி மிகவும் சுலபமாக இருந்தது. மாணவர்கள் அதற்கு விடை எழுதிவிட்டு, அந்தக் கேள்விக்கான மார்க் என்ன என்று பார்த்தார்கள். ஐந்து. சரி என்று அடுத்த பக்கத்தைத் திருப்பினார்கள். 95 மார்க் என்ற குறிப்புடன் காணப்பட்ட அடுத்த கேள்வி, அவர்களின் முகத்தில் அறைந்தது.

அந்தக் கேள்வி - 'உங்கள் காரில் பஞ்சரானது எந்த டயர்...?'

பஞ்சர் என்று பொய் சொன்னார்களே தவிர... இப்படி ஒரு கேள்வி வரும், அதற்கு இன்ன டயர் தான் பஞ்சர் ஆனது என்று நாலு பேரும் ஒன்றுபோல் பதில் சொல்ல வேண்டும் என்று பேசி வைத்துக் கொள்ளவில்லையே!

பொய் என்பது தீக்குச்சியைப் போல... அது அந்தக் கணத்துக்கு மட்டுமே பலன் கொடுக்கும். உண்மை என்பது சூரியனைப் போல.... அது வாழ்நாள் முழுதும் மட்டுமல்ல, வாழ்ந்து முடிந்த பிறகும் கூடப் பலன் கொடுக்கும்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 198க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் - 03.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எம்.எல்.பாத்திமா றிஸ்வானா, 547, பெண் பாடசாலை வீதி, ஏறாவூர் - 03.
2. எஸ்.கோகுலன், இல.50, பிள்ளையார் கோவில் வீதி, அன்னமலை - 01.
3. கு.உமாசங்கர்,287/1, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
4. வி.மயூரன், 12ஏ, ஹிம்புட்டுயன, முல்லேரியாவ.
5. க.தேவிகா, 245/2, வோல்ஸ் வீதி, மட்டக்குளிய.
6. சாகித்யன், தவசிக்குளம், வவுனியா.
7. க.மனோகரன், அன்புவழிபுரம், திருகோணமலை.
8. ஏ.எச்.அன்வர், இல.52, லோவர் வீதி, பதுளை.
9. வி.திவ்யா, களுதாவளை, மட்டக்களப்பு.
10. எம்.விக்னேஸ்வரன், பாரதிபுரம், வவுனியா.

## குறுக்கெழத்துப் போட்டி 200

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | |
| | | 27 | 28 | 29 | |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. சூரியனுடன் தொடர்புடைய பண்டிகை.
7. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் இது முக்கியமானது.
11. மணலும் மணல் சார்ந்த இடமும்.
13. விஜயகாந்த் நடித்த திரைப்படம். (குழம்பியுள்ளது)
17. பழங்கால ஆயுதமொன்று. (திரும்பியுள்ளது)
19. ஆலயங்களில் பிரதான அங்கம். (குழம்பியுள்ளது)
27. தைப்பொங்கல் பண்டிகையில் இது பிரதானமானது. (குழம்பியுள்ளது)
31. பசு என்றும் பொருள்படும்.
33. கலைகளில் ஈடுபாடுடையவன். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. ஸ்வரங்களில் ஒன்று.
2. மனிதனுக்குரிய சிறப்பான செயற்பாடுகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
5. மரக்கறி பயிர்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
6. நுணுக்குக்காட்டியில் இது பயன்படுத்தப்படும். (குழம்பியுள்ளது)
15. சிலப்பதிகாரத்துடன் தொடர்புடைய பாத்திரம். (குழம்பியுள்ளது)
22. மனித உறுப்புகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
29. மிளகு என்று பொருள் படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 198 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஓ | 2 ஹ | | 4 ரி | 5 மா | 6 கை |
| 7 ணா | | 9 ரி | 10 ம | 11 வு | |
| 13 ம | 14 ஞ் | 15 ச | 16 ரி | | 18 த |
| | 20 வா | 21 கை | | 23 ஆ | 24 ரி |
| 25 ஆ | 26 சை | | 28 வி | | 30 ரி |
| 31 ண் | | 33 உ | 34 ண் | 35 மை | |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 02.01.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-200
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

# காதல் கற்கண்டு

ஸகியே!

என் விழிகள் பூக்களை முத்தம் குடிக்கும் போதெல்லாம் உன் புன்னகை என்னுள் வளர்கிறது. வானத்தைக் கூடச் செதுக்குவேன் உன் நிலா முகம் காண்பதற்காக!

உன் பக்கத்தில் தென்றல் உட்கார்ந்து உன் சுவாசம் கேட்டதாமே!

உன் பெயர் சொன்னால் புல்லாங்குழல் கூடக் காற்றில்லாமலேயே கவிதை வாசிக்கும்.

உன் இதயம் கேட்டு நூறு ரோஜாத் தோட்டங்கள் விண்ணப்பித்த போது உன் மனது என்னை மட்டுமே கற்கண்டாக்கியது.

இரவு நேரம் உன்னைப் பற்றிப் பேசினேன்... என் காலடியில் நட்சத்திரங்கள் வளர்ந்தன.

கடலோரம் நீ அமர்ந்திருந்தாய், வந்த அலைகள் திரும்பிப் போகவில்லையே!

நீ இலைகள் தொட்டபோது அவை மலர்களாகி உன்னை வணங்கின.

உன் மௌனத்தை மொழிபெயர்த்துப் பார்த்தால் அழகிய இசை 'ஆல்பம்' முளைக்கும்.

ஆயிரம் பேர் உன்னைப் பார்த்தால் ஆயிரத்தொரு கடிதங்கள் உன் முகவரியில் மொய்க்கும்.

அதில், அந்த ஒரு கடிதம் கடவுளுடையதாகும்.

உன்னைச் சேமித்தேன்... மோட்சம் பெற்றது என் மனது.

உன் இதயத்தை நான் வாசித்தபோது, என் சுவாசமெல்லாம் சொர்க்கவாசம் கமழ்ந்தது.

உன் வயதில் நறுமணத்தை நான் சுவைத்த போது என் இளமை அசையாமல் அப்படியே நின்றதடி!

ஸகியே!

தென்றலைக் கூட புகைப்படம் எடுக்க என்னால் முடியும்!

பகலிலும் நட்சத்திரங்கள் பார்க்க என்னால் முடியும்!

எப்படியொன்று கேட்கிறாயா?

உன் நினைவுகள் என் நரம்புகளானதால்!

என் குருதியே உனது மனமானதால்!!

உன் பெயர் சொல்லி கள்ளிச் செடிக்கு நீரூற்றினேன். அது ரோஜாப் பூக்கள் பூத்ததடி!

காக்கை உன் அழகைக் கண்டபோது அது குயிலானது.

கண்ணே! அடுத்த பௌர்ணமி பார்! அதில்...

கடவுள் 'ஐ லவ் யூ' எழுதி ஒட்டியிருப்பான். ●

# கனிந்த காதல்

"ஹலோ குமுதினி, எப்படி இருக்கிறாய் பார்த்து ரொம்ப நாளாகிறதே." வினவியது சகானா. இவர்களைப் போல அவ்விடத்தில் நூற்றுக்கணக்கானோர் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டனர். ஆம். அன்று அவர்களது வித்தியாலயத்தில் பழைய மாணவர் பொதுக்கூட்டம். அழைப்பு கடிதத்தில் உள்ளவாறே பிற்பகல் 2.00 மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. வழமைபோல மேடையில் ஒன்றன் பின் ஒன்றாக பல உரைகள்.

சகானா குமுதினியை நீண்டநாள் இடைவெளிக்குப் பின் சந்தித்ததால் ஆழ்ந்த சம்பாசணை. குமுதினி சகானாவின் சகோதரியின் திருமணம் பற்றி விசாரிக்க, சகானா குமுதினியின் புதுவீடு, சூழல் பற்றி விசாரிக்க...விசாரிப்புகளுக்கு விடைகளும் மாறி மாறி அரங்கேறின.

அவ்வேளை சங்கத் தலைவர், தற்போது செயலாளரால் இம்முறை கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவானவர்களது பெயர்ப் பட்டியல் வாசிக்கப்படும் என்று கூற, செயலாளர் எழுந்து பி.மகேஸ்வரன், எஸ்.விமலன் என்று தொடர, சகானா குமுதினியினுடனான கதையை இடை நிறுத்தி, அப்பட்டியலில் தனக்கு பெரும் எதிர்பார்ப்பு இருப்பதை உணர்த்தினாள். பட்டியலில் ஏழாவது பெயராக சகானா எதிர்ப்பார்த்த எஸ்.ஆதித்தியன் பெயர் உச்சரிக்கப்பட்டது. சகானா பெருமூச்சு வாங்கினாள்.

உடனே, குமுதினி நான் சொல்ல மறந்தே போனேன். இந்த ஆதித்யன், அதுதான் நம்ம வகுப்பு ஆதித்யன், வீடு கூட நம்ம புது வீட்டுக்கு பக்கத்திலேயே தான் இருக்கிறது. எனக்கு போர் அடிக்கும் நேரத்தில் அவனிடம் ஏதாவது கதை புத்தகங்கள் வாங்கிப் படிப்பேன். அவன் தான் பெரிய புத்தகப்பிரியனாச்சே என்றதும்...சகானாவிற்கு ஒன்றுக்கு இரண்டு நற்செய்திகள். உடனே சகானா கூட்டம் முடிய, அவசரத்தில் குமுதினியின் முகவரியை வாங்கிக் கொள்ள மறந்து விடக்கூடும் என்பதற்காய், அப்போதே முகவரியை வாங்கிக் கொண்டாள். கூட்டம் முடிந்தது. மண்டபத்தை விட்டு அந்த பெரிய கூட்டமே வெளியில் வந்தது. அப்போது ஆதித்யனும் வெளியில் வர, சகானா ஓரமாய் நின்று எதார்த்தமாய் சந்தித்த பாணியில் 'மை கங்கராஜிலேசன்ஸ்' என வாழ்த்தினாள். தேங்யூ சகா, ரொம்ப நாட்களுக்குப் பிறகு...இப்போ என்ன செய்கிறாய் என்றான். நான் தையல், பெயின்டிங் இப்படி வகுப்புகளுக்குப் போகிறேன் என்றாள்.

குமுதினி சற்று தொலைவில் நின்றவாறு சகா உனக்கு பஸ் மிஸ் ஆகி விடும் என்றாள். உடனே சகானா சரி ஆதி நான் போயிட்டு வாரன். நேரமிருந்தால் நம்ம வீட்டு பக்கம் வாருங்கோ என்று சொல்லிக் கொண்டே போய் மறைந்தாள்.

வீடு வந்த சகாவுக்கு வீட்டில் அம்மா, அப்பா, அக்கா சரோ, தம்பி குமார் எல்லோரும் ஏதோ முக்கிய வேலையொன்றுக்காக ஆயத்தமாவது புரிந்தது. சமையலறையை நோக்கி விரைந்த சகானா, அம்மா! என்றதுமே அம்மா விரைந்து 'சகா வந்து விட்டாயா?' நாளைக்கு சரோவை நிச்சயம் செய்ய ரவி வீட்டார் வாராங்களாம். ரவி அடுத்த வாரம் வெளிநாடு போகிறாராம். திரும்பி வர 2 வருடமாகும். வந்ததும் கல்யாணத்தை வச்சிகொள்ளலாம் என்று சொல்லியனுப்பியிருக்கிறார்கள் என்று கூறி முடிக்க, முன்னமே சகாவின் குறும்புக்கார தம்பி ஓடி வந்து, இதிலிருந்து என்ன தெரிகிறது. உனது கல்யாணத்துக்கு இன்னும் 3,4 வருடமாகும். அதுவரைக்கும் எனக்கு எல்லா பணிவிடைகளும் செய்தே ஆக வேண்டும் என்று கம்பீரமாக சொன்னான். சீ...போடா என வெட்கப்பட்டாள் சகானா.

மறுநாள் பொழுது இனிதே விடிந்தது. ரவி வீட்டார் வந்தார்கள். நிச்சயதார்த்தம் இனிதே முடிந்தது. காலச்சக்கரம் வெகுவாக சுழன்றது. ஒன்றரை வருடங்கள் ஓடி



சிவப்பிரகாசம் கவிதா, பூண்டுலோயா

மறைந்தன. அதற்கிடையில் சகானா, குமுதினிக்கு இருபதுக்கும் மேற்பட்ட கடிதங்கள் போட்டிருப்பாள். ஒவ்வொரு கடிதத்திலும் குமுதினியின் நலம் விசாரிக்கிறாளோ இல்லையோ ஆதி வீட்டுக்கு வந்தானா? நலமாயிருக்கிறானா? நலம் விசாரித்ததாய் சொல் என எழுதத் தவறவில்லை. குமுதினி இந்த விசாரிப்புகளின் தோரணையை வைத்து தனக்குள் ஒரு கணக்கு போட்டே வைத்திருந்தாள்.

இந்நிலையில் சகானா, அன்றும் வழமைப்போல காலையில் தனக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வேலைகளை முடிந்துவிட்டு, தனது கணனி வகுப்பிற்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். அப்போது வாசலில் 'சகா, சகா...' என்று அழைப்புக் குரல் கேட்டது. அது அவளுக்கு பழக்கமான பக்கத்து தெரு தினேஸின் குரல். முன்னறைக்கு வந்த சகானாவுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி! தினேஸுடன் ஆதியும் வாசலில் நின்றிருந்தான். வாருங்கள் வாருங்கள் என அழைத்து அமரச் சொல்லி அவர்களது கல்லூரி வாழ்க்கைப்பற்றி விசாரித்தாள். அவர்களும் சகாவின் வகுப்பு பற்றி விசாரித்தார்கள். சகா ஆரம்பத்திலேயே ஆதி கையில் இருந்த புத்தகத்தை கண்டு விட்டாள். இருப்பினும் அவர்கள் வந்து 20 நிமிடங்களுக்குப் பின் ஆதி கையில் என்ன புக் (புத்தகம்)? என கேட்டாள்.

ஆதியும், இதுவா இது வைரமுத்துவின் கவிதை புக் ஒன்று. ஆ...நீங்கள் கவிதை வாசிக்க உயர்தர வகுப்பிலிருந்த காலத்திலேயே ரொம்ப விருப்பம் தானே! வேண்டுமானால், வாசித்துவிட்டு பிறகு தாருங்கள் என புத்தகத்தை நீட்டினான். அந்தப் புத்தகத்தை அவளுக்காகவே அவன் பல புத்தகச்சாலைகள் ஏறி இறங்கி வாங்கி கொண்டு வந்தான் என்பதை காட்டிக்கொள்ளாமல். சகானாவும் ஆதியிடமிருந்து கிடைத்த பரிசாக எண்ணி வாங்கிக் கொண்டு, நான் வாசித்து விட்டு தினேஸிடம் கொடுத்து அனுப்புகிறேன் என்று சொன்னாள். இருவருக்கும் தேநீர் பரிமாறினாள். தேநீரைக் குடித்து விட்டு நாங்கள் போய் வருகிறோம் என்று புறப்பட்டனர்.

அன்றிலிருந்து, இரவு படுக்கைக்குச் சென்றதும் சகானா அந்த கவிதை புத்தகத்தில் ஏதாவது ஒரு கவிதையையேனும் வாசித்து விட்டே தூங்குவாள். இவ்வாறு ஒன்றரை வருடங்கள் கவிதை புத்தகத்துடனேயே வாழ்ந்த சகானா, குமுதினிக்கு ஒரு கடிதம் போடுவதற்காய் தபால் நிலையத்துக்குச் சென்றாள். அவள் வீடு திரும்பும்போது அங்கு ஆதி அமர்ந்திருப்பதைக் கண்டு வியந்து போனாள். "ஹலோ ஆதி, நீங்கள் எப்போ வந்தீர்கள்...நான் ஒரு கடிதம் போட போயிருந்தேன் என்றாள்." நான் வந்து இப்போ அரை மணி நேரம் இருக்கும். அப்புறம் வாழ்க்கை எப்படி போகிறது என்றாள்.

வழமைப் போலத்தான் என்றவள், அவன் கையில் ஏதோ ஒரு அழைப்பிதழ் இருப்பதையும் அவதானித்துக் கொண்டாள். சகா எனக்கு வீட்டுக்கு பக்கத்திலேயே உள்ள பாடசாலைக்கு நியமனம் கிடைத்து விட்டது என்றான். உடனே அப்படியா, என் நல்வாழ்த்துக்கள் என்றாள். சகா நான் இதை சொல்லிவிட்டு போகத்தான் வந்தேன் என கையிலிருந்ததை சகாவிடம் கொடுத்து விட்டு, நான் வாரன் என் அவளது பதிலையும் எதிர்பாராதவனாய் போய் மறைந்தான்.

சகா இடிந்து போனாள். அப்படியே நாற்காலியில் அமர்ந்து அவ்வுறையை பிரித்து பார்த்தாள். அது 'காதலர் தின' வாழ்த்து அன்று பெப்ரவரி 14. அறையிலிருந்து வந்த சகாவின் அம்மா சகா அப்பா உனக்கு பார்த்த மாப்பிள்ளை எப்படி? என்று கேட்க அவள் கண்கள் கலங்கின ஆனந்தத்தில்...

(யாவும் கற்பனை)

# கலைந்து போன மேகம்

**அன்று** கல்லூரி வளாகமே சோகமயமாய் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. கல்லூரி வாழ்க்கையின் விடுகை விழாவிற்காக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிக்காக பல முக்கிய பிரமுகர்கள் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டிருந்தனர். அதில் ப்ரியாவும் தன் தந்தையுடன் வந்திருந்தாள்.

நிகழ்ச்சியின் நிறைவம்சமாக இடம் பெற்றிருந்த வசந்தின் பாடல் ஒவ்வொரு இதயத்தையும் கலங்க வைத்தது. அப்பாடலின் ஒவ்வொரு வரியும் ப்ரியாவின் இதயத்தில் ஒரு விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவள் நினைவுகளில் நிஜமாய்க் கொண்டிருந்தாள். வாரம் ஒன்று கடந்து விட்டது. வசந்தின் பெயருக்கு ஒரு மடல் வந்திருந்தது. வசந்...வசந் எப்பா...வசந்...எங்கபோயிட்டான் இந்த பய...என்ன பாட்டி என்றவாறே பாத்ரூமில் இருந்து வெளியேறினான் வசந். இந்தப்பா யாரோ உனக்குக் கடதாசி போட்டிருக்கு என்று கையில் கொடுத்தவாறே என்னப்பா? வசந் காதல் கடிதமே என்று கிண்டலாக கேட்டவாறே சொன்னாள் பாட்டி; எப்பா வசந் உனக்கு ஒரு நல்ல வேலையைத் தேடிக்கொள் என்று சிலிர்த்துக் கொண்டாள்.

முகவுரையைப் பார்த்த வசந்த் யாரு? ப்ரியா என்றவாறே உடைத்து படித்தான். மேகக் கீற்றுகளின் நடுவிலும் மின்னி ஓடும் நட்சத்திரங்களின் நடுவிலும் உன் பால் வடியும் பூமுகம் கண்டு தொலைந்து போனேன். தன்னை விடுமுறை விழாவில் பார்த்ததாகவும் தன்னை நேசிப்பதாகவும் எழுதியிருந்தாள். இவனும் விளையாட்டிற்காக பதில் அனுப்பியிருந்தான். காலப்போக்கில் அவர்கள் உறவு பலம் பெற்றிருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் தாங்கள் உயிரிலும் மேலாக நேசித்தார்கள்; தங்கள் எண்ணங்கள் உல்லாச வானில் சிறகடித்துப் பறந்தன.

இப்போது தான் காற்று திசைமாறத் தொடங்கியது. ப்ரியாவுக்கு அவளது வீட்டில் மாப்பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டது. ப்ரியா எப்படியெல்லாம் சொல்லி அழுதாள் இத்திருமணம் எனக்கு வேண்டாம் என்று. அவள் கண்ணீருக்கு எந்த பயனும் இல்லை.

அவள் தந்தை திருமணத்திற்கு முகூர்த்தம் குறித்து விட்டார். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ப்ரியாவிடம் இருந்து எந்த பதிலும் இல்லை. பித்து பிடித்தவன் போல் இருந்தான் வசந். பாவம் இவர்கள் முகவுரைகள் சந்தித்துக் கொண்டதே தவிர முகங்கள் சந்திக்கப்படவில்லை. மார்பை பிளந்து இதயத்தை பிடுங்குவது போல் வலி. அவளின்



சிந்தனையில் மூழ்கிக் கிடந்தவனை, வீட்டின் அழைப்புமணி அதிர்ந்ததில் திடுக்கிட்டெழுந்தான்.

இங்க வசந்...நான் தான் உள்ள வாங்க நீ...ங்...க நான் ப்ரியாகிட்ட...ரு...ந்...து. ஏய் ப்ரியாக்கு என்னாச்சி அப்ப உங்களுக்கு எதுவுமே தெரியாதா? என்னாச்சுப்பா ப்...ளீ...ஸ் ஒன்னுல்ல வசந் ப்ரியாவால இங்கு வரமுடியல. அதான் நான் வந்தன் இன்னிக்கு. 3 மணிக்குப் பார்க்கில் ஒங்களுக்காக அவள் காத்திட்டுருப்பாள் அது சொல்லிட்டுப் போகத்தான் வந்தன். வசந் அப்போ! நான் வாரன் என்று விடை பெற்றுக் கொண்டாள் ரம்யா.

மனதில் பலவாறான கற்பனையுடன் ப்ரியா சொன்ன இடத்தில் காத்துக் கொண்டிருந்தான் வசத். கடிகாரம் 6 மணியைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. இன்னும் ப்ரியா வரவில்லை. சோகமும் ஒருவாறான பீதியும் அவன் இதயத்தை ஆட் கொண்டது. கண்களில் நீர் பெருக்கெடுக்க, பார்வை மங்கலாய்த் தெரிந்தது. கண்கள் களைப்படைந்து தூங்கிக் கொண்டது. வசந்...வசந்...ஏய் வசந் திடுக்கிட்டெழுந்தவன் ஏய் ரம்யா ப்ரியா வரல்ல. வசந், ப்ரியா வீட்டில் சமையல் செய்து கொண்டிருக்கும் போது 'கேஸ் சிலிண்டர்' வெடித்து ப்ரியா மீது தீ பற்றிக் கொண்டதில் அவள் கண் பார்வை போய் விட்டது. இப்பதான் ஹோஸ்பிட்டல்ல சேர்த்திட்டு வாரன் என்று முடிப்பதற்குள் வைத்திய சாலையை நோக்கி விரைந்தான் வசந். அவள் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்ததால் அவனால் பார்க்க முடியாமல் போய்விட்டது. அனலில் புழுவாய் துடித்தான் ஒவ்வொரு டாக்டராக கெஞ்சினான், அவனுக்குக் கிடைத்ததெல்லாம் ஏமாற்றம் மட்டும்தான்.

சில மாதங்களின் பின் ப்ரியா வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியிருந்தாள். பார்த்துப் பேசிப் பிடித்திருக்கிறது மகாலட்சுமி போல் இருக்கிறாள் என்று புகழ்ந்து பேசிய வாயால் இன்று குருடிய கட்டிக்கிட்டு வாழ நாங்க ஒன்னும் பைத்தியம் இல்ல என்று சொல்லி எடுத்தெறிந்து பேசி சென்று விட்டனர் மாப்பிள்ளை வீட்டார். அவள் மனதிற்குள் ஒரு எரிமலை வெடித்துச் சிதறியது. மறுபடி மறுபடி அவர்கள் வார்த்தையின் எதிரொலி அவள் இதயத்தைப் பிடுங்கி எடுத்தது. வேதனையின் உச்சத்தில் நின்று கொண்டு இன்று எப்படியாவது வசந்தை சந்தித்தே ஆக வேண்டும் என்று தன் தோழியுடன் புறப்பட்டாள் ப்ரியா.

மனதில் ப்ரியாவின் பலவாறான கற்பனையுடன் பிரதான வீதியில் ஓரமாய் வந்து கொண்டிருந்தான் வசத். வீதியில் குழுமியிருந்த சனத்தைப் பார்த்தவன் மனதில் படபடப்புடன் சனங்களுக்கிடையில் முண்டியடித்துக் கொண்டு உள்ளே சென்றவன், அவர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் அவன் உதிரம் உறைந்து இருதயம் ஒரு கனம் நின்று போனது.

**ஏ.எம்.சக்கரியா, சவூதி அரேபியா.**

ஒருவாறாகத் தன்னை சுதாகரித்துக் கொண்டு உற்றுப்பார்க்கிறான் வசந் ஓ...ஓ...ஓ...ப்ரியாடா என்று தழதழத்தாள் ரம்யா. ப்...ரி...யா...ஆ...ஆ... அவன் இதயம் சுக்குநூறாக வெடித்துச் சிதறியது.

ப்ரியா வசந்தைப் பார்க்க வேண்டும் என்ற அவசர அவசரத்தில் வீதியை கடந்த நேரம், எதிர்பாராத விதமாக எதிரே வந்த கார் அடித்ததில் தூக்கி எறியப்பட்டு பரிதாபமாக அவ்விடத்தில் தன் மூச்சுக் காற்றை விட்டு விட்டாள். இரத்த வெள்ளத்தில் தோய்ந்து கிடந்த ப்ரியாவை தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கதறி அழுகிறான் வசந். அவன் கண்ணீர் அவள் இரத்தக் கறைகளைக் கழுவிக்கொண்டிருந்தது. அழுது கொண்டிருந்தவன் சிரித்துக் கொண்டிருக்கிறான் ஆஹ்...ஆ....ஆ...அவன் சிரிப்பு ஒருவிதமாய் இருந்தது. தன் மடியில் கிடந்த ப்ரியாவை தூக்கிப் போட்டு விட்டு அங்கு நின்றிருந்த கூட்டத்தை வெறித்த ஒரு பார்வை பார்த்துவிட்டு, தன் கண் முன்னே வந்தவர்களையெல்லாம் நீ...ப்ரியாவா நீ...நீ...நீ...ப்...ரி...யா நீங்க ப்...ரி...யா...வா...என்றவாறே தன் கால் போன போக்கில் போய்க் கொண்டிருந்தான் வசந். இந்த மேகம் எங்கு போய் புடை சூழுமோ!

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**உலகில்** மனிதராகப் பிறந்து வாழ்ந்து மறைந்தவர்கள் எத்தனையோ கோடி. இனியும் வாழப்போகின்றவர்களோ எண்ணிலடங்கா. இருந்தும் வாழ்க்கையில் ஒரே நிலையில் வாழ்ந்தவர்கள் அரிது என்றே கூறலாம். காலத்தின் மாற்றங்கள், சூழ்நிலை காரணமாக உயர்ந்தவர் தாழ்வதும், தாழ்ந்தவர் உயர்வதும் காலத்தின் கட்டளையே.

இதில் உயர்வுக்கான வழிமுறைகளும், தாழ்வுக்கான காரணங்களும் மனிதரை வழி நடத்துகிறது. அதிலும் கொள்கை, இலட்சியம் என்பதெல்லாம் அவரவர் மனத்தூண்டலும், இயற்கையாக அமைந்துள்ள குணாதிசயங்களுமே ஒவ்வொருவருடைய உயர்வு தாழ்வுக்கு அடிகோலி நிற்பதும் ஒருவகையில் உண்மைதான். இன்றைய காலகட்டத்தில் சீரிய செயற்பாடுகளாலும் மனிதன் தாழ்வதுமுண்டு. அத்தகைய நேரங்களில் அவனுக்குத் தடுமாற்றங்கள் வருவதும் இயல்பே. ஆயினும், அப்படியான நேரங்களில் அவன் நிதானத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக,

"இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்"

குறள் - 977

சிறப்பான வளங்கள், சீரான ஒழுக்கம் இல்லாதவரிடத்தே சென்று சேர்ந்ததனால், அவருக்குத் கேட்டையே தரும் செயலையே செய்வதாகும்.

## இலக்கிய நயம்

# துன்புறும் இதயங்கள்

தருவது **கற்பகன்**

**அங்கயற்கண்ணியின்** அன்புப் பணிகளும் ஆதரவும் கீர்த்திவர்மனுக்கு இரு வார காலத்துக்குள்ளேயே ஓரளவு குணமடையச் செய்திருந்தது. தலையில் ஏற்பட்டிருந்த காயங்கள் பூரண குணமடைந்திருந்தன. மருந்துகளால் குணமடைந்ததைவிட அங்கயற்கண்ணியின் பராமரிப்பால் அவனுக்கு ஏற்பட்ட தென்பும், மனதில் தோன்றிய புத்துணர்ச்சியும்தான் அவன் அவ்வளவு விரைவாகக் குணமடையக் காரணமாயிருந்தது. படுக்கையை விட்டெழுந்து சற்று உலாவி வரலாமே என்று அவனுக்குத் தோன்றிய போது, அவன் எழுந்திருக்க முயன்றான். அங்கயற்கண்ணியின் பூங்கரம் அவனைத் தடுத்தது. "ஆரம்பித்து விட்டீர்களா? அமைதியாய் இருக்க மாட்டீர்கள் போலிருக்கிறதே?" என்றாள் அவள். மெதுவாகக் கீர்த்திவர்மனின் வலக்கரம் அவள் கொடியிடையைச் சுற்றிவளைத்துக் கொண்டது. தொடர்ந்தாள் அங்கயற்கண்ணி, "இந்த நிலையில் கூட உங்களுக்கு ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வரவில்லையே என்று நினைத்தால், எனக்குச் சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை" என்றதும் "ஓய்வா! எனக்கா? கன்னியரின் கற்பைச் சூறையாடக் கங்கணம் கட்டிக் கொண்டலையும் கயவர் கூட்டத்துக்குப் பாடம் புகட்டும் வரை எனக்கு ஓய்விருக்காது உறக்கமுமிருக்காது. ஊரவரின் பணத்துக்குப் பேயாய் அலையும் உலுத்தர்கள் கூட்டத்தை ஒழித்துக் கட்டும் வரை, உல்லாச வாழ்க்கைக்காக, உழைப்பவரைச் சுரண்டி வாழ்வதையே தொழிலாகக் கொண்டவர்களுக்குச் சாவு மணி அடிக்கும் வரை, உண்மை நிலை மக்களுக்குத் தெரியும் வரை ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை அங்கயற்கண்ணி" என்று அவன் ஆவேசமாகப் பேசியபோது, அங்கயற்கண்ணி அசந்து போனாள்.

அவளால் எதுவும் பேச முடியவில்லை. அவள் மௌனத்தைக் கண்ட கீர்த்திவர்மன், "ஏன் பேசாமலிருக்கிறாய்? அடிபட்டு வந்து படுக்கையில் கிடப்பவன் புலம்புகின்றான் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டதும், அங்கயற்கண்ணியின் கரம் அவன் வாயைப் பொத்தியது. "ஐயய்யோ! அப்படியெல்லாம் எண்ணிவிடாதீர்கள். உங்களைக் கண்ட அன்றே உங்கள் வீரத்தின் திண்மையைக் காட்டிவிட்டீர்களே! என் உயிரையும், மானத்தையும் காத்து இன்று உங்கள் அருகிலேயே வைத்திருக்கிறீர்களே! அது போதாதா உங்கள் வீரத்துக்குப் பட்டயம் எழுத?" என்றவள் அவன் மார்பில் சாய்ந்தாள். "சிங்கபுரத்தின் தோற்றம் இன்று கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தாங்கள் மனங் குமுறுவதில் நியாயம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாதா? அதற்காக நீங்கள் இருக்கும் இந்த நிலையில் மனங் குமுறுவதால் தங்கள் உடலுக்குத்தானே கெடுதல் என்பதை எண்ணித்தான்....." என்றவளின் கண்ணீர் தோய்ந்த முகத்தை



நிமிர்த்தினான் கீர்த்திவர்மன். அந்தச் செந்தாமரை முகத்திலுள்ள கருவண்டுகள் நீரைச் சொரிந்த தடயங்கள் இன்னும் காயவில்லை என்பதைக் காட்டியபோது, அவன் மனம் பாகாய் உருகிவிட்டது.

"ஏனிந்தக் கண்ணீர்? நீ ஒரு மாவீரனின் வருங்கால மனைவியாகப் போகிறவள் என்பதை மறந்துவிட்டாய் போலிருக்கிறதே? நீ என் மீது வைத்திருக்கும் அளவற்ற அன்பை நான் அறிவேன் கண்ணே! அதற்காக நான் கோழையாக வாழ வேண்டுமென்று நீ நினைப்பது சரியல்லவே" என்று கீர்த்திவர்மன் கூறியதும், அங்கயற்கண்ணி அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

"ஏன் அப்படிப் பார்க்கிறாய்? நான் ஏதும் தவறாகப் பேசிவிட்டேனா?" என்ற கீர்த்திவர்மன், அவள் பதிலை எதிர்பார்ப்பதுபோல் முகத்தைப் பார்த்தான். அந்தப் பார்வையில் தோன்றிய ஏக்கம் அவளைப் பெரும் சங்கடத்துக்குள்ளாக்கிய போதும், "தவறாக நீங்கள் ஏதும் கூறவில்லை........." என்றவளைத் தூண்டினான் கீர்த்திவர்மன். "ஏன் கூற வந்ததை இடையில் நிறுத்திவிட்டாய்? பதில் சொல்லத் தெரியவில்லையா?" என்றான் கிண்டலாக. "ஆமாம்! பதில் சொல்லத் தெரியவில்லைத்தான். உங்களைப் பற்றிய நினைவுகளையெல்லாம் வெளியில் கூற முடியுமா?" என்றவள், பொய்யான கோபத்தைக் காட்டத் தலைப்பட்டாள். "முடியாதென்றால் விட்டுவிடுவதுதானே! அதற்காக என்மேல் ஏன் கோபம்?" மீண்டும் தூண்டினான் கீர்த்திவர்மன். "விடமாட்டீர்கள் போலிருக்கிறதே! உங்களை இந்த உலகோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். அப்பப்பா! நீங்கள் ஒரு புது மனிதர். பணப்பேய் பிடித்தலைபவர்கள் ஒருபுறமும், பெண் பித்துப் பிடித்து பெண்கள் பின் பேயாய் அலைபவர்கள் ஒருபுறமும், அதிகார வெறி பிடித்து அலைபவர்கள் மற்றொரு புறமும் இருக்க, நீங்கள் ஒரு கன்னிப் பெண் கட்டிலுக்கு வந்தபின்னும், கடைக்கண்ணால் கூடத் திரும்பிப் பார்க்காமல் இருக்கிறீர்களே! என்று நினைத்தேன்" என்றவள், தன் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு, இலேசாக முறுவலித்தாள். "ஓகோ! அப்படியா விடயம்?" என்றவன், "கரும்பு தின்னக் கூலி கேட்பார்களா?" என்று அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் அவள் இன்பங் கண்டாள். அவள் செவ்விதழ்கள் வெளுத்தன. அன்பின் பிணைப்பு அவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. அந்த வேளையில், யாரோ அந்த அறையை நோக்கி நடந்து வரும் சத்தம் அவள் காதில் விழுந்தது. அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள் அங்கயற்கண்ணி. அவள் ஊகம் சரியானதுதான். வைத்தியரும், தாதிப் பெண்களும் வந்திருப்பதை அழைப்பு மணி அறிவித்தது. அவள் கட்டிலை விட்டெழுந்தாள். அன்பின் உருவான இரு இதயங்களும் துடித்தன. பிரிவு நிலையானதல்லவே! இது ஒரு சிறு இடைவேளைதான்.

*"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது"*

*குறள் : 1166.*

## சிந்தியா பதில்கள்

✍ **சிந்தியா! சுனாமியின் இரண்டாம் ஆண்டு நிகழ்வுகள் பற்றி....**

**- வை. கிருஷ்ணமூர்த்தி, புத்தூர்.**

26.12.2004 அன்று காலை நடந்த பிரளயம் அது. 12 நாடுகளை உலுக்கிய நாள். கடல் எழுந்து ஊருக்குள் வருகிறது என்று செய்திகள் பரவியபோதும், நம்ப முடியாமல் வேடிக்கை பார்த்தவர்கள் பலியாகிப்போன துயரமான நாள்.

2,90,000 பேர்வரை பலியாகிப் போனார்கள். உலகமே மிரண்டுபோய் உறைந்து நின்றது. 10 இலட்சம் மக்கள் இடம் பெயர்க் கப்பட்டனர். இலங்கையில் மட்டும் சுமார் 40000 பேர் இறந்தும் காணாமலும் போயினர். இலங்கையில் சுனாமியின் சுவடுகள் இன்னொரு சந்ததிக்கும் மிச்சமிருக்கப் போகிறது.

✍ **சிந்தியாவுக்குக் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!**

**- சீ. கொலின், நாவலப்பிட்டிய.**

எஸ். எம். எஸ். மூலமாக வாழ்த்துச் செய்தி தெரிவித்த அநேகமானவர்களுக்கு பதில் அனுப்ப முடியாமல் போய்விட்டது. அவர்களுக்கும் உங்களுக்கும் என் இனிய கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இணையத்தில் படித்த தகவல் ஒன்று. "நாம் கொண்டாடும் 2006ஆம் ஆண்டு கிறிஸ்மஸ், 1852 ஆவது கிறிஸ்மஸ் என்பது பலருக்குத் தெரிந்திருக்காது. 154 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி இயேசுகிறிஸ்து பிறந்தார். முதல் கிறிஸ்மஸ் அலெக்ஸாண்டிரியா நாட்டில் மே 20ஆம் திகதி கொண்டாடப்பட்டதாம். யேசு பிறந்த நாளான டிசம்பர் 25 ஆம் திகதியை கிறிஸ்மஸ் நாளாகக் கொண்டாடியது, இயேசுக்கிறிஸ்து பிறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகாம்".

✍ **ஷேர்ன் வோர்ன், 700 விக்கெட்டுக்களை எடுத்தவுடன் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போகிறாராமே?**

**- எம்.எம். வாஹீட், வந்தாறுமூலை.**

ஆம். டிசம்பர் 26 ஆம் திகதி மெல்போர்ன் நகரத்தில் இங்கிலாந்து அணியுடன் நடக்கவுள்ள நான்காவது ஆசிய டெஸ்ட் போட்டியுடன், அவர் ஓய்வு பெறவுள்ளார். ஏற்கனவே 699 விக்கெட்டுக்களை எடுத்துள்ள வோர்ன், இலக்கை எட்டிவிடுவார் என்று நம்புகிறார்கள் அவரது ரசிகர்கள். இந்த 2006 ஆம் வருடத்தில் ஆறு கிரிக்கெட் வீரர்கள் ஓய்வு பெறுகிறார்கள். மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாரா (38 வயது) ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார். டேமியன் மார்டின் (அவுஸ்திரேலியா), மெக்ராத் (அவுஸ்திரேலியா), போஜே (தென் ஆபிரிக்கா) ஹார்மிசன் (இங்கிலாந்து). இந்தியாவிலிருந்து அடுத்த ஆண்டு எதிர்பார்க்கலாம்.

✍ **சிந்தியா! எனக்கு ஞாபக சக்தி மிகவும் குறைவாக இருக்கிறது. என்ன செய்யலாம்?**

**-மு. சிவப்பிரியா, அம்பலாந்தோட்டை.**

உங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும்தான் ஞாபகசக்தி குறைந்து விட்டது. முதல் தேர்தலில் வந்து கும்பிட்டு நம்மை ஏமாற்றியவர்களை, அடுத்த தேர்தலில் மறந்து விடுகிறோமே அதைச் சொல்கிறேன். நீங்கள் முதல் நாள் காரியங்களை காகிதத் துண்டில் எழுதி கண்ணில் படும்படியாக வைத்துக் கொள்ளுங்கள். கொஞ்ச நாளையில் மாற்றம் தெரியும். 'எம். ஜி. ஆர்.' என்ற மந்திரச் சொல்லை யாரும் மறந்திருக்காவிட்டாலும், அவரின் 19ஆவது நினைவுநாள் 24.12.06 அன்று என்பதை பலர் மறந்து விட்டார்கள். மறதி எல்லோ ருக்கும் உள்ள ஒரு குணம்தான். சில ருக்கு அது நோய்.

✍ **தமிழ்க் கூட்டமைப்பு இந்தியாவுக்குச் சென்று முக்கிய சந்திப்புகளை நடத்தியுள்ளதே! இந்தச் சந்திப்பு வெற்றியா? தோல்வியா?**

**- கோ. ஞானமுத்து, இறம்பைக்குளம்.**

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, இந்தியாவின் வெளியுறவுக் கொள்ளையிலேயே மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு பெருத்த ஏமாற்றம்தான். கலைஞர் கூடவே பிரதமருடனான சந்திப்புக்குப் போகாதது, மாற்றங்களை ஏற்படுத்தாத சந்திப்பு என்பதால்தான். இப்படி மறுபக்கத்தைப் பார்ப்பதைவிடவும், சந்திப்புக்கள் நடந்த வரையும், கூட்டமைப்பு எம். பி. க்கள் எதையோ செய்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொள்ள வேண்டியது தான். இது கடைசியாக இல்லாமல் தொடர வேண்டும்.




✍ **பாலசிங்கத்தின் மறைவைக் குறிக்கும்போது, "நோர்வே தனது நண்பனை இழந்துவிட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதே?**

**- சு. வடிவேல், மோதர.**

பக்கச்சார்பாக நடக்கிறார்கள் நோர்வேயினர் என்று இருந்த குற்றச் சாட்டுக்களுக்கு விடை கிடைத்திருக்கிறது. அவர்கள் யாருடைய நண்பர்கள் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

✍ **தோட்டத் தொழிலாளர்களுக்கு 260 ரூபாய் சம்பளம் வெற்றியா?**

**- மா. ஆறுமுகம்,பொகவந்தலாவை.**

மீண்டும் ஒருமுறை தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு இன்னொரு காரணம், மக்களின் எழுச்சி ஒருங்கிணைக்கப்படாததுமாகும். "பூனைக்கு யார் மணி கட்டுவது?" என்ற கதை தொடர்கிறது. எல்லோரும் தொழிலாளர்களை சுரண்டிப் பிழைக்கும் எலிகளாகத் தெரிகின்றனர்.

✍ **வடக்கு - கிழக்கு இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்படுமா?**

**- கோ. காணகன், நிலாவெளி.**

ஜனவரியிலிருந்து இரு மாகாணங்களாக நிர்வாகம் செய்யப்படும் என்று நம்பகரமாகத் தெரிய வருகிறது. ஏமாற்றப்பட்டது ராஜீவ் காந்தி மட்டுமல்ல, தமிழர்களும் தான்.

✍ **பழைய "திருவிளையாடல்", புதிய "திருவிளையாடல் ஆரம்பம்" எப்படி இருக்கு?**

**- கே. ஆர்த்தி, கல்முனை.**

இந்துக் கடவுளர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று நம்பிக்கை கொள்ளச் செய்தது பழைய "திருவிளையாடல்". சிவாஜி இருந்திருந்தால், திருவிளையாடலை இப்படியும் செய்திருக்கலாமே என்று கண்ணீர் வரச் சிரித்திருப்பார். கலகல கலாட்டா, புதிய திருவிளையாடல். மகன் பிறந்த மகிழ்ச்சியில் தனுஷ் "திரு" விளையாடியிருக்கிறார்.

✍ **வி. ஐ. பி.க்களுக்கு "சிக்குன் குன்னியா" வந்தால் என்ன செய்வார்கள்? கடிக்கவும் ப்ளீஸ்!**

**- ஆர். வசந்தி, மொரட்டுவை.**

வேலைகளை ஒழுங்காகச் செய்யாமல் ஓய்வாக இருப்பதையே தொழிலாகச் செய்து சம்பளம் எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு "சிக்குன் குன்னியா" பொருத்தமான நோய்தான். அவர்கள் மருந்து மட்டும் எடுத்தால் போதும்.

✍ **ஆலோசனைக்காகவும், ஆறுதலுக்காகவும் ஓடிய போதெல்லாம் அரவணைத்துக்கொண்ட பாலாண்ணையை இழந்துவிட்டதாக பிரபாகரன் கூறியிருப்பதை அவதானித்தீரா?**

**- வ. பாலமுரளி, ஒட்டிசுட்டான்.**

புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிறகு பாலா லண்டனில் தான் வாழ்ந்தார். எப்போதாவது சமாதானக் காற்று வீசுவதற்கு முன்னர் வன்னிக்கு வந்துபோவார். ஆனால் லண்டனுக்குப் பிரபாகரன் எத்தனை முறை அப்படி ஓடினார்? என்று கேட்பதை மாற்றிக் கேட்ட உங்கள் புத்தி சாதுரியத்தை எப்படிச் சொல்வது? "ஓடினேன்" என்பது உடலால் ஓடுவது என்று மட்டும் ஆகாது. சுருங்கி வரும் உலக ஒழுங்கில் சட்டலைட் ஊடாகவும் உணர்ச்சிகளால் ஓடமுடியும் என்பதும் அர்த்தமாக இருக்கும். இறந்து போன ஒருவருக்காக உலகம் கவனித்துக் கொண்டிருக்கையில் இப்படி எதுகை மோனையாக இரங்கல் செய்தி வாசிப்பதையெல்லாம் பிழை கண்டுபிடித்து வியாக்கியானம் செய்து கொண்டிருக்கக்கூடாது பாலமுரளி..

## திருமணமாகாத.....
*17 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

என்பன ஏற்படலாம் என வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

இளம் வயதில் இவ்வாறு ஏற்படும் பெண்களுக்கு எதிர்காலத்தில் திருமண பந்தத்தில் இணையும் போது மேற்படி விடயம் கணவரால் புரிந்து கொள்ளப்படும் சந்தர்ப்பத்திலும், குழந்தைப்பேறு இன்மை, உடலுறவின் போது ஏற்படும் திருப்தியற்ற தன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதால் வாழ்க்கையே சூனியமாகிப் போவதைப் பலரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இது தவிர காதல் என்ற வலையில் இளம் யுவதிகளை விழ வைத்துத் தமது உணர்ச்சிகளுக்குப் பலியாக்கும் நயவஞ்சக இளைஞர்களும், காதலைக் கொச்சைப்படுத்தி பெண்ணை போகப் பொருளாகப் பார்க்கும் ஆண்களும் இத்தவறுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும். அத்துடன் வறுமை காரணமாக தொழில் புரிய வரும் இளம் யுவதிகளைத் தமது பணபலத்தையும், செல்வத்தையும் பயன்படுத்தி அவர்களை தமது இச்சைகளுக்கு அடிபணிய வைக்கும் காமுகர்களான சம்பந்தப்பட்ட முதலாளிகளையும் இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது பாதிக்கப்பட்டவர்களது கடமையாகும்.

அண்மைக் காலத்தில் இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்களின் தொகை அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம், தற்போதைய யுத்த சூழ்நிலையால் ஏற்பட்டுள்ள இடப்பெயர்வு காரணமாக கிழக்கில் இத்தகைய சமூகச் சீரழிவுகளாலும், சூழலாலும் எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரித்திருப்பதாக அந்தப் புள்ளிவிபரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் வைத்தியத் தொழிலை தெய்வமாக மதிக்கும் சமூகத்தில் பணத்திற்காகச் சில பொறுப்பு வாய்ந்த வைத்தியர்களாலும் இனங்காணப்படாத போலி வைத்தியர்களாலும் பல இளம் யுவதிகளின் எதிர்காலம் சீரழிந்து போவதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இத்தகையவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டியவர்களே!

ஆக மொத்தத்தில், பல்வேறு காரணங்கள் இத்தகைய இளம் பெண்களின் தவறுகளுக்கு உடந்தையாக இருப்பினும் ஒரு பெண் பிள்ளை தன்னைக் கட்டுப்படுத்தி வாழ்ந்தால், இதுபோன்ற தவறுகள் இடம்பெறுவதைக் கணிசமாகத் தவிர்க்க முடியும். திருமணமாகும் முன்பே இளம் பெண்கள் விடும் தவறுகளினால் தமது தனிப்பட்ட வாழ்க்கை பாதிக்கப்படுவது மட்டுமன்றி, அவர்களது பெற்றோர் உட்பட மொத்தக் குடும்பத்தினதும் கௌரவம் சமூகத்தில் இழக்கப்படுவதுடன் எயிட்ஸ் போன்ற சமூக நோயாளியாக மட்டுல்லாது ஒரு மனநோயாளியாகவும் மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் என்பன மேலதிக பக்க விளைவாக ஏற்படும் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். எனவே ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்து தப்பிக் கொள்ளும் பெண்கள் தமக்குத் தாமே கட்டப்பாட்டுடன் நடந்துகொள்வதே மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும்.


**சிங்கப்பூரில் தங்குமிட வசதி**

சிங்கப்பூரில் வீடுமுறையைக் களிக்கவும், திருமணத்துக்கு வருபவர்களுக்கும் எல்லா வசதியுடன் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். திருமணத்துக்கு வருபவர்களுக்கு திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த கட்டணத்தில் இலங்கை முறைப்படி செய்து தருவோம். மற்றும் தேவைப்படும் உதவிகளையும் செய்து தருவோம்.

மேலும் விபரத்துக்கு:-
எந்த நேரமும் தொடர்பு கொள்ள வசதியாக கைத் தொலைபேசி எண்:
00,65,97514941 என்ற எண்ணில் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
**153, Jalan Jarak, , Singapore 809281**



**தேவை**

ராஜகிரியாவிலுள்ள எங்கள் உடனடி உணவு விடுதிக்கு வேலையாட்கள் தேவை.
- அப்பம் தயாரிப்பவருக்கு - 9,000.00
- சீன சமையலாளருக்கு - 15,000.00
- பரிமாறுதல் மற்றும் பார்சல் கட்டுபவருக்கு - 9,000.00
- காசாளருக்கு - 7,500 வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக ஒரு நிர்வாகியும் எமக்குத் தேவை.

தொடர்புகளுக்கு - 0712341877



வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

**பண்டாரவளை அதிசிறந்த மலையாள மகா வசிய மாந்திரீகம்..**

**ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள**



057-2224591-92

**ஷர்மா சுவாமிகள்**

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

**சந்திப்பு**

**பண்டாரவளையில்**
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
**காலை 8.00 மாலை 6.00**
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
**ஞாயிறு விடுமுறை கவனிக்கவும்.**

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

**ஷர்மா சாமி அவர்கள்**
P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...


# விடைபெறும் 2006 – மீள் பார்வை

***ஜனவரி :***

02.01.06 இல் திருகோணமலை பெரிய கடற்கரைப் பகுதியில் 5 தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

7.01.06 இல் அமரர் சின்ன பாலாவினால் எழுதப்பட்ட "மழையைத் தராத வானம்" நூல் வெளியீடு.

13.01.06 இல் மட்டக்களப்பில் கண்காணிப்புக் குழு அலுவல கத்தினுள் புலிகளின் குண்டுத் தாக்குதல்.

25.01.06.இல் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து உரையாடினார்.

***பெப்ரவரி :***

04.02.06இல் இலங்கையின் 58ஆவது சுதந்திர தினம் காலிமுகத் திடலில் கொண்டாடப்பட்டது.

15.02.06இல் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்காவை விடு தலை செய்யக் கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ உத்தரவு.

19.02.06இல் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

22.02.06இல் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும், புலிகளின் பிரதிநிதிக ளுக்குமிடையில் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பம்.

***மார்ச் :***

25.03.06இல் கற்பிட்டி குதிரைமலைக் கடற்பரப்பில் வெடி பொருட்களை ஏற்றிச் சென்ற புலிகளின் ரோலர்ப் படகு கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது.

***ஏப்ரல் :***

25.04.06இல் கொழும்பு ராணுவத் தலைமையக வளவினில் ராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து புலிகளின் பெண் தற்கொலைக் குண்டு தாரி தாக்குதல் நடத்தியதில் இராணுவத் தளபதி படுகாயமடைந்தார்.

27.04.06 இல் அவிசாவளையில் தலை வெட்டப்பட்ட நிலையில் 5 சடலங்கள் பொலிஸா ரால் மீட்கப்பட்டன.

30.04.06இல் வெலிக்கந்தைக் காத்தான்குளம் பகுதியிலுள்ள கருணா அணியினர் மீது புலிகள் தாக்குதல்.

***மே :***

02.05.06. இல் யாழ்ப்பாணம் "உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது புலிகள் தாக்குதல்.

19.05.06 இல் ஐரோப்பியப் பாராளுமன்றம், ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் புலிகளின் சொத்துக்களை முடக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

20.05.06 இல் வட - கிழக்கில் ஒத்திவைக்கப்பட்டிருந்த 20 உள்ளூர் ஆட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன.

06.05.06 இல் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் யசூசி அகாசி இலங்கை வந்தடைந்தார்.

11.05.06 இல் வெற்றிலைக்கேணிர் கடற்பரப்பில் 700 கடற் படையினரைக் கொண்ட 'பேர்க்குலூசர்' கப்பல் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டபோதும், அவர்களால் இலக்கை எட்டமுடியவில்லை.

11.05.06 அன்று மாலை கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் புலிகளின் சட்டவிரோதமான விமான ஓடு தளம் மீது இலங்கை விமானப் படையினர் கடுந்தாக்குதல் நடத்தினர்.

13.05.06இல் தீவகம் அல்லைப்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலில் குழந்தைகள் உட்பட எட்டுப் பேர்கள் கொல்லப்பட்டதுடன், மூவர் படுகாயமடைந்தனர்.

21.05.06இல் மட்டக்களப்பு வவுணதீவில் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்டத் துணைத் தளபதியும், புலனாய்வுப் பொறுப்பாள ருமான ரமணன், சிநைப்பர்' தாக்குதலில் கொல்லப்பட்டார்.

29.05.06இல் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில், புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்துக் கொள்வதென உத்தியோக பூர்வமாக முடிவெடுக்கப்பட்டது.

***ஜூன் :***

02.06.06இல் கொழும்பு மாநகர மேயராக முகமட் இம்தியாஸ் உவைஸ் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

05.06.06.இல் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முதற் களப்பலியான சிவகுமாரின் நினைவு தினத்தை "விடுதலை வித்துக்கள்" நாளாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பிரகடனப்படுத்தியது.

08.06.06இல் கண்காணிப்புக் குழு நாடுகளின் மாநாடு ஒஸ்லோவில் நடைபெற்றது.

10.06.06இல் மன்னார், வெள்ளாங்குளம் துணுக்காய் வீதியில், புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதியான மகேந்தி என்றழைக்கப்படும் ராசு மகேந்திரன் உட்பட நால்வர் கிளைமோர் தாக்குதலில் கொல்லப் பட்டனர்.

16.06.06இல் கெப்பிட்டிக்கொல்லாவையில் பொதுமக்கள் பயணம் செய்த பஸ் வண்டி மீது புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் சிறுவர்கள், குழந்தைகள் உட்பட 64 அப்பாவி சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 80ற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

22.06.06.இல் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதுடில்லியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

26.06.06இல் பன்னிப்பிட்டியில் புலிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இராணுவத் தலைமையகத்தின் மூன்றாம்நிலை அதிகாரியும், பிரதி இராணுவத் தளபதியுமான பாரமி குலதுங்க உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

29.06.06இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத்திய குழுவினால் தெரிவுசெய்யப்பட்டார்.

***ஜூலை :***

12.07.06இல் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் இருதய நோய்க்குச் சிகிச்சை பெறும் பொருட்டு ஓமந்தை ஊடாக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார்.

24.07.06இல் கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் பொதுசனத்தொடர்பு அதிகாரியான சரவணமுத்து மகாகணபதிப்பிள்ளை புலிகளினால், சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

21.07.06இல் திருகோணமலை மாவிலாறு அணைக்கட்டை புலிகள் மூடியதை அடுத்து படையினர் இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டனர்.

26.07.06.இல் ஐ.நா. உயர் ஸ்தானிகர் அன்ரனியோ கட்டரஸ் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

28.07.06இல் மட்டக்களப்பு வவுணதீவில் புலிகளின் முன்னரங்கக் காவல் நிலை மீது கருணா தரப்பினர் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 15 புலிகள் வரையில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

29.07.06இல் மட்டக்களப்பு கரடியனாற்றில் புலிகளின் தேனகம் மகாநாட்டு மண்டபம் விமானப் படையினரால் நிர்மூலமாக்கப்பட்டதில் 14 புலிகள் கொல்லப்பட்டனர்.

31.07.06இல் மாவிலாறு அணைக்கட்டை மீட்கும் முகமாக மும் முனைத் தாக்குதலை புலிகள் மீது படையினர் தொடுத்தனர்.

***ஓகஸ்ட் :***

01.08.06இல் திருகோணமலை கடற்படைத் தளத்தை அண்டிய பகுதியில் 854 படையினருடன் வந்த "ஜெட்லைனர்" என்ற துருப்புக்களின் கப்பல் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

02.08.06இல் சம்பூரிலிருந்து மூதூரை நோக்கி புலிகள் முன்னேறி யதைத் தொடர்ந்து மூதூரில் சண்டை மூண்டது.

05.08.06.இல் மூதூர் பிரதேசத்திலிருந்து படையினரால் புலிகள் முற்றாக விரட்டியடிக்கப்பட்டனர்.

மூதூரில் அக்ஷன் கொன்றோலா பாம் என்ற நிறுவனத்தின் ஊழியர் கள் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

07.08.06இல் திகன, கண்டி வீதியில் வைத்து, விசேட அதிரடிப்படை பயிற்சிப் பிரிவுப் பணிப்பாளர் உபுல் செனவி ரட்ன, புலிகளின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

08.08.06இல் கொழும்பு, பம்பலப்பிட்டி டிக்மன் வீதியில் புலிகள் நடாத்திய குண்டுத் தாக்குதலில் ஈ.பி.டி.பி.யின் முக்கியஸ்தரும், பனை அபிவிருத்திச் சபையின் தலைவருமான எஸ்.சிவதாசன் காயமடைந்தார்.

12.08.06.இல் கொழும்பு, தெஹிவளையில் அரசாங்க சமாதானச் செயலகத்தின் பிரதி பொதுச் செயலாளர் கேதீஸ் லோகநாதன் புலிக ளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

14.08.06இல் முல்லைத்தீவு உடையார்கட்டில் புலிகளின் பயிற்சி முகாம் மீது விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில், புலிக ளினால் பயிற்சிக்காக கட்டாயத்தின் பேரில் கொண்டு செல்லப்பட்ட 66 பாடசாலை மாணவிகள் கொல்லப்பட்டதுடன் 129 பெர் படுகாயம் அடைந்தனர்.

கொள்ளுப்பிட்டியில், இலங்கைக்கான பாக்கிஸ்தான் தூதுவர் பஷீர் அலி முகமட்டை இலக்கு வைத்துப் புலிகள் நடாத்திய கிளைமோர் தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

26.08.06இல் மன்னாரில் புலிகளால் கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியான பந்துஜீவ பெப்பட்டிக்கொட விடுதலை செய்யப்பட்டார்.

27.08.06இல் மாவிலாறு அணைக்கட்டை புலிகளின் பிடியிலிருந்து படையினர் முற்று முழுதாக மீட்டெடுத்தனர்.

***செப்டெம்பர் :***

04.09.06இல் திருகோணமலை மூதூர் பகுதியில் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற உக்கிரமான சண்டையை அடுத்து படையினர் சம்பூரைக் கைப்பற்றினர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 55ஆவது வருடாந்த மகாநாடு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகா நாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

12.09.056இல் சினமன் கிறீன் ஹோட்டலில் பொதுநலவாய நாடுகளின் நிதியமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது.

16.09.06இல் கியூபா ஹவானாவில் நடைபெற்ற பதினான்காவது அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பல முக்கியஸ்தர்கள் இலங்கை சார்பாக கலந்து கொண்டனர்.

17.09.06இல் கல்முனை கடற்பரப்பில் புலிகளின் ஆயுதக் கப்பலொன்று கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டது.

20.09.06இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்தித்துப் பேசினார்..

***ஒக்டோபர் :***

12.10.06.இல் புதிய பொலிஸ்மா அதிபராக விக்ரர் பெரேரா நியமிக்கப்பட்டார்.

16.10.06இல் ஹபரணை திகஹன்பத்தஹா என்ற இடத்தில் கடற் படையினரை ஏற்றி வந்த வாகனத் தொடரணி மீது புலிகள் நடாத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் 98 கடற்படையினர் கொல்லப் பட்டதுடன் 120 பேர் வரை காயம் அடைந்தனர்.

17.10.06.இல் வன்னியிலுள்ள கொக்காவில்லில் அமைந்துள்ள புலிகளின் வானொலி நிலையம் அரச வான்படையினரால் தாக்கி அழிக்கப் பட்டது.

18.10.06இல் காலி நாவல கடற்படைத் தளம் மீது புலிகள் மேற் கொண்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது.

23.10.06.இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுவேலைத்திட்டத்தின் அடிப்படையில் இணைந்து செயற்படு வதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

28,29.10.06இல் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஜெனிவாவில் 2ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

***நவம்பர் :***

10.11.06.இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் நடராஜா ரவிராஜ் நாரஹேன்பிட்டியில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்டார்.

16.11.06இல் புதிய அரசாங்கத்தின் 2007ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

25.11.06.இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி பயணமானார்.

27.11.06.இல் உடப்புக் கடற்பரப்பில் ஆயுதங்களுடன் சென்ற புலிக ளின் றோலர் படகு கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது.

28.11.06.இல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியைப் புதுடில்லியில் சந்தித்தார்.

***டிசம்பர் :***

01.12.06இல் கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ மீது புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் அவர் மயிரிழையில் தப்பினார்.

13.12.06.இல் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு வாகரைப் பகுதியை நோக்கி இராணுவத்தினர் பாரிய படை நகர்வொன்றை ஆரம்பித்தனர்.

15.12.06இல் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் காலமானார்.

# ஹோமர் (கி.மு. 8ஆம் நூற்றாண்டு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

இதற்கு மாறாக ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும், கவிதைகளையும் பலர் வாசிக்கின்றனர். அவருடைய நாடகங்களும் பலமுறை நடிக்கப் பெறுகின்றன. மக்களும் திரளாக அவற்றைப் பார்க்கின்றனர்.

ஹோமர் கவிதைகளிலிருந்தும் மேற்கோள் பரவலாக எடுத்துக் கூறப்படுவதில்லை. பார்ட்லெட்டின் நூலில் ஹோமரின் மேற்கோள் இடம் பெற்றிருப்பினும், அன்றாட உரையாடலில் அவை இடம் பெறுவதில்லை. மாறாக ஷேக்ஸ்பியரையும், பெஞ்சமின் பிராங்களின், உமர்கையாம் போன்ற எழுத்தாளரையும் குறிப்பிடலாம். பலமுறை கூறப்படும், 'சேமித்த காசு ஈட்டிய காசைப் போன்றது' எனும் மேற்கோள் தனிமனிதனின் செயலையும் அரசியல் நோக்குகளையும், முடிவுகளையுமே பாதிக்கக்கூடியது. இவ்வாறு பரவலாக எடுத்தாளப்படும் மேற்கோள் ஹோமரின் கவிதைகளில் இல்லை.

ஹோமரின் பெயரை ஏன் இப்பட்டியலில் சேர்க்கவேண்டும் எனும் கேள்வி எழலாம். முதலாவது, கடந்த பல நூற்றாண்டுகளாக ஹோமரின் கவிதைகளைப் பெருந் திரளானோர் கேட்டிருக்கின்றனர் அல்லது படித்திருக்கின்றனர். பண்டைய உலகில் ஹோமரின் கவிதைகள் இன்றிருப்பதைவிடப் புகழ்பெற்றிருந்தன. கிரேக்க நாட்டில் அவருடைய படைப்புகளைப் பொது மக்கள் அறிந்திருந்தனர். அவை சமய, அறநெறி நோக்குகளை நீண்டகாலமாகப் பாதித்து வந்தன. ஒடிசி, இலியட் ஆகிய இலக்கியங்களை இலக்கிய அறிஞர்கள் மட்டுமின்றி, படைத்துறை, அரசியல் தலைவர்களும் நன்கு அறிந்திருந்தனர். பல பண்டைய ரோமானியத் தலைவர்கள் ஹோமர் கவிதைகளிலிருந்தும் மேற்கோள் காட்டினர். மகா அலெக்சாந்தர் தம் படையெடுப்புகளின் போது இலியட்டை எடுத்துச் சொல்வாராம். இன்றும் சிலர் மிகுதியாக விரும்பும் கவிஞராக ஹோமர் இருக்கின்றார். நம்மில் பலர் அவருடைய படைப்புகளை (ஓரளவாவது) பள்ளியில் படித்திருக்கிறோம்.

இலக்கியத்தில் ஹோமர் ஏற்படுத்திய விளைவுகள் இதைவிட முக்கியமானவை. எல்லாப் பண்டைய கவிஞரிடமும் நாடக ஆசிரியரிடமும் ஹோமரின் விளைவுகளைக் காணலாம். சோபோக்கிளிஸ் யூரிப்பிடிஸ், அரிஸ்டோட்டில் போன்றோர் ஹோமரின் மரபில் திளைத்தவர்கள். அவர்கள் அனைவரும் இலக்கிய சிறப்பு பற்றிய கருத்துக்களை அவரிடமிருந்தே பெற்றனர்.


பண்டைய ரோமானிய எழுத்தாளரையும் ஹோமர் பெரிதும் கவர்ந்தார். அவர்கள் அனைவரும் ஹோமரின் கவிதையையே சிறப்பின் அளவுகோலாகக் கொண்டனர். ரோமானிய எழுத்தாளருள் மிகச் சிறந்தவராகக் கருதப்படும் வெர்ஜில் தமது 'ஈனிட்' எனும் அரும் படைப்பை ஹோமரின் இலியட், ஒடிசி போலவே அமைத்தார்.

தற்காலத்திலும்கூட, சிறந்த எழுத்தாளர் எல்லோரையும் ஹோமர் கவர்ந்துள்ளார் அல்லது அவரால் ஈர்க்கப்பெற்ற சோபோக்கிளிஸ் அல்லது வெர்ஜில் போன்றோர் கவர்ந்துள்ளனர். வரலாற்றில் வேறு எந்த எழுத்தாளரும் இவ்வளவு பரவலான, நீண்டகாலச் செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை.

இறுதியில் கூறிய குறிப்பு முக்கியமானது. கடந்த ஒரு நூற்றாண்டாக ஹோமரைவிட அதிகச் செல்வாக்கை டால்ஸ்டாய் பெற்றிருக்கக்கூடும். மேலும், ஹோமரைவிட டால்ஸ்டாய் அதற்கு முன் 26 நூற்றாண்டுகளாக எவ்வகையான செல்வாக்கையும் பெறவில்லை. ஆனால் ஹோமரின் செல்வாக்கு தொடர்ந்து 2700 ஆண்டுகளாக நிலைபெற்று வந்துள்ளது. அது மிக நீண்ட காலமாகும். பல இலக்கியப் படைப்பாளர்கள் அல்லது மனிதனின் முயற்சியில் எத்துறையைச் சேர்ந்தவர்களும் அத்தகைய நிலைக்கு உயர இயலாதெனலாம்.

***(அடுத்த வாரம் வில்லியம் ஹார்வி வியக்க வைப்பார்)***

## உலகை வியக்க வைத்தவர்கள்



**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

உவர் தம்பி திரையனைத் தொடர்பு கொண்டு நீண்ட நாட்களாகுது எண்டிட்டு அவரோடை கதைக்கலாமெண்டால், அவர் தொடர்புல வரக் கொஞ்சம் பின்னடிச்சுப்போட்டுத் தான் கதைச்சவர். என்ன கதைச்சனாங்கள் எண்டு கேளுங்கோவன்.

"ஹலோ தம்பி திரையனோடை கொஞ்சம் கதைக்கலாமே?"

"நீங்கள் அவருக்குத் தமையனோ?"

"ஓமோம் தம்பி...அவர் எனக்குத் தம்பி மாதிரி"

"தம்பி மாதிரியெண்டால் விளங்கயில்லையே"

"அது விளங்காது தம்பி. ஒரு மரியாதைக்குத்தான்"

"விளங்குமெண்டு சொல்லுறீங்களோ?"

"ஓமோம்...தம்பி நல்லா கதைக்கிறீர். உம்முடைய பேரென்ன தம்பி?"

"நான் சொல்லுவன். முதலில நீங்களெல்லோ சொல்ல வேணும்"

"அதுவும் சரிதான் தம்பி... என்ர பேர் கா.பூ."

"அடாடா! அதுதானே பார்த்தன். என்னடா அண்ண, தம்பி எண்டு பாசம் பொங்கி வழியுதெண்டு."

"ஏன் தம்பி ஏதும் பிழையாக் கதைச்சுப்போட்டனே?"

"சா...சா... நீங்கள் சரியாத்தானே எப்பவும் கதைப்பியள்."

"தேங்க்ஸ் தம்பி, இவரோடை கதைக்கலாமோ...?"

"கொஞ்சம் தொடர்பில இருங்கோ."

"யார் கா.பூ. அண்ண? கொஞ்சம் பிஸியாக இருக்கிறன்."

"நீங்கள் பிஸியாகத்தான் இருப்பியள்... பின்ன என்ன வெட்டியா இருப்பியள் கதைக்கலாமெண்டே எடுத்தனான்."

"என்ன ஒண்டும் விளங்கயில்லையே"

"விளங்கயில்லையோ?" அது நல்லதாப் போச்சு...

"சரி தம்பி, ரெண்டே ரெண்டு கேள்வி கேட்பம் எண்டுதான் எடுத்தனான்... என்ன உங்களோடை தொடர்பு கொண்டனான். முடியவில்லை எண்டு சொல்லிப்போட்டு விடலாம். பிறகு அந்தச் செய்தியை எரிச்சல் பிடிச்ச யாராச்சும் எடுத்து கண், மூக்கு வச்சு தாறுமாறா எழுதிப்போடுவான். அதுதான் எடுத்தனான்."

"என்ன விஷயமண்ண... சொல்லுங்கோவன்"

"வாகரையில உங்கட கட்டுப்பாட்டு நிர்வாகம் இப்ப எந்தளவில இருக்கு எண்டதைத் தெரிஞ்சுகொள்ள சர்வதேச சமூகம் பெரும் அக்கறையாக இருக்குது?"

"வாகரை இப்பவும் எங்கட முழுக்கட்டுப்பாட்டிலதான் இருக்குது. அங்க எங்கட போராளிகள் நீதி நிர்வாகங்களைச் செய்து கொண்டிருக்கினம். மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் போக விரும்பாமல் எங்களது பாதுகாப்பிலையே இருக்க விரும்புகிறார்கள். படைத்தரப்பு எங்கள் மக்கள் மீது எறிகணை வீச்சை தொடர்ந்து நடத்துகிறது. நாங்களும் பதிலடி கொடுத்து வருகின்றோம். என்றாலும் எங்களது மக்கள் முழுப் பாதுகாப்போடை இருக்கினம். அவர்களுக்கான உணவை இலங்கை இராணுவத்தார் தொடர்ந்து தடுத்து வருகினம்.

வாகரையில் இருந்து மக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதாகக் கூறுவது அப்பட்டமான பொய்... ஒரு சில மக்கள் வைத்திய வசதிகளுக்காகவும், உறவினர்களைப் பார்க்கவும் - அதாவது பண்டிகைக் காலம் என்பதால் பயணங்களை மேற்கொள்கிறார்கள். அவற்றை அரச தரப்பு இடப்பெயர்வு என்று பரப்புரை செய்கிறது. அது முற்றிலும் தவறானது.

"அப்ப வாகரையில இருந்து மக்கள் விருந்து சாப்பிடத்தான் வெளியால வருகினம்."

"அதில என்ன சந்தேகம்... நாங்கள் மக்களை கவசமாக வச்சிருக்கிறம் எண்டினம். அப்புடியெண்டால் படைத்தரப்பும் மக்களுக்குள் முகாம்களை அமைத்துக் கொண்டு தானே இருக்கினம். சரி... மக்கள் இடம்பெயர்ந்துதான் வருகினம் எண்டால், இவ்வளவு தொகையான மக்களை நாங்கள் தடுக்கவில்லை தானே?"

"அவர்கள் உங்களைக் காணவில்லை என்கின்றனரே."

"அதுவும் பொய். இவ்வளவு நாளும் நாங்கள் மக்களோடுதானே இருந்தனாங்கள். இப்ப கொஞ்சம் தந்திரோபாயமாகப் பின்வாங்கி இருக்கிறம். அதுக்காக எங்களைக் காணவில்லை ஓடி விட்டோம் என்று மக்கள் சொல்வது தவறாகும். இப்படி எதையாவது சொல்வார்கள் என்பதும்தான் நாங்கள் அவர்களைத் தடுத்து வைக்கக் காரணம். சரி, இந்தத் தடவை தப்பிவிட்டார்கள். அடுத்த தடவை பார்த்துக் கொல்வோம்."

"என்ன பார்த்துக் கொல்வீர்களா?"

"இல்லை... இல்லை. பார்த்துக் கொள்வோம் எண்டதுதான் அப்படி கொல்வோம் என்று வந்துவிட்டது."

"சரி, இப்போதைக்கு தந்திரோபாயமாக எந்தளவுக்குப் பின்வாங்கியிருக்கிறியள்?"

"அதைப் பின்வாங்கல் என்று கூறுவது தவறு என்று நினைக்கிறேன். சரியாகச் சொல்வதானால் எங்களது படைகளையும், கனரக ஆயுதங்களையும் தந்திரோபாயமாகப் பின் நகர்த்தியுள்ளோம் என்பது தான் சரியானதாக இருக்கும். இவ்வாறு அநேகமான துருப்புக்களை கொக்கட்டிச்சோலை மற்றும் கரடியனாறு பகுதிகளை நோக்கி நகர்த்தியுள்ளோம்."

"பின் நகர்த்துகை இன்னும் எதுவரை தொடரும் என்று சொல்லமுடியுமா?"

"அதை இப்போதைக்குச் சொல்ல முடியாது. அது எங்களது படைகளின் தாக்குதல் நிலையையும், சிங்களப் படைகளின் முன்னேற்றத்தையும் பொறுத்து நீடிக்கலாம்... அது ஒரு பக்கமிருக்கட்டும், இந்தக் கேள்விக்குள்ளிருந்து வெளியேறுவதாகத் தெரியவில்லையே...உங்களுடைய அடுத்த கேள்வி என்ன?..."

"முதல் கேள்விக்கே நல்லாப் பதில் சொல்லி அசத்தீட்டீங்க. இரண்டாவது கேள்வியை இன்னொரு நாளைக்குக் கேட்பமே... பாய்."

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(28.12.2006 தொடங்கி 03.01.2007 வரை)**

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

துலாம் - சூரியன், புதன், செவ்வாய், வெள்ளி. விருச்சிகம் - வியாழன். கும்பம் - இராகு. சிங்கம் - சனி (வக்கரகம்) கேது.
சந்திரன் கும்பம், மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மேன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும், இனசன மகிழ்ச்சி, குடும்ப சுகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், காரிய நஷ்டம், வீண் குறை கேட்டல், பெரியோர் பகை, எதிர்பாரா செலவு, குடும்பக் கஷ்டம், சுபகாரிய நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம்,ஆயிலியம்.) தொழில் மாற்றம், மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், செலவு மிகுதி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் கலக்கம், மனககுறையதிகம், பெரியோர் உதவி, பணக் கஷ்டம், அந்நியர் சகவாசம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி நன்மை, உயர் கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, வீண் குறைகேட்டல், வெளியிடப் பயணம், தேகசுகக் குறைவு, குடும்ப சுகம், பிள்ளைகளால் உதவி, உத்தியோக நன்மை, மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி, பண வரவு, பெரியோர் சகாயம், உறவினர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, புதிய இடமாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், காரியத் தடை, பணச் செலவு, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், குடும்பப் பொறுப்பு, உறவினர் நன்மை, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07.**

**தனு** :(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பகை, வீண் குறை கேட்டல், பெரியோர் உதவி, மனப் பயம், இனசன விரோதம், குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், பதவி சிக்கல், மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை, காரியானுகூலம், மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, இனசன நன்மை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மகிழ்ச்சி, பதவி உயர்ச்சி, மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மாற்றம், பெரியோர் உதவி, மனக் கலக்கம், தூர இடப் பயணம், தேகசுகக் குறைவு, கடன் பயம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, அந்நியர் சகவாசம், பண வரவு, குடும்ப மகிழ்ச்சி, மனக்குறை நீங்கும், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

# «உறுதியான அவா



கடந்த 45 ஆண்டுகளாக நாம் எமது தேசமக்களின் அவாவினை பூர்த்திசெய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். நாடு முழுவதும் பரவியுள்ள எமது 625 கிளைகள் மற்றும், 9.3 மில்லியன்களுக்கும் அதிகமான கணக்கு வைப்புகள் மூலம் நாட்டின் மிகப் பெரிய வங்கி வலைப்பின்னலைக் கொண்டுள்ளதுடன், சர்வதேச வங்கிச் சேவையினை நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டு சென்ற முன்னோடிகள் நாமே. **உண்மையான மக்களின் வங்கியாக இருக்கும்** பெருமையுடன் அன்று போல் இன்றும், என்றும் உங்கள் அனைவரினதும் கண்களினால் ஒளிரும் அவாக்களை நிறைவு செய்வதே எமது குறிக்கோளாகும்.

Power of People — Banking & Financial Service Brand of the Year 2006 — SLIM - ACNielsen

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

www.peoplesbank.lk

TRIAD 17261